Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஆக. 27-செப். 02, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 371

## தேர்தல் தயாரிப்பில் தமிழ்க் கட்சிகள்?

## அரசியல் பிழைப்புக்கு அடுத்த வேடம்!



# முரசம்

## பொறுப்பை ஏற்கவேண்டும்!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

தேர்தல் காய்ச்சல்
படரத் தொடங்கிவிட்டது.
அரசியல் கட்சிகள்
வாக்குகளை வளைத்துக்கொள்ளும்
அரசியல் வியூகங்களை
வகுக்க ஆரம்பித்து விட்டன.

அடுத்து வரும்
பாராளுமன்றத்தில்தான்
இனப்பிரச்சனையின் தீர்வுக்கான
எதிர்காலமும் தங்கியுள்ளது.
இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு
இத்தனை பெரிய
தடங்கல்கள் யாவற்றையும்
உருவாக்கி வைத்ததும்
எமது பாராளுமன்றமே.

அடுத்தடுத்து வந்த
பாராளுமன்றங்கள்
ஒன்றன்மேல் ஒன்றாக
அடுக்கி வைத்த
சட்டங்களும் ஒழுங்குகளும்
இனப்பிரச்சனையின் தீர்வுக்கான
கதவுகள் எதையும்
திறக்க முடியாத பூட்டுக்களாக
இறுக மூடியுள்ளன.

அவர்களே போட்ட
இந்தப் பூட்டுக்களை
அவர்களே திறக்க முடியாது
திண்டாடும் நிலையை
இப்போது கண்டோம்.
இலங்கை சுதந்திரம் பெற்றபின்
1972ல் சுதந்திரக் கட்சியாலும்
1978ல் ஐ.தே.க. ஆட்சியிலுமாக
இரு பிரதான கட்சிகளின்
அரசாங்கக் காலத்திலும்
இருதடவை மேற்கொள்ளப்பட்ட
அரசியல் சட்ட மாற்றங்களில்
சிறுபான்மையினருக்கு
பாதகங்கள் விளைந்தனவேயன்றி
தீர்வுகள் வகுக்கப்படவில்லை.
1987ல் இந்தியத் தலையீட்டால்
அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட
13ம் திருத்தமான
மாகாணசபைச் சட்டமூலமும்
இந்தப் பிரச்சனையைத்
தீர்க்கத் தவறிவிட்டது.

ஒற்றை ஆட்சியின்கீழ்
தீர்க்க முடியாததாகிவிட்ட
இந்தப் பிரச்சனைக்கு
புதியதோர் அரசியல் திட்டம்
தேவைப் படுகிறது.

அப்படியான ஒன்றை
உருவாக்குவதாகக் கூறி
சந்திரிக்கா தயாரித்த
புதிய வரைபும்
திருப்தியளிக்குமா என்ற
சந்தேகங்களுக்கு மத்தியில்
நிறைவேற்ற முயன்று
முறியடிக்கப் பட்டுவிட்டது.

இனப்பிரச்சனையின் தீர்வு
சிறுபான்மை மக்களுக்கு
மட்டுமன்றி
பெரும்பான்மை மக்களுக்கும்
அவசியமாக மாறிவிட்டுள்ள
நிலைமை இது.

ஏனெனில்,
இனப்பிரச்சனையின்
கோர விளைவான
யுத்தத்தின் கையில்
நாடு சிக்கியுள்ளது.

இந்த யுத்தமோ
பெருந்தொகையான
படைவீரர்களையும் போராளிகளையும்
மட்டுமன்றி,
பொதுமக்களையும்
பலியெடுத்து வருகிறது.

அத்தோடு
பாரிய பொருளாதார
அழிவுகளுக்குள்ளாக்கி
மக்களைப் பீதி நிறைந்த-
நிச்சயமில்லாத வாழ்க்கைக்குத்
தள்ளியுள்ளது.

யுத்தமா சமாதானமாவென்று
முன்னர் சவால்விட்ட
இலங்கை அரசாங்கம்
இன்று,
புலியின் முதுகில்
சவாரிவிட்ட கதையாக
இறங்கவும் முடியாமல்
தொடரவும் முடியாமல்
தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்
பொருத்தமானதொரு
அரசியல் தீர்வொன்றைக்
கண்டாலன்றி
இந்த யுத்தத்தை
நிறுத்த முடியாது.

எனவே
தேர்தலில் குதிக்கமுனையும்
அரசியல் கட்சிகள்
இனப் பிரச்சனையையும்
தமது அரசியற் பிழைப்புக்கான
வியாபாரமாக்காது.
இந்தத் தீர்வு முயற்சியை
அர்த்தமுடையதாகச் செய்யும்
மாற்றங்களை ஏற்படுத்தி
எதிர்வரும்
பாராளுமன்றத்திலாவது
இதற்குத் தீர்வுகாணும்
வழிவகைகளைச் செய்யும்
பொறுப்பை ஏற்கவேண்டும்.

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## சிவதரிசனம்

தருமமே செய்ய விரும்பாத கிழவி அவள். இறக்கும் தருவாயில் யாராவது குடிதண்ணீர் கேட்டாலும் தர மறுப்பவள். வயதான காலத்தில் தனது சொந்த உபயோகத்திற்காக, உரலில் நெல்லை உலக்கையால் குத்திக் கொண்டிருந்தாள். அப்போது "அம்மா பிச்சை போடுங்கள்!" என்ற குரல் கேட்டது. கிழவி முதலில் வாயாலே "போ, போ!" என்று விரட்டினாள். வந்த பிச்சைக்காரன் போகவில்லை. தன் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தியபடி கேட்டுக் கொண்டிருந்தான். கோபமடைந்த கிழவி, உலக்கையைத் தூக்கி "போ போ!" என்று விரட்டினாள். வேறு வழியில்லாமல் பிச்சைக்காரன் நகர்ந்தான்.

சிறிது காலம் கழித்து, கிழவி மரணமடைந்தாள். எமதூதர்கள் இழுத்துச் சென்றனர். எமதர்மன் சித்ரகுப்தனிடம், "ஏதாவது தர்மம் செய்திருக்கின்றாளா?" என்று கேட்டான். அதற்கு சித்ரகுப்தன் தன் பேரேட்டைப் புரட்டியபடி..... "ம்... ஏதுவுமில்லை... ஆ...! ஒரு சமயம் பிச்சைக்காரனை உலக்கையால் துரத்தும் போது, அதில் ஒட்டியிருந்த ஒரு மணி அரிசி பிச்சைப்பாத்திரத்தில் விழுந்தது!" என்றான் "ஆ! சரி ஒரு கண்நேரம் சிவதரிசனம் கிடைக்கட்டும்" என்றான் எமதர்மன்.

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.



## கேடுவிளைவிக்கும் கோள்

கோள் சொல்வது அல்லாஹ்வின் கோபத்தை உண்டுபண்ணச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒருவருக்கொருவர் கோள் சொல்லி சண்டைகளையும் சச்சரவுகளையும் ஏற்படுத்தி அதில் ஒருவித இன்பம் காணத் துடிக்கும் 'கோள் மூட்டிகள்' என மற்றவர்களால் வர்ணிக்கப்படும் இவர்கள் பின்வரும் நபிமொழிகளை அறிந்த பின்பாவது கோள் சொல்லும் கோண புத்தியை கைவிட முயற்சிக்க வேண்டும்.

"என் உம்மத்தில் மிகக் கெட்டவன் எவனென்றால் கோள் மூட்டி முஸ்லிம்களிடையே உறவை அறுப்பவனே ஆவான். மேலும் மண்ணறையை விட்டும் மீட்சி பெறமாட்டான்."

"உங்களில் அல்லாஹ்வின் சினத்திற்குரியவன் கோள் சொல்லித் திரிபவனே. உங்களில் தீயவர், ஒருவரின் குறையைக் கூறித்திரிபவனும், நண்பர்களுக்கிடையே கோள் மூட்டி குழப்பத்தை ஏற்படுத்துகின்றவரேயாவார்."

"கோள் மூட்டியின் செயல் ஷைத்தானின் செயலைவிட மிகத்தீங்கிழைக்கக் கூடியதாகும்; ஏனென்றால் ஷைத்தான் உள்ளங்களில் ஊசாட்டங்களை மட்டுமே உண்டாக்குவான்; கோள் சொல்பவனோ முகத்திற்கு முகம் மாறி மாறி பேசுவான்" (அல்ஹதீஸ்)

நன்றி; "இஸ்லாமும் நற்போதனைகளும்"

வை.எம்.தாஹிர்கரீம்-கல்முனை-06.

## பழிவாங்குதல்

சிலர் கடவுளுக்குப் பிரியமற்ற, தன்னுடைய நோக்கத்துக்கு திட்டத்துக்கு, சுய நலத்துக்கு ஒத்துழைக்காமல், தவறான காரியங்களுக்கு உடன் படாமல், வாழுகின்ற கடவுளின் பிள்ளைகள் மேல் வேண்டுமென்றே வீண்பழிசுமத்தி, பொய்யான குற்றங்களை சொல்லி; தூற்றி திரிவதும் பழிவாங்க என்னென்ன கெட்ட காரியங்களை செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதும், ஆத்திரத்தின் மிகுதியால் அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடுவதுமான மனிதர்களைக் காணுகின்றோம்.

இவர்கள் தங்களை நீதிமான்களாக எண்ணிக் கொண்டு, தான் செய்வதும் சொல்வதும் உண்மையென்று பலரை நம்ப வைக்க, தங்களுடைய நேரத்தையும் காலத்தையும் வீணாக செலவழித்து பழிவாங்கப் படாத பாடு படுகின்றார்கள்.

ஆனால், கடவுள் சொல்கிறார்.

"பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்!" ரோமர் (12:19)

கடவுள் செய்ய வேண்டியதை மனிதன் செய்ய முற்பட்டு கடவுளின் கோபாக்கினைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறான்.

எனவே கடவுளின் காரியத்தில் நாம் கைபோடாமல் நமக்குத் தந்த பொறுப்புக்களை உணர்ந்து ஆண்டவர் இயேசுவுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன்-துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.371



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.09.2000

கவிதைப் போட்டி இல.371
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## கவிதைப் போட்டி இல.368

### பரிசுக்குரிய கவிதை

### அன்றைய அத்தியாயமா...?

இது! அநாதை பட்டியலுக்கு
அஸ்திவாரமிட்ட சிறுவர்களினதா?
இல்லை... அகதி வாழ்வைத்
துய்த்து வெற்றி கண்ட,
அறிஞர்களின் அன்றைய
அத்தியாயமா....?

ஏ.எச்.முஹமட் அனீத்-
புதிய காத்தான்குடி 03.

### பறிப்பதற்கல்ல

சமாதான தீவின்
தாலாட்டும் கரங்கள்
அணைப்பதற்காகவே
இந்தப் பூக்கள் மலர்ந்தன
யுத்த பூமி பறிப்பதற்கல்ல!

தெ.லோஜனா-கொழும்பு 15.

### மன்னர்கள்!

ஆளப் பிறந்த
வருங்கால
மன்னர்களே!
நீங்களாவது
கொண்டுவாருங்கள்
சமாதானத்தை!

மு.மாதவி-மன்னார்.

### இலட்சியம்

வாழத்தான் வந்தோம் வையகத்தில்
காலத்தின் கனவாய் அல்ல;
எதிர்காலத்தின் இலட்சியமாய்!

சசிகலா செல்வராஜா-வத்தளை.

### தேடப்படும்....!

கடும்போர் தொடங்கிய பின்
காணாமற் போனோர் பட்டியலில்
கண்டெடுக்கப்பட்டோரிவராவர்;
மீதிப்பேர் யாவரெனப் பட்டியலிட்டு
மீட்டளித் தாலின்னும் தேடப்படும்...!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.



### புது றோஜாக்கள்

யுத்தம் தொடர்ந்து,
உயிர்ப் பலிகள் எடுத்தாலும்,
நித்தம் புது றோஜாக்கள்
பிறக்கவே செய்யும்....

ஜி.சோமசுந்தரம்-கல்லடி

### இது...எது...?

இவை தப்பாகப் பிறந்த
தமிழ்க் குழந்தைகளா?
இல்லை
யுத்தத்தால் பெற்றவரை இழந்த
அனாதைக் குழந்தைகளா?

ஜே.நிழ்வான்-மூதூர் 05.

### செல்வத்திற் சிகரமே

கண்ணே மணியே கற்கண்டே!
கற்பகத்தருவே கடல் முத்தே!
செண்பக மலரே செவ்விதழே!
செல்வத்திற் சிகரமே சிரிப்பதென்ன?

எஸ்.ஐ.எம்.சப்றாஜ்-மூதூர் 07.

### அழி(றி)முகங்கள்

இக்கேடு கெட்ட புவியில்
'ஆக்கம்' தான் கடினம்.!
'அழிப்பது' சுலபம்!!!

கலைநேசன் ஜவாத்-புத்தளம்.

### நம்பி....

நாங்கள் நம்பியிருக்க
சொந்த பந்தமென்று
எதுவுமில்லை-ஆனால்
எங்களை நம்பி
இந்த நாடிருக்குது.

அ.யாழினி-மட்டக்களப்பு.

### காணாமல் போனோர்

உங்கள் குழந்தையும்
இதில் இருக்கிறதா...?
பாருங்கள்!

எஸ்.பி.கணேஷ்-தாண்டியடி.

### வேட்பாளர்கள்

தேர்தல் வருவதனால்
நாம் தெரிந்து விட்டோமா
அவர்கள் கண்களுக்கும்!

மண்டூ ரன்-மட்டக்களப்பு.

# வாசக[ர்]சாலை

என் இனிய முரசே

ஒவ்வொரு வாரமும் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சுவையிலும் சுவையானவை. அதிலும் 'தேன் கிண்ணம்', 'அரசியல் அலசல்', 'தொடர் கதைகள்' என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. உன் சேவை தொடர, உன் சேவை வளர்ந்திட என் வாழ்த்துக்கள்.

த.கிருபானந்தி-கோடைமேடு.

தித்திக்கும் பல செய்திகளுடன் பல கோடித் தமிழ் பேசும் உள்ளங்களில் இடம் பிடித்துக் கொண்ட என் அன்பின் தினமுரசே! உன்னைப்பற்றி சொல்லப் போனால் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. இப்படியான அம்சங்களை தொடர்ந்து என் முரசு சுமந்து வர, எனது பல கோடி நல்வாழ்த்துக்கள்! தினமுரசே வாழ்க, வளர்க, வளமுடன்!

மா.கோபிகிருஷ்ணன்-கொழும்பு-13.

தமிழரை தலைகாக்கும் தலை நிமிர்ந்த தினமுரசே!

உன் பணி உலகெங்கும் பிரகாசிக்க எனது வாழ்த்துக்கள். உனது அனைத்து அம்சங்களும் சூப்பரோ சூப்பர். அதிலும் 'கண்ணதாசனின் அந்தரங்க தொடர்'..., 'இலக்கிய நயம்', 'சிந்தியா கேள்வி பதில்' அனைத்தும் என்னை ஆனந்தக் கடலில் மூழ்க வைக்கின்றன. அத்தோடு தமிழ் யுவதி ஒருவரை கடத்தப்பட்ட செயல் என்னைப் போன்ற அனைத்து யுவதிகளுக்கும் பெரும் வேதனையை தந்தது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு!

'கடுகு சிறிதானாலும் காரம் பெரிது' என்பதற்கு உன் பணியும் நீயுமே சான்றாகுவாய்! உன் பணி உலகெங்கும் திகழ... வாழ்த்தும்,

ப.தேவி-நியூ பிறஸ்டன்.

இன்று வெளிநாடு உள்நாடுகளில் பிரபல்யமாகியிருக்கும், அதேவேளை பல நெஞ்சங்களைக் கொள்ளைக்கொண்ட என் அபிமான தினமுரசே!

நீ சுமந்து கொண்டு வரும் இருபது பக்கங்களில் ஒன்றையொன்று குறைகூறமுடியாது. இளம்கவிஞர்களை ஊக்குவிக்கும் விதமாக 'கவிதைப்போட்டி', 'தேன் கிண்ணம்' சிறுவர்களுக்காக வர்ணம் தீட்டும் போட்டி சுப்பர். இன்றுபோல் என்றும் இதே சுவையுடன் எம் கரங்களில் மலரவேண்டும் என வாழ்த்துக்கூறி விடைபெறுவது.

கிஷ்ஜனா நந்தகுமார்-ஆரையம்பதி-02.

என் அன்பின் இனிய முரசே!

உன் நிகழ்வுகளை தவறவிடாமல் வாசிக்கப் பேராவலாக காத்துக் கிடப்பவள் நான். நீ சுமந்து வரும் அனைத்து உண்மையான நிகழ்வுகளும் அருமையிலும் அருமை. உனது சேவை மேலும் தொடர எனது நல் வாழ்த்துக்கள்.

எம்.ஆர்.றெஜி-வவுனியா.

அன்பின் முரசே!

வாரம் ஒரு முறை வலம் வரும் இனிய முரசே! முரசில் ஒவ்வொரு வாரமும் வெளியாகும் 'செய்திச் சிதறல்', 'அதிரடி அய்யாத்துரை', 'அண்டை மண்டலத்தில்', 'மேற்கு நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்படுவோர் இங்கு படும் அவலங்கள்', மற்றும் சகல பாகங்களிலும் வெளியாகும் அறிவூட்டத்தக்க தகவல்கள் இனிமையிலும் இனிமை. கோடி மக்கள் விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் பார்க்கும் முரசே! உன் சேவை மேலும் வளர்க! வளர்க! என்று வாழத்துகிறோம்.

தி.இராசகரன்-வவுனியா.



அன்பு முரசே...!

தினமுரசு என்ற உன் பெயருக்கேற்றாற் போல் நீ தினமும் வெளிவரக்கூடாதா? என்று ஏங்கும் இதயங்களில் நானும் ஒருவன். எம் போன்ற இளைஞர்களின் கற்பனைக்குதிரையை தட்டி விடுகின்ற உன் கவிதைப் போட்டிக்கு நிகராக எந்தப் போட்டியுமில்லை.

மேலும் அனைத்து அம்சங்களும் தரமானவையே. இன்னும், உனது சேவை சிகரத்தை தொட வேண்டும் என வாழ்த்தும் உன் அபிமான வாசகன்.

ஏ.எல்.எம்.நிசாத்-காத்தான்குடி-06.

தித்திக்கும் தினமுரசே!
இந்து சமுத்திரத்தின்,
முத்தென வர்ணிக்கும்
இலங்கை திரு நாட்டில்
சிப்பியில் இருந்து....
முத்தை எடுப்பது போல்
உன்னில் இருந்து....
பயன் பெறும்
விடயங்கள் அப்பப்பா!
சொல்லவா வேண்டும்
உனக்கே புரிந்திருக்கும்.
நான் செப்பும் செய்தி.
உன்னை விட்டு விலகிய
மூளைக்கு வேலை தரும்
குறுக்கெழுத்து போட்டியை
இந்த மிலேனியம் ஆண்டில்
ஒன்றிணைய வழி செய்துவிடு...
கவி வடிவில் என் வாழ்த்துக்கள்
தினமுரசுக்கே சமர்ப்பணம்.

எஸ்.எம்.அஹமட்-ஏறாவூர்.

என் அன்பிற்கினிய முரசே!
வாரம் ஒரு முறை பூத்திடுவாள்
வாழ்வை வளர்க்க வலம் வருவாய்
வானம் முழுதும் உள்ளவற்றை
வார இதழில் தந்திடுவாய்
வசந்தம் என்றும் தளராமல்
வளமாய் வாழ வாழ்த்துகிறேன்.

ஆர்.பவானி-எல்ல.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# சூடு பிடிக்கிறது பொதுத் தேர்தல்

## தமிழ்ப் பிரதேசங்களில் கட்சிகள் அமைக்கும் வியூகங்கள்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் யாவும் மிகச் சுறுசுறுப்பாக தங்கள் பணிகளை ஆரம்பித்துவிட்டன.

பொதுத் தேர்தல் என்றதும் பொது மக்கள் பெரும்பாலானோர் வீதிகளில் நடமாடுவதற்கே அஞ்சி நடுங்குவார்கள். எந்தத் திக்கிலிருந்து எத்தகைய அபாயம் தங்களை நோக்கிப் பாயுமோ என்ற பயப் பிராந்தி அவர்களை வாட்டவே செய்யும். கடந்த சில ஆண்டுகளாக இந்த நாட்டில் நடைபெற்ற மாகாண சபை, ஊள்ளூராட்சி சபை மற்றும் ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றுக்காக இடம்பெற்ற தேர்தல்களில் பலதரப்பட்ட வன்முறைகள் தலைவிரித்தாடின.

இத்தகைய வன்செயல்களில் அரசியற் கட்சிகள் மட்டுமல்ல, பாதாள உலகநாயகர்களும் இன்னும் பலதரப்பட்டோரும் ஈடுபட்டிருந்ததை நன்கு அவதானிக்க முடிந்தது. இதனால் நாட்டுக்கே பெரிய அவமானங்கள் ஏற்பட்டன என்பதை மறுக்க முடியாது.

இம் முறை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் எந்தவகையிலும் வன்முறைகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கக் கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திடசங்கற்பம் பூண்டிருப்பதாகத் தெரிகிறது. தேர்தல் களத்தில் குழப்பங்களைத் தூண்டுவோர், வன்முறைக்குத் தூபமிடுவோர் போன்ற தீய சக்திகளை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஜனாதிபதி கட்டளை இட்டிருக்கிறார்.

"இத்தகைய சட்டவிரோதச் செயலில் ஈடுபடுவோர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர், எத்தகைய செல்வாக்குப் பெற்றவர் என்பவற்றையெல்லாம் கணிக்காமல் அவர்களை பாரபட்சமற்ற முறையில் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்குமுள்ள தலையாய கடமையாகும்" என்று ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கட்டளையிட்டுள்ளார்.

### யாழ் குடா நாட்டில்.....

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பலரும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பொறுக்கி எடுப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, தனித்தே போட்டியிடுவதென தீர்மானமெடுத்திருப்பதாகத் தெரிகிறது. இருப்பினும் தேர்தலுக்கான பிரசார வியூகங்களை வடிவமைப்பதில் கட்சிகள் சரியான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க முடியாத நிலையிலுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது. விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்கள் இருப்பதனால் பொதுக் கூட்டம் கூடி, மேடைகளிலேறி கொள்கை விளக்கம் தருவதற்கு முடியாத நிலையே அங்கு தோன்றியுள்ளது. விடுதலைப் புலிகள் பொதுத் தேர்தலை முற்று முழுதாக எதிர்ப்பதனால் எந்தக் கட்சி வேட்பாளரையும் அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்றே கருதக் கூடியதாக இருக்கிறது.

வட பகுதியில் இத் தடவை ஆளுங்கட்சியான பொது ஜன முன்னணியும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தத்தமது வேட்பாளர்களை களத்தில் இறக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அறியக் கூடியதாக இருக்கிறது.

எவ்வாறாயினும் இம்முறைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அங்குள்ள சூழ்நிலைக்கேற்றவாறு வாக்காளர்களை அணுகி வாக்குச் சேகரிப்பதில் மிகவும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டியவர்களாகிறார்கள்.

### மட்டக்களப்பில்.....

மட்டக்களப்பைப் பொறுத்தவரை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கட்சியின் வேட்பாளர்களாக சில புது முகங்களையும் இணைக்க இருப்பதாகத் தெரிகிறது. இத்தகையவர்கள் தேர்தல்களத்தில் குதிப்பதில் புதியவர்களாக இருந்தபோதிலும் தமிழரசுக் கட்சி காலத்திலிருந்தே அரசியலில் ஈடுபட்டவர்கள் என்று தெரிகிறது. பொது ஜன முன்னணி ஏற்கனவே அக்கட்சியுடன் இணைந்திருந்த சிலருக்கு தேர்தலில் போட்டியிடவாய்ப்பளிக்கப் போவதாகத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி நீண்ட நெடுங்காலமாக அக்கட்சியுடன் இணைந்திருந்தவர்களை கைவிடாமல் இம்முறை அவர்களை வேட்பாளர்களாகச் சேர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்தி வருகிறது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி, இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் புலிகளின் ஆதரவுடன் வாக்குகளைச் சேகரிப்பதற்கு எடுத்த முயற்சியைப்போல் இம்முறையும் முயற்சிகள் மேற் கொள்ளப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இவ்விரு கட்சிகளிலும் கணிசமான முஸ்லிம்கள் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறுவார்கள் என்பது வெளிப்படை.

### அம்பாறை மாவட்டம்

அம்பாறை மாவட்ட பொதுத்தேர்தலில் போட்டியிட 06 கட்சிகள் தயாராகியுள்ளன.

பொதுஜன முன்னணி, ஐ.தே.கட்சி, ஸ்ரீல.மு.கா, பிரஜைகள் முன்னணி, சிஹல உறுமய, த.வி.கூட்டணி, ஈ.பி.டி.பி ஆகியவையே அக்கட்சிகள்.

ஐ.தே.கட்சியில் ஏழு முஸ்லிம்களும், இரண்டு சிங்களவர்களும், ஒரு தமிழரும் போட்டியிடவுள்ளனர்.

பொது ஜன முன்னணியில் ஐந்து சிங்களவர்களும் மூன்று முஸ்லிம்களும் (மு.கா), இரண்டு தமிழர்களும் போட்டியிடலாம்.

பிரஜைகள் முன்னணி, சிஹல உறுமய ஆகியவை போட்டியில் சோபிக்க இயலாத நிலை.

த.வி.கூட்டணி முதன் முதலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்து வேட்பாளர் பட்டியலையும் தயாரித்துள்ளது.

தமிழர் மகாசங்கத்தின் பொதுச்சின்ன முயற்சி பலனளிக்காத காரணத்தினால் ஈ.பி.டி.பியும் போட்டியில் குதிக்கவுள்ளது.

## கற்பிட்டியில் மீனவர்களுக்கான எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

கற்பிட்டி பிரதேசம் மீன்பிடி தொழிலுக்கு பிரசித்தமான இடமாகும். இப் பகுதியில் பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு காரணங்கள் கருதி தற்பொழுது மீன்பிடித் தொழிலாளர்களுக்கான எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவே வழங்கப்பட்டு வருகின்றது.

இது பற்றி தெரியவருவதாவது; மீனவர்கள் தமக்குத் தேவையான எரிபொட்களை பெற்றுக் கொள் வதற்காக கடற்படை பிரிவினரிடம் அதற்கான அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் எனவும் கடைகளுக்கு எரிபொருள் விற்பனைக்காக பெற்றுக் கொள்வதாயின் பொலிஸ் நிலையத்தில் அதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த அனுமதிப்பத்திரங்கள் காண்பித்தால் மாத்திரமே எரிபொருள் விற்பனை நிலையத்தில் எரிபொருட்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறான நடைமுறையின் கீழே தற்பொழுது கற்பிட்டியில் எரிபொருள் விற்பனை நடைபெற்று வருகின்றது.

## ஈழத் தமிழரின் ஒரு நூற்றாண்டு வரலாறு மைக்ரோ ஃபிலிமில் பாதுகாப்பு

திரு.திருமதி. குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களால் கடந்த 45 வருடங்களாகத் திரட்டப்பட்ட சேகரிப்புகள் நுண்படச் சுருள்களாக்கப்படுகின்றன. வருங்காலத் தலைமுறையினருக்காக, இலங்கையிலும், தமிழ் வழங்கும் நாடுகளிலும்.பேணிப் பாதுகாக்கப்படவுள்ள இப்படச்சுருள் தொகுப்புகளில் 1899ம் ஆண்டிலிருந்து 2000ஆண்டு வரையிலான ஆங்கில, தமிழ்ப் பத்திரிகை நறுக்கு மற்றும் Ceylon Patrion -(1864) ஈழகேசரி (1930) சுதந்திரன், Saturday Reveiew, திசை, சரிநிகர், தினமுரசு, Lanka Guardian, Sansani Commission Evidence, கேசரி, புதிய கண்ணோட்டம், புலம்பெயர் நாட்டு ஏடுகள், சஞ்சிகைகள், 8000க்கு மேற்பட்ட பல்துறைக் கட்டுரைகள், சிரித்திரன் காட்டூன்கள் (2000 வரை) உள்ளூர் சஞ்சிகைகள்-ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பணிக்கு உதவுவோருக்கு இலவசப் பிரதிகளைத் தரவும் விரும்புகிறோம்.

தொடர்பு கொள்க : குரும்பசிட்டி
இரா.கனகரத்தினம்.
128/8, Hettiyawatte Mulgampola, Kandy.
தொலைபேசி : 08.233547

## யாழ் நகரில் குறைகேள் செயலமர்வு

யாழ் மத்திய கல்லூரியில் இரண்டு நாள் குறைகேள் செயலமர்வு இடம் பெற்றது. இது ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பா.உ.மாகிய டக்ளஸ் தேவானந்தாவிடம் பொதுமக்கள் பலர் பல பிரச்சனைகளை முன்வைத்தனர். இப்பிரச்சனைகளை துரிதகதியில் தீர்க்க வேண்டும் என்ற நோக்கில் வட-கிழக்கு மாகாணம் யாழ் மாவட்ட அரச அலுவலகம் இணைந்து மக்கள் குறைகேள் செயலமர்வு ஒன்றினை நடாத்த ஏற்பாடாகியது.

இச் செயலமர்வின் போது 4000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு 834 பிரச்சனைகள் முன்வைத்தனர். அதில் உடனடியாக 254 பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. ஏனைய 580 பிரச்சனைகளுக்கும் மிகவும் துரிதகதியில் தீர்வுகாணப்படும். என்று யாழ்மாவட்ட முன்னாள் பா.உ.களும், வட-கிழக்கு மாகாணசெயலாளரும் யாழ் மாவட்ட அரசு அதிபரும் உறுதியளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பா.உ. தவராசா அவர்கள் பேசுகையில், "யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் தினமும் 500க்கு மேற்பட்டோர் வேலை வாய்ப்பு சம்பந்தமாக சென்று வருகின்றனர். எங்களால் முடிந்தவற்றை நாங்கள் செய்து வருகின்றோம். செய்யவும் காத்திருக்கின்றோம். இதற்கெல்லாம் மக்களாகிய உங்கள் சக்தியே தேவை. இந்த இக்கட்டான சூழ் நிலையில் கூட அரசிடம் பேரம் பேசி மக்களாகிய உங்கள் பிரச்சனையை ஓரளவுக்கேனும் தீர்த்து வந்துள்ளோம். நாங்கள் என்றும் மக்கள் பிரதிநிதிகள் அல்ல. மக்கள் சேவகர்களே" என்று கூறி முடித்தார்.

## மாணவனின் சிகிச்சைக்கு நிதிசேர்க்க 'நாடகம்'

மாணவன் க.உமாசங்கரின் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை நிதிக்காக திருக்கோணமலை மாவட்டப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் 'நாடகம்' என்ற நாடகம் 27.08.2000 அன்று இடம் பெறவிருக்கிறது.

உயர்தர மாணவர்களின் உதவியுடன் ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி மண்டபத்தில் இருகாட்சிகள் இடம் பெறவுள்ள நாடகம், சமகாலப் பிரச்சனையைக் கொண்டதாக அமையவுள்ளது என்று தெரிவித்த மாணவர்கள், இதன் மூலம் கிடைக்கும் ஒவ்வொரு சதமும் உமாசங்கரின் உயிர்காக்கப் பயன்படவுள்ளது என்றும் கூறினார்கள்.

## நிரந்தர நியமனம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் தற்காலிகமாக கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதனை பிரதேச சபை தலைவர் பூதன் குணசிங்கம் மற்றும் அப்பகுதிக்குப் பொறுப்பான ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ரவியும் மேற்கொண்டு வருகின்றார்கள். இது தொடர்பாக உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சகல விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பூதன் குணசிங்கம் தெரிவித்தார்.

## கிளிவெட்டிக்கு மீண்டும் மின்சாரம், தொலைபேசி வசதி

திருமலை மூதூர் பிரதேசத்திலுள்ள கிளிவெட்டி கிராமத்தின் தொலைபேசிகள், மின்சாரம் என்பன கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகச் செயலிழந்து போயிருந்தன.

இவ்விடயம் சம்பந்தமாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் திரு.டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு, அமைச்சர்களான மின்சக்தி எரிபொருள் துறைபாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்தரத்வத்தையையும், தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவையும் சந்தித்து கிளிவெட்டி பிரதேசத்தின் நிலையை எடுத்துக்கூறிய போது அமைச்சர் மின்சாரம், தொலைபேசி வசதிகள் மீண்டும் வழங்க உடன் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, கடந்த 15.08.2000 அன்று தொடக்கம் மீண்டும் மின்சாரம், தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## முடிச்சுமாறியை மடக்கிப்பிடித்த பஸ் நடத்துநர்

பயணி ஒருவரின் பணப்பையைத் திருடிய முடிச்சு மாறியுடன் தன்னுயிரையும் பொருட்படுத்தாது போராடி அந்தப் பணப்பையை மீட்டுக் கொடுத்திருக்கிறார் பஸ் நடத்துநர் ஒருவர். திருக்கோணமலையைச் சேர்ந்த அருணாசலம் பாலேந்திரன் என்ற பஸ் நடத்துநரே பயணிகள் மெச்சும் இக்காரியத்தைச் செய்திருக்கிறார்.

ஆகஸ்ட் முதலாந் திகதி காலை புறக்கோட்டை பஸ் நிலையத்தில் திருக்கோணமலை புறப்படுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸில் ஏறிய பெண்மணியின் பணப்பையை அவரறியாமல் எடுத்துக் கொண்ட முடிச்சு மாறி தப்பி ஓட முயன்ற போது பாலேந்திரன் மடக்கிப்பிடித்திருக்கிறார். இந்தப் போராட்டத்தின் போது கூரிய ஆயுதம் ஒன்றினால் முடிச்சு மாறி பலரது கைகளில் பல காயங்களை ஏற்படுத்திய போதிலும், பணப்பை மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நடைமுறைத் தாமதங்கள் மொழிச்சிக்கல்கள் என்பவை காரணமாக இச்சம்பவம் கொழும்பில் பொலிஸில் முறைபாடு செய்யப்படவில்லை. நடத்துநரும் திருகோணமலைக்கு வந்தபிறகே தனக்குரிய சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கிறார்.

பணப்பையைப் பறிகொடுத்த பெண்ணின் கணவரிடம் முரசு தொடர்பு கொண்ட போது "அவரது துணிகரத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். எங்கள் மனங்களில் அவர் என்றும் உயர்ந்த இடத்தில் இருப்பார். போக்குவரத்துச் சபைக்கு இவரது அரிய சாதனை பற்றித் தெரியப்படுத்தியிருக்கிறேன்," என்று கூறினார். இவரது துணிவையும் சேவை மனப்பான்மையையும் பாராட்டுவதில் முரசும் மலர்ச்சியடைகிறது.

## 'வலம்புரி' செய்திக்கு சேனாதிராஜா மறுப்பு

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பாகவே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'வலம்புரி' என்ற தினசரி கடந்த 15ம் திகதி இதழில் 'கூட்டணி வேட்பாளர் பட்டியல் தயார் நிலையில்' என்றொரு செய்தியை வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தி 'அப்பட்டமான பொய்' என்று கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் திரு மாவை சேனாதிராஜா ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

பொதுத் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவிக்காதவர்களின் பெயர்களை பத்திரிகைக்குக் கொடுத்தவர்கள் பொறுப்பற்ற நிலையில் நடந்திருப்பதாகத் தனது ஆட்சேபனைச் செய்தியில் திரு.சேனாதிராஜா குறிப்பிட்டிருந்தார்.

திரு.சேனாதிராஜா அவர்களின் ஆட்சேபனைக்கு மறுப்புத் தெரிவித்த 'வலம்புரி', கூட்டணியின் வட்டாரங்களில் இருந்தே பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட செய்தி எழுதப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டியுள்ளது.

## பள்ளிவாசல் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு வேண்டாம்!

திக்குவல்லை முஹியத்தீன் பள்ளிவாசல் நிர்வாக சபைக்கு ஊர் மக்கள் பத்துப்பேர் கொண்ட ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்தனர். இதனை வக்பு சபையும் 06.09.1998ல் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஏற்றுக் கொண்டது.

மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் மஹிந்த விஜயசேகர, மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையினரை நீக்கி விட்டு வேறு பதினொரு பேரை நியமித்திருந்தார். அமைச்சரின் இந்தத் தலையீட்டை ஆட்சேபித்து ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் ஐந்து பேர் வக்பு நியாய சபையில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர்.

வக்பு நியாய சபைத் தீர்ப்பு 12.02.2000 அன்று வழங்குபபட்டது. இதன்படி நிர்வாக சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் தெரிவு நிராகரிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் ஊர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்களை நீக்கிவிட்டு அரசியல் வாதியொருவர் தனக்குரியவர்களை நியமிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்று அத்தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## மஹா சங்கத்தினருடன் ஆளும் கட்சித் தலைவர்கள் சந்திப்பு!

(கண்டி நிருபர்)

புதிய அரசியல் யாப்பு திருத்தம் பற்றிய ஷரத்துக்களில் அதிருப்தியுற்ற மகா சங்கத்தினரில் அஸ்கிரிய பீடாதிபதியும் மல்வத்தை பீடாதிபதியும் கடந்த வாரம் கண்டிக்கு வந்திருந்த முக்கிய அமைச்சர்களையும் அவரவரது வாசஸ்தலங்களில் மிக்க விருப்போடு சந்தித்து உரையாடினர்.

அஸ்கிரிய பீடாதிபதி வண. உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த மகா நாயக்க தேரர் சற்று மிதவாதத்தையும் மல்வத்தை பீடாதிபதி வண. ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸியின் கடும் போக்கையும் உணர்ந்த அமைச்சர்கள் அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் தமது உரையாடல்களை நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இந்தச் சந்திப்பில் கூடுதலான உரையாடலை அஸ்கிரிய தேரோவுடனே வைத்துக் கொண்டார். மல்வத்தை பீடாதிபதியுடன் பிரதமர் சந்தித்த வேளையில் பௌத்தம் உரிய முறையில் பேணப்படவேண்டுமென்ற கூற்றை பிரதமரிடம் வலியுறுத்தியதுடன் அவரோடு புதிய யாப்பு பற்றிய கலந்துரையாடலை சில நிமிடம் மாத்திரமே மேற்கொண்டார்.

பிரதமருடன் வருகை தந்திருந்தவர் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ. அவர் மீது மல்வத்தை பீடாதிபதி காட்டிய அன்பு அலாதியானது.

என்றாலும் தலதாமாளிகைக்கு வருகை தந்திருந்த அமைச்சர் ராஜபக்ஷ அங்கு கூடியிருந்த செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையில் புதிய யாப்பு பற்றிய விளக்கத்தை மகாநாயக்கர்களுக்கும் வழங்கி உரையாடியபின் அவர்களோடு இணைந்து இதனை முன்வைத்திருக்கலாம் என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

பிரதமரும் இரு மகாநாயக்கர்களையும் சந்தித்த வேளையில் திருத்தங்கள் ஏதும் இருப்பின் கருத்து முரண்பாடுகளுக்கு தீர்வுக்கான தன்னிடம் அவற்றைத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

திருத்த ஆலோசனைகளை முன்வைத்தால் அவை பற்றி ஆராய்ந்த பின் மீண்டும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு உத்தேச யாப்பு முன்வைக்கப்பட்டால் இவற்றையும் உட்புகுத்தலாம் என்ற கருத்தையும் பிரதமர் மகாநாயக்கர்களிடம் வெளியிட்டார்.

இதே வேளையில் ஜனாதிபதி திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அஸ்கிரிய பீடாதிபதியை அவரது வாசஸ்தலத்திற்கு சென்று அந்தரங்கமாக உரையாடினார்.

## கர்ப்பிணிகளுக்கு இரத்தப் பரிசோதனை

யாழ். போதனா வைத்தியசாலையின் (சுகாதாரப்பிரிவினர்) கர்ப்பிணித் தாய்மார்களின் இரத்தம் பரிசோதனை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. யாழ் மாவட்டத்தில் 'எயிட்ஸ்' தொடர்பாக வெளியான தகவல்களை அடுத்தே எயிட்ஸ் நோய்த் தொற்று இருக்கின்றதா என்பதைக் கண்டறியும் வண்ணம் அவர்களிடம் இருந்து இரத்தம் பெறப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட சுகாதாரப் பிரிவினர் மூலமாக எடுக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

"ஏற்கனவே எயிட்ஸ் நோய் தொடர்பாக இனங்காணப்பட்டோரில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளாமல் எமது இரத்தத்தை ஏன் பரிசோதனை செய்ய வேண்டும்?" என்று தாய்க்குலங்கள் கேள்வி கேட்கின்றார்களாம்.

## மற்றுமொரு பஸ் சேவை தேவை!

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ் நோக்கி தினமும் காலை 7.30 மணிக்கு 780ம் நம்பர் பஸ் புறப்படுகின்றது. இதில் அரச ஊழியர்கள் மாணவ மாணவிகள் அன்றாட பிரச்சனைகளைத் தீர்க்க பொது மக்கள் என்று பலரும் ஏறுகின்றார்கள். அதே வீதியால் மீண்டும் 10 மணிக்கே யாழ் நோக்கி பஸ் புறப்படுகிறது. இதனால் தீவுப் பகுதி வாழ் மக்கள் பெரிதும் துன்பப்பட்டே பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனை வட பிராந்திய போக்குவரத்து சபை கவனத்தில் எடுத்து 10 மணிக்கு முன்பதாக மற்றுமொரு பஸ் சேவையை ஆரம்பிப்பார்களா? பொது மக்கள் குறைதீர.

# புத்தக வெளியீட்டு விழா

தினமுரசு வாரமலரில் இராஜகுமாரன் என்ற பெயரில் இரா.பத்மநாதன் தொடர்ச்சியாக எழுதிய 'இராமாயணம்'-'கோதண்டம் ஏந்திய கோமகன்' என்ற மகுடத்துடன் இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நூலுருப்பெற்றுள்ளது. இந்நூலின் வெளியீட்டுச் சிறப்பு விழா 14.08.2000 திங்கட்கிழமை, போயா தினத்தன்று பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.


விழாவுக்குத் தலைமை வகித்த கலாசூரி ஆர்.சிவகுருநாதன் உரையாற்றுவதையும், நூலாசிரியர் ஏற்புரை வழங்குவதையும் விழாவுக்கு வருகை தந்த பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.







## 20வது ஆண்டு நினைவஞ்சலி



1951 · 09 · 19    1980 · 08 · 20


**முருகேசு அம்பிகைபாகன்**

[துபாலதீபர் கேகாலை]

ஆண்டுகள் இருபது
உருண்டோடிப் போயின!
ஆனாலும் ஆறாது ஆறாது
உங்கள் பிரிவுத்துயர்!
மாறாது மறையாது
உங்கள் நினைவுகள்!
அன்பிலே சிகரமாயும்
அறிவிலே ஆசானாயும்
பண்பின் பிறப்பிடமாயிருந்து
எமக்கு நல்வழி காட்டி
இறைவன் திருவடி சேர்ந்த
எம் அன்புத் தெய்வமே
நீங்காத நினைவுகளுடன்
நித்தமும் நாம் உங்களை
நினைவு கூர்கின்றோம்.

மனைவி : திருமதி A.இராஜேஸ்வரி,
பிள்ளைகள் : சதீஷ், தினேஷ், மேனகா, தர்ஷிகா.
T.P. 506135

## ஓராண்டு நினைவஞ்சலி



**இன்னாசிமுத்து பெஞ்சமின்**

மண்ணில் 25.05.1951   விண்ணில் 18.08.1999

அன்பின் இறைவா!
உமது திரு வுளத்திற்கேற்ப,
நீர் அழைத்துக் கொண்ட
இன்னாசிமுத்து பெஞ்சமின்
அவர்களுடைய ஆத்மாவை
ஒளியும் பேரின்பமும்,
அமைதியும் நிறைந்த
இடத்தில் சேர்த்தருள
உம்மை மன்றாடுகிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
தாயார், மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள், பேரப்
பிள்ளைகள் மற்றும் உறவினர்,
நண்பர்கள், அயலவர்கள்.

68/40, வேலுவனா வீதி,
தெமட்டகொட.

## விளம்பரப் பகுதி


### ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,
Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 24.08.2000-29.08.2000
இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.
HOTLINE : 077-602513.

### தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"


## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 02.08.1926
உதிர்வு 24.08.1999

**அமரர் உயர் திரு.கதிரவேலு நல்லையா**

[அல்போன்ஸ்] அவர்கள்

அன்புருவே ஐயாவே-நீர்
எமைவிட்டகன்று அகவை ஒன்றையா
நிழல்களே சென்றதெமைவிட்டு
நிஜமாக நீர் செல்லவில்லை ஐயா
நல்வழி நாம் நடக்க-நீ
எதிர்காலத்தை அமைத்தாய்
இவ்வுலகில் பேர் கொள்வதில்லை பெருமை
அவ்வுலகம் சென்றும் நிலைக்க வேண்டும்
உன் பெயர் வாழி ஐயா வாழி.
உமை நினைந்துருகும்
குடும்பத்தினர்.

174/1, வாசல வீதி, கொட்டாஞ்சேனை.கொழும்பு-13.
T.P 380565   T.P 078 684001.

தகவல்:
என்.விஜயகுமாரன் (யா.மா.ந.ச.ப.நோ.கூ.ச.முன்னை நாள் உத்தியோகத்தர்)
New York U.S.A T.P 718 358 1734
என்.மகேஸ்வரன் (யா.மா.ந.ச.ப.நோ.கூ.ச.முன்னை நாள் உத்தியோகத்தர்)
DOHA-QATAR-T.P 438099


### மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் செப்டம்பர் 02,03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் செப்டம்பர் 09,10 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

# SPOKEN ENGLISH

**By K.M.N. NALRAVI**


யாருக்காக?
- ★ தொழில் புரிபவர்களுக்காக.
- ★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- ★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
- ★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)


- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வகுப்பில் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
(புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

### மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAMY, J.P. (J.D.G.A.N.) HON. PROF. (I.U.M.A.)
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941344831.
Tel-00941466271.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466620, 01-466820

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

உலகப் புகழ்பெற்ற

### எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி



Rs.25/= Only (3.ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

SINGHA HOLDINGS (PVT) LTD
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

வீடியோ கசற்றில் இருப்பதை C.D.க்கு மாற்றுங்கள்

ஸ்ரூடியோ **சாயா**
40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை.
T.P. 594492

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# தேர்தல் தயாரிப்பில் தமிழ்க் கட்சிகள்?

## அரசியல் பிழைப்புக்கு அடுத்த வேடம்!

கொழுந்துவிட்டெரியும் யுத்தத்தை நிறுத்த, அதற்கு அடிப்படைக் காரணமான இன முரண்பாட்டை நீக்க, இந்தப் பாராளுமன்றத்துக்கும் முடியாதென்ற நிலையில் அடுத்த பாராளுமன்றத்துக்கான தேர்தல் கதவுகளும் திறக்கப்பட்டுவிட்டன.

கடந்த 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தலும் கூட இதே இனப்பிரச்சனையை முக்கிய விடயமாகக் கொண்டே நிகழ்ந்தது.

அப்போது இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுவோம் என்று பெரும் கோஷமிட்டு வந்த இந்த அரசாங்கம் இறுதியாகத் தீர்வு இல்லாமலே விடைபெற்றுச் செல்கிறது. தீர்வு பற்றிய எத்தனங்களும் எடுக்கப்படாமலும் இருக்கவில்லை. ஆனால் இந்த எத்தனங்கள் செயற்பாட்டு வடிவத்துக்குச் செல்ல முடியாத முடமான எத்தனங்களாகவே இருந்தன.

அதாவது இத் தீர்வு முயற்சிகளை பயனளிக்க வைக்கக்கூடியதான அணுகுமுறையை இவ் அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை.

இம் முயற்சிகளின் வெற்றியானது அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதில் தான் முதலாவதாக தங்கியிருந்தது. இதற்கு அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாக வேண்டுமென்ற அவசியம் இருந்தது.

ஆனால் அரசாங்கத்திடம் அத்தகைய தொகையை ஈட்டக்கூடிய பாராளுமன்ற வாக்குகள் இருக்கவில்லை.

எனவே எப்படியும் இதை நிறைவேற்றுவதானால் ஐ.தே.க.வின் ஆதரவும் அத்தியாவசியம் என்ற நிலைமையே யதார்த்தமாக இருந்தது.

ஆனால் ஐ.தே.க.வை அணைத்துக் கொண்டு இத் தீர்வில் ஓர் இணக்கம் காணும் மனோபாவம் ஆரம்பத்திலேயே அரசாங்கத்துக்கு இருக்கவில்லை.

மாறாக, ஐ.தே.க. மீதான ஒரு 'அரசியல் யுத்த பிரகடனத்தையே' அது எடுத்த எடுப்பில் மேற்கொண்டது.

இனப்பிரச்சனைத் தீர்வு உட்பட நாட்டின் சகல பிரச்சனைகளுக்கும் ஐ.தே.க.வே காரணமெனக்கூறி அதைச் சிலுவையில் அறைவதே இதன் முதல் வேலையாக இருந்தது.

அதற்காக அது ஐ.தே.க.வை அம்பலப் படுத்தும் வழக்கு விசாரணைகளை முடுக்கி விட்டது. அதனால் சீண்டப் பட்ட ஐ.தே.க. அரசாங்கத்துடன் ஒத்துழைக்காத போக்கையே கடைப்பிடித்தது.

இதனால் அரசாங்கம் முன்வைத்த தீர்வுத்திட்டத்தை ஐ.தே.க. உதாசீனப் படுத்தியவண்ணமே இருந்தது.

ஐ.தே.க.வுக்கு ஆத்திரமூட்டல்கள் ஒருபுறம் ஒத்துப்போக மறுக்கச் செய்தாலும் மறுபுறம் தந்திரோபாய ரீதியான, கருத்தியல் ரீதியான, அரசியல் ரீதியான காரணங்களும் இருந்தன.

அதன் தந்திரோபாயத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தின் காலத்துக்குள் இப் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படுவதை அது அடிப்படையில் விரும்பவில்லை.

ஏனெனில் இவ்வாறு ஒரு தீர்வு காணப்பட்டால், மக்கள் மத்தியில் ஒரு நிம்மதியுணர்வு தோன்றிவிடும். அத்தோடு யுத்தச் செலவுகள் நின்று அபிவிருத்திகள் ஆரம்பித்துவிடும். இதேவேளை யுத்த அழிவுகளின் புனர் நிர்மாணத்துக்கும் புனர்வாழ்வுக்கும், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் உலக நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் பெருமளவான உதவிகளை வழங்க முன்வரும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஐ.தே.க. தீர்வுக்கு ஒத்துழைத்தால்கூட அதன் அரசியற் பலாபலன் அரசாங்கத்துக்குத்தான் போய்ச் சேரும். அத்தகைய, ஒரு சமாதானத்தை நிலைநாட்டிய பெருமை அரசாங்கத்துக்குக் கிடைத்து விட்டால் மக்கள் ஆதரவு அதற்கே பெருகும்.

சரிக்குச் சமமான நிலையில் எப்போதும் நிர்ணய சக்திகளாகக்கூடிய சிறுபான்மை மக்கள் ஆளும் கட்சிக்குச் சாதகமானவர்களாக மாறிவிடுவார்கள்.

இத்தகைய நிலைமை ஏற்பட்டால் ஐ.தே.க.வின் தேர்தல் வெற்றி நீண்டகாலத்துக்கும் பகற்கனவாகிவிடும். இந்த உண்மை அதன் அடிமனதில் புரிவதால் அது எந்தவிதப்பட்டும் இத் தீர்வை முறியடிக்கும் தனது தந்திரோபாயங்களிலேயே இறங்கும். இதேவேளை அதன் இந்த தந்திரோபாயம் முன்னைய காலங்களைப்போல் ஒரு வெளிப்படையான இனவாதமாக இருக்க முடியாதுள்ளது.

ஏனெனில் அதற்கு அரசாங்கம் அமைக்க சிறுபான்மையினரின் ஆதரவும் இன்றியமையாத தேவையாக ஒரு புறம் இருக்க, மறுபுறம் இப் பிரச்சனை சர்வதேச அக்கறைக்குரியதாக மாறிவிட்டது. அதனால் சர்வதேச சமூகத்தின் முன் தன்னை ஒரு இனவாதக் கட்சியாகக் காட்டிக் கொள்ளாமல் 'ஜெண்டில் மென்' முகத்தைக் காட்ட வேண்டிய அளவில் உள்ளது.

இவற்றுக்கு மேலாக ஐ.தே.க தீர்வு பற்றியவிடயத்தில் அடிப்படையான விடயங்கள் எதையுமே விட்டுக்கொடுக்கத் தயாரில்லாத மனோபாவத்தைக் கொண்டிருக்கிறது. நீண்ட காலமாக நடந்த ஐ.தே.க.வின் தொடர் ஆட்சியில் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகள் எவற்றிலும் அது தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்த அடிப்படைவிடயங்கள் எவற்றிலும் சிறிதளவு விட்டுக்கொடுப்புக்கும் முன்வராத பிடிவாதத் தன்மையையும் இறுமாப்புணர்வையுமே வெளிப்படுத்தி வந்தது.

மேலும் பல மூர்க்கமான அடக்குமுறைச் சட்டங்களையும் கொடூரமான இனக்கலவரங்களையும் தோற்றுவித்தது. அவற்றுக்கு மூலகர்த்தாவாக இருந்த பல முக்கிய தலைவர்கள் இன்று இல்லை. எனினும் அந்தக் குணாம்சம் நீங்கினதாகத் தெரியவில்லை. மாறாக அதை வெளித் தெரியாதபடி மூடி மறைக்கும் ஒரு 'நல்ல பிள்ளை' முகமூடியையே போலியாக அணிந்திருப்பது புலப்படக்கூடியதாக உள்ளது.

அது தன் இனவாத உள்ளடக்கத்தை நேரடியாக வெளிப்படுத்தாமல் மறைமுகமாகவும் நாசுக்காகவும் வெளிப்படுத்துகின்ற கலையைத் தற்போது கைவரப் பெற்றுள்ளது.

இந்தத் தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் அது நடந்து கொண்ட விதம் இதனைத் தெளிவாகக் காட்டுகிறது. இத் தீர்வுத் திட்டத்துக்கு எதிராக, சிங்கள இனவாதத்தை ஒருகையால் உசுப்பிவிட்டுவிட்டு பொதுமக்களை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் புத்தபிக்குகளை உண்ணாவிரதத்திலும் குதிக்க வைத்துவிட்டு, மறு புறம் தான் சமாதானத்துக்கு எதிரானவன் இல்லையெனக் காட்டும் அப்பாவி வேடதாரியாக விளக்கமளிக்க முற்படுகிறது.

உண்மையில் இத் தீர்வுத் திட்டத்தில் எதிர்பார்த்த அளவு முழுமையான தீர்வுகள் அடங்கியிருக்காவிட்டாலும் தமிழ்த் தரப்புடன் பல்வேறு விடயங்களில் உடன்பாடு காணப் பட்டிருந்தது. ஆனால் அவற்றை மறுதலிக்க நிர்ப்பந்தம் செலுத்தியது ஐ.தே.க.வே. இங்கேயே அது தமிழ்பேசும் மக்களுக்கு தனது ஆட்சி சகல உரிமைகளையும் வழங்குமெனக் காட்டிவந்த பொய்யான பிரமைகளை அம்பலமாக்கிவிட்டது.

அது உண்மையில் பொதுஜன ஐக்கிய முன்னணி தர முன்வந்த விடயங்களைக்கூடத் தரத் தயாரற்றது என்பதை இங்கு காட்டி விட்டது.

இதேவேளை அது தன்னை இவ்விடத்தில் சிங்கள மக்களின் பாதுகாவலனாக அடையாளப்படுத்தும் முனைப்பையே வெளிப்படுத்தியது. பாதுகாவலனாகக் காட்டுவதனால் 'அபாயம்' ஒன்றை உணர்த்துவது அவசியமல்லவா? எனவே தமிழ்ப் பேசும் மக்களுக்கு அரசாங்கம் இத் தீர்வுத்திட்டத்தில் வழங்க முனைபவற்றை 'சிங்கள மக்களுக்கான அபாயமாக' அதற்கு ஊதிப் பெருப்பித்துக் காட்ட வேண்டியதாக இருந்தது. அதைத்தானே நேரடியாகச் செய்வது சர்வதேச ரீதியில் தனக்கு அசிங்கத்தை ஏற்படுத்திவிடுமென்பதைப் புரிந்துகொண்டு, புத்த பிக்குகளின் வாயிலாகச் செய்கிறது. அவர்களோ, தமிழ்ப் பேசும் மக்களுக்கு என்ன தீர்வை வழங்கினாலும் அது சிங்கள மக்களுக்கும், பௌத்த மதத்துக்கும் ஆபத்தானது எனக் கூக்குரலிட ஆரம்பித்துவிட்டனர்.

ஆனால் இதே புத்த பிக்குகள்தான், இப்போது ஒரு சில மாதங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணம் புலிகளின் வசம் விழப் போகிறது என்ற பயத்தில், முன்னர் தாம் அவமானப்படுத்தி அனுப்பிய அதே இந்தியாவிடம் சூடு சுரணையற்றவர்களாக உதவிப் பிச்சை கேட்டுக் கெஞ்சியவர்கள் என்பதை மறந்துவிட்டார்கள்.

தீர்வை நிராகரிக்கும் இவர்கள் மறுதலையாக யுத்தத்தின் காரணகர்த்தாக்களாக செயற்பட்டுவிட்டு, அதே யுத்தம் இந் நாட்டின் குரல்வளையை நெரிக்கும்போது மட்டும் உயிர்ப்பிச்சை கேட்டுக் கெஞ்சுவது வேடிக்கையானதல்ல. வேதனைப்படவும், அவமானப் படவும் வைக்கின்ற ஒன்று.

ஐ.தே.க.வின் இத்தகைய வேடம்புரியாததல்லவென்றாலும் கடந்த சில காலங்களாக பாரிய அளவில் உணரப்படவில்லை. அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்துவரும் கெடுபிடி யுத்தத்தின் ஐ.தே.க. கூறிவந்த பசப்பு வார்த்தைகள் ஓரளவு எடுபட்டது என்பது உண்மை. அதனால் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. இல்லையேல் சந்திரிகாவுக்கு வாக்களிக்காவிட்டாலும், எப்போதுமே தமிழ் பேசும் மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்த வாசுதேவ நாணயக்காரவுக்காவது வாக்களித்திருப்பார்கள். அதையும் மீறி வாக்களித்த தமிழ் மக்கள் தாங்கள் நம்பிய அதே ஐ.தே.க. தமிழர்களுக்குத் தீர்வு எதுவும் கிடைக்காதிருக்க எவ்வளவு முனைப்போடு இந்தப் பாராளுமன்றத்தில் எதிர்ப்புக் காட்டியதென்பதை இப்போது கண்கூடாகப் பார்த்து விட்டார்கள்.

இந்தத் தீர்வுத்திட்டம் தமிழர்களுக்குப் போதாது என்று வாதாடுபவர்களும் பலர் இருக்கிறார்கள், அவர்களும் இத் தீர்வை எதிர்க்கிறார்கள் என்பது வேறுவிடயம். ஆனால் இங்கு ஐ.தே.க. எதிர்ப்புக் காட்டியது 'போதாது' என்பதற்காக அல்ல. அவற்றைக் கூட வழங்கக் 'கூடாது' என்பதற்காகத் தான் என்பதை நாம் நோக்க வேண்டும்.

எனிலும் இந்தத் தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் ஐ.தே.க.வை ஆதரிப்பதா என்ற கேள்வி எழப் போவதில்லை. ஏனெனில் இது பொதுத் தேர்தல் என்பது இங்கு அடிப்படையான விடயம். பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமக்குப் பிடித்த தமிழ்க் கட்சிகளைத் தான் தெரிவு செய்வர். இங்கு ஐ.தே.க. சரிசனைக்குரியதாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை. இது அதற்குத் தெரியும். அதனால்தான் தமிழ் வாக்குகளை எதிர்பார்க்காமல், சிங்கள இனவாத வாக்கு வாங்கியைத் தன் பக்கம் சாய்த்துக் கொள்ளக்கூடிய வகையில் அது தனது இனவாத உள்ளம்சத்தை வெளிப் படுத்தத் துணிந்தது.

ஒருவேளை ஆளும் கட்சிக்காவது தமிழ்ப் பகுதிகளில் சொற்ப ஆதரவு கிடைக்கலாம். ஏனெனில் பொதுவாக ஆளும் கட்சியைச் சார்ந்திருப்பது அனுகூலமெனக் கருதும் ஒருசிலர் எப்போதும் இருப்பதுண்டு.

இதேவேளை இம்முறை தமிழ்ப் பகுதிகளில் தமிழ்க் கட்சிகளின் வாக்கு வேட்டை ஒரு பலமான போட்டியாகவே அமையப் போகிறது. புலிகள் எப்போதுமே இத் தேர்தல்களை எதிர்த்து தமிழ் மக்களைப் பகிஷ்கரிக்குமாறே கூறி வந்துள்ளனர். இறுதியாக நிகழ்ந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் அந்த நிலைப்பாட்டையே எடுத்திருந்தார்கள். எனவே இந்த முறை அவர்கள் இத் தேர்தல்களில் பங்குபற்றுமாறு தமிழ்மக்களைக் கோரும் எந்த சாத்தியப்பாடும் இல்லை எனினும் ஒரு சில வட்டாரங்கள் புலிகளின் சார்பில்தான் தாம் போட்டியிடுவதாக ஒரு பொய்த் தோற்றத்தைக் காட்டும் முனைப்பில் இறங்கியுள்ளன.

புலிகளின் முதுகில் சவாரிவிட்டுவிட்டு, மக்களின் வேதனைகளை மூலதனமாக்கி, பாராளுமன்றக் கதிரைகளை இலகு வழியில் தட்டிக் கொண்டு போகலாமென இந்தப் பேர்வழிகள் கணக்குப் போடுகிறார்கள். ஆனால் அவர்களைப் புலிகளின் பிரதிநிதிகள் போல் செயற்படுவதற்கு புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. ஆயினும் இவர்களைப் பொறுத்தவரை புலிகள் தம்மை வாய்விட்டு நிராகரிக்காது இருந்துவிட்டாலே போதும், தாம் மக்களுக்கு தம்மைப் புலிகளின் பிரதிநிதிகள்போல் பாவனை காட்டி விடயத்தைச் சாதித்துவிடலாமென நம்புகிறார்கள்.

இவ்வாறு திட்டமிடும் குழுவில் யாழ்ப்பாணத்தின் பிரபல பத்திரிகை ஆசிரியர் ஒருவரும் என்.ஜி.ஓ. ஒன்றின் செயற்பாட்டாளராகத் தன்னை வெளிக்காட்டி அடிக்கடி பிரபல்யம் தேடிக் கொள்ளும் ஒருவரும் சுழியோடி வருகிறார்கள். தமது திட்டத்துக்கு ஏற்றாற்போல் இப்போதிருந்தே தமது பத்திரிகையில் செய்திக் கட்டுரைகளை ஆயத்தப் படுத்தத் தொடங்கியிருப்பதுடன் பொதுப் பத்திரிகையாக காட்டிக்கொள்ளும் அப் பத்திரிகையில் தமக்கு பிரதான சவாலாக அமையப்போகும் ஒரு கட்சிபற்றிய செய்திகளை இருட்டடிப்புச் செய்யவும் திரிபு படுத்தவும் முனைந்து வருகிறார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடத் தீர்மானித்துள்ளதும் இத்தகைய நோக்கிலேயே. அமரர் குமார்பொன்னம்பலத்துக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் வழங்கிய "மாமனிதர்" என்னும் கௌரவப் பட்டத்தை தேர்தலில் வியாபாரப் பொருளாக்கி, தம்மை மறைமுகமாக புலிகளின் பிரதிநிதிகளென உணர்த்தி வாக்குகளைப் பெற்றுவிடலாமென்பது இவர்களின் எண்ணம். கொழும்பிலிருந்து கொண்டு அறிக்கை அரசியல் மட்டுமே நடத்தி வந்த இவர்கள் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் போட்டியிட்டு ஒருவேளை வென்றாலும் திரும்ப அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கப் போவதில்லை என்பது அம் மக்களுக்குப் புரியும்.

புலிகள் தமது பிரதிநிதிகளாக வேறு யாரையும் நியமிக்கப் போவதில்லை. அது அவர்களுக்குப் பாதகமாக முடிந்து விடலாமென்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் இவர்கள் நியமித்த நபர்கள் தேர்தலில் தோல்விகண்டால் புலிகளுக்கும் மக்கள் செல்வாக்கு இல்லை என்று அரசாங்கம் மிகச் சுலபமாகப் பிரசாரம் செய்துவிடும். அத்துடன் அந் நபர்கள் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் நிற்பார்களா என்பதும் கேள்விக்குறி. பதவிக்காக புலிகளைப் பயன்படுத்த எண்ணுபவர்கள் பாராளுமன்றம் ஏறியதும் இன்னும் அதிகரித்த பதவிகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் மாறமாட்டார்கள் என்பது ஐயம்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை இத் தேர்தல் ஒரு நெருக்கடிநிலையை ஏற்படுத்தியுள்ளது. அதாவது அவர்கள் திட்டவட்டமாக என்னத்தைக் கூறி வாக்குக் கேட்பது என்பதே இங்கு அவர்களுக்குள்ள தர்மசங்கடம். மட்டக்களப்பில் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் இன்னொன்றும் திருகோணமலையில் வேறொன்றும் கூற வேண்டியதாக உள்ளது அவர்களது நிலைமை அப்படி மாறி மாறிக் கூறுவதுகூட ஒன்றுக் கொன்று முரணானதாகி பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதால் மட்டக்களப்பில் கூறுவது யாழ்ப்பாணத்திற்கு எட்டாமலும், யாழ்ப்பாணத்தில் கூறுவது மட்டக்களப்புக்கு எட்டாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியும் உள்ளது.

மட்டக்களப்பில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்ட கூட்டணி உறுப்பினர் ஜோசப் பராராசசிங்கம் தீர்வுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் பிரசாரத்தில் இறங்குவதுடன் அரசாங்கத்தையும் அரச படைகளையும் கடுமையாகச் சாடுகின்ற தேர்தல் பிரசாரத்தை நடத்துவார். ஆனால் சம்பந்தர் தீர்வுத் திட்டதத்துக்கு ஆதரவானவர். 'தந்தை செல்வா உயிருடன் இருந்திருந்தால் இந்தத் தீர்வுத் திட்டத்தை ஏற்றிருப்பார்' என்று அவர் அமைச்சர் அஷ்ரப்பிடம் உறுதி தெரிவித்திருந்தார். அத்தோடு அவர் அரசாங்கத்தை எதிர்க்க அதிகம் முனையப் போவதில்லை. இவர்கள் இருவரின் போக்கும் வேறுபட்டிருக்க யாழ்ப்பாணத்தில் நிலமை இவர்களுக்கு இன்னும் மோசமாக இருக்கிறது.

ஏனெனில் அங்கு அவர்கள் புலிகளின் எதிர்ப்பையும் மீறி தேர்தலில் நின்று ஈட்டிய மாநகர சபையை நடத்த முடியாது கொழும்புக்கு ஓடிவந்து இருந்து கொண்டார்கள். அதேவேளை பல உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட வேளையிலும் ஈ.பி.டி.பி. தனது 10 உள்ளூராட்சி சபைகளையும் நடத்தி பெருமளவு அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டிருந்தது. எனவே தாம் ஏன் நிர்வாகத்தைக் கைவிட்டுவிட்டு ஓடினார்கள் என்பதற்கு விளக்கம் கொடுக்க இயலாத நிலையில் மீண்டும் மக்களிடம் தமக்கு பாராளுமன்றப் பதவிகளைத் தரும்படி மனசாட்சியுடன் கேட்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கேயே தங்கியிருந்து பணியாற்றி வருகிற நிலையில் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பல வருடக் கணக்காக யாழ்ப்பாணத்தில் வந்து தங்கியிருக்கவேயில்லை. பதவிகளைப் பெற்றுவிட்டு கொழும்பு சென்றுவிடும் இவர்களை நம்பி மக்கள் வாக்களிப்பார்களா என்று மறுதரப்பு பிரசாரத்தில் இறங்கியுள்ளது.

இந்நிலையில் கூட்டணிக்கு யாழ்ப்பாணத்தில் என்ன கோஷத்தை முன்வைத்து வாக்கு கேட்பது என்பது ஒரு சிக்கல். ஏனெனில், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மக்களின் பிரச்சனைகளுக்கு நின்று முகம்கொடுத்து, காரியங்களை நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய வல்லமையும் பொறுப்பும் கொண்டுள்ளவர்கள் யாரோ அவர்களே மக்களால் உடனடியாக வேண்டப்படுகிறார்கள். அங்கு கொள்கைப் பிரச்சனை என்பது இரண்டாம் கட்டமானதாகத்தான் தற்போது உள்ளது. அதனால் கூட்டணிக்கு பெருத்த சவாலாக யாழ்ப்பாணத்தில் விளங்கப் போவது ஈ.பி.டி.பி.யே. அவர்களைப் பொறுத்தவரையில் 'யாழ்ப்பாணத்தை மீண்டும் நிமிர்த்தி எடுப்போம்' என்ற பதாகையும், தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவது அவசியம் என்ற நிலைப்பாடும்தான் பிரதானமாக முன்னெடுக்கப் படப்போகிறது. இதே நிலைப்பாட்டை எடுக்கும் வேறு எவரும் ஈ.பி.டி.பி.க்கு நிகராக அமைய முடியாததாலும் மட்டக்களப்பில் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்குத் தலைகீழான ஒன்றை யாழ்ப்பாணத்தில் முன்வைக்க முடி[illegible]தாலும் கூட்டணிக்கு இது திண்டாட்டம[illegible]வ அமையும். எனினும் அது தனது பழை[illegible] வாக்கு வங்கியிலேயே இன்னும் நம்பிக்கை வைத்துள்ளது. புலிகளின் ஆதரவையும் பெறாமல் புலிகளால் இரண்டு மேயர்களை இழந்த நிலையில் புலிகளை ஆதரிக்கவும் முடியாமல், எந்தவித சுலோகமும் இல்லாமல், வெறும் நம்பிக்கையீனமான அழுகுரலை மட்டும் எழுப்பியபடி, அப் பழைய வாக்கு வங்கியை இம்முறை யாழ்ப்பாணத்தில் உடைத்து எடுக்க முடியுமா என்பது கூட்டணிக்கு ஒரு கேள்விக்குறி.

## செய்திச் சிதறல்

✪ பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டதும், அரசியற் கட்சிகள் தங்கள், தங்கள் வேட்பாளர்களைப் பொறுக்கி எடுப்பதில் மும்முரமாக ஈடுபட்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. பதிவு செய்த கட்சிகள் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதா? அல்லது தனித்துப் போட்டியிடுவதா? என்ற குழப்ப நிலையில் 'குசுகுசு' க் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

✪ வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவே போட்டியிடுவதற்கு முன்னேற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.இருப்பினும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் கட்சியின் ஒரு பிரிவினரும் புளொட் இயக்கமும் ஒன்றாக இணைந்து போட்டியிடுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது. இக்கட்டான இன்றைய சூழ்நிலையிலும் தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதற்கும் ஒரே குரலில் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கவும் நாட்டம் கொள்ளாமல் பிரிந்து நின்று செயல்படுவதில் எத்தகைய பலனையும் அடைய முடியாத நிலையே, உருவாகப் போகிறது என்று மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

✪ அம்பாறையில் தமிழர்களுக்கான ஒரு பாராளுமன்ற உறுப்பினரையாவது தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்று தமிழர் மகாசங்கம் பல ஆண்டுகளாகக் குரல் எழுப்பி வந்துள்ளது. அணைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரு வேட்பாளரை நிறுத்தினால் மட்டுமே அந்த எண்ணம் கைகூடும் என்று அபிப்பிராயம் தெரிவித்து வந்தனர். ஆனால் அதற்கான பலனெதுவும் இம்முறைத் தேர்தலில் கிட்டப்போவதில்லை என்று தெரிய வந்துள்ளது. தமிழ் அரசியற் கட்சிகள் தங்கள் தங்கள் வேட்பாளர்களைத் தனித்துப் போட்டியிட நிறுத்தினால் தமிழர் மகாசங்கம் தனியான சுயேட்சைக் குழு ஒன்றையே போட்டியிட வைப்பதற்கு ஆயத்தம் செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

✪ பிரசித்தி பெற்ற நல்லூர் திருவிழாக்கள் விமரிசையாக நடைபெற்று வருகின்றன. தினசரி திருவிழாக்ககளில் முன்னெப்போதும் இருந்ததைவிட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடி நின்று பக்தி சிரத்தையுடன் முருகப்பெருமானைத் தரிசித்து வருகின்றனர். இவ்வாறான வேளைகளிலும் நல்லூர்ப் பிரதேசத்தில் எரிகணைக் குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதாகவும் இதனால் 6 சிறுவர்களே காயமடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. இத்தகைய ஷெல் வீச்சுக்கு எத்தரப்பினர் காரணம் என்று தெரியவில்லை.. இருப்பினும் இத்தகைய நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியதே.

✪ கிளிநொச்சிப் பிரதேசத்தில், யாழ்ப்பாணம்-செம்மணியைவிட பாரிய புதைக்குழிகள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 1996ம் ஆண்டு முதல் 1998ம் ஆண்டு வரை கிளிநொச்சி நகரில் இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது. இக் காலப்பகுதியில் சுமார் 200 பேர் வரை காணாமற் போனதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பகுதிகளில் ஏற்கனவே கிணறுகளிலும் மலசலகூடங்களிலுமிருந்து 58 எழும்புக் கூடுகள் கண்டெடுக்கப் பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

✪ இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் எந்த வகையிலும் தலையிடப் போவதில்லை என்று இந்தியா திட்டவட்டமாக அறிவித்திருந்தது. ஆனால் இப்பொழுது இந்தியா இராணுவத் தளபாடங்களை இலங்கை அரசுக்கு வழங்கப் போவதாக நம்பகமான செய்திகள் வெளியாகி உள்ளன. இலங்கைக் கடற்படையினை விரிவாக்கும் நோக்குடன் இந்தியாவிடமிருந்து 'ஐ.என்.எஸ். சர்தார்' என்ற ரோந்துக் கப்பல் ஒன்றினை ஏற்கனவே இலங்கை கொள்வனவு செய்துள்ளது. இக்கப்பலில் கொண்டு செல்லக் கூடிய 'சிரேக் ஹெலிக்கொப்டர்'கள் மூன்றினையும் வாங்குவதற்கும் கடற்படையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் ரோந்துக் கப்பலைச் செலுத்துவதற்கான பயிற்சி அளிப்பதற்கும், ஹெலிக்கொப்டர்களைச் செலுத்துவதற்கான பயிற்சிகளை அளிப்பதற்கும் இந்திய கடற்கடை அதிகாரிகள் பலரும் இங்கு வரப் போவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# அண்டை மண்டலத்தில்....

இந்தக் கட்டுரை பிரசுரமாயிருக்கின்ற வேளையில் ராஜ்குமார் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம். அல்லது பிரச்சனை மேலும் சில நாட்கள் இழுத்துக் கொண்டு போகலாம். ஆனால் ராஜ்குமார் விடுதலையாவது உறுதியாகிவிட்டது.



ராஜ்குமார் விடுதலைக்குப் பிறகு வீரப்பன் என்ன செய்யப்போகிறார் அல்லது தமிழக கர்நாடக அரசுகள் என்ன செய்யப் போகின்றன என்பதை விடவும், தமிழ் தீவிரவாதக் குழுக்கள் என்ன செய்யும், தமிழ் நாட்டில் இன ரீதியான போராட்டங்கள் வலுக்குமா, என்பதிலேயே அனைவரது கவனமும் தற்போது திரும்பியிருக்கிறது.

முன்பு ஆட்களைக் கடத்திவிட்டு பிணைத்தொகை, பொது மன்னிப்பு என்று கோரி வந்த வீரப்பன், இப்போது முன்வைத்துள்ள கோரிக்கைகளனைத்தும் தமிழ்நாடு, மற்றும் கர்நாடக மாநிலத்தில் வாழும் தமிழர்களின் பிரச்சனை பற்றியவை. தனக்கென்று, அல்லது தன்னைச் சார்ந்தோருக்கென்று ஒரு கோரிக்கையினைக்கூட அவர் முன்வைக்கவில்லை. கடத்தல்காரர், வேட்டைக்காரர், கொலைக்காரர் என்ற கட்டங்களையெல்லாம் தாண்டி, தன்னை இப்போது தமிழ்தீவிரவாதியாக காட்டிக்கொள்கிறார் அவர். இப்படி அவர் மனநிலை மாறுவதற்குக் காரணம் அவருடன் கைகோர்த்திருக்கும் தமிழ் தீவிரவாதக் குழுக்களே என்று கூறப்படுகிறது.

தமிழரசன் உருவாக்கிய தமிழ் நாடு விடுதலைப்படை, தமிழ்தேச மீட்சிப்படை, வீரப்பன், ஆகிய இந்தப் புதிய கூட்டணி தமிழகத்தில் புதியதொரு புயலை உருவாக்குமோ என்று இந்திய தேசியவாதிகள் கவலைப்படுகின்றனர். பொறியியல் கல்லூரியிலிருந்து படிப்பை முடிக்காமலேயே வெளியே வந்து நக்சலைட் குழுக்களுடன் இணைந்து செயல்பட்டு பிறகு தமிழின விடுதலைப் போராட்டத்தை துவக்கியவர் தமிழரசன்.

அவர் அப்படியொரு பாதையைத் தேர்ந்தெடுக்க காரணமாயிருந்தவர்களில் முக்கியமானவர் புலவர் கலியபெருமாள். அவரும் நக்சலைட் இயக்கத்தில் இருந்தவர்தான். 1970ம் ஆண்டில் அவர் வீட்டில் வெடிகுண்டு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் மூன்று பேர் இறக்க, அதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டில் நக்சலைட் இயக்கம் வளரத் தொடங்கிவிட்டது என்று அரசு உட்பட அனைவரும் அறிந்து கொண்டனர். தன்னுடைய வாழ்நாளில் பெரும்பகுதியினை தலைமறைவாகவும். சிறைகளிலும் கழித்துவிட்ட இந்த 77 வயது முதியவர், பிரபாகரனுடன் சென்னை மத்திய சிறைச்சாலையில் ஏழெட்டு மாதங்கள் இருந்திருக்கிறார்.

"நான்தான் தம்பிக்கு மாவோயிசத்தை அறிமுகப்படுத்தினேன். சில புத்தகங்களை அவருக்குக் கொடுத்தேன். மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப போராட்டங்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றி எடுத்துக் கூறினேன்," என்றார், கலியபெருமாள் நமக்களித்த ஒரு சிறப்புப்பேட்டியில்.

அது எவ்வளவு தூரம் உண்மை என்பது நமக்கு தெரியாது. ஆனால் 1983ல் சென்னை பாண்டி பஜார் தெருவில் புளோட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரனுடன் நடந்த துப்பாக்கிச் சண்டைக்குப் பிறகு, பிரபாகரன் சென்னைச் சிறையில் சில காலமிருந்தார். அப்போது கலியபெருமாளும் அங்கிருந்திருக்கிறார்.

தொடக்க காலத்திலிருந்தே கலியபெருமாள், அவருடைய சகாவாகவும், மாணவராகவுமிருந்த தமிழரசன் போன்றோருக்கு, ஈழ

## தமிழின உணர்வும் வீரப்பனும்

விடுதலைப்போராட்டம்,-குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் பெரும் உந்துதலாக இருந்து வந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு விடுதலைப்படை போன்ற அமைப்புக்களால் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. மக்களை அணி திரட்டாமல் ஆயுதப்போராட்டம் மூலமாக தமிழின விடுதலையைச் சாதிக்கலாம் என்று இவர்கள் தப்புக்கணக்கு போடுகிறார்கள் என்கிறார் ஒரு மார்க்சீய அறிஞர்.

விஷயம் என்னவென்றால் பாட்டாளி வர்க்கப் புரட்சியை, அல்லது சீனத்தில் நடந்தது போன்று விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுடன் இணைந்து உருவான புதிய ஜனநாயகப்புரட்சியினை இந்தியாவில் உருவாக்கும் முயற்சிகளில் தோல்வியுற்றார்கள் நக்சலைட்டுக்கள். அதாவது தீவிர கம்யூனிஸ்ட் குழுவினர்.

பிறகு இன ரீதியான கோஷங்களை முன்வைத்தால் மக்களைக் கவரமுடியலாம். அதன் மூலமாகவாவது ஏதோ ஒரு விதத்தில் சமூக மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என்று நம்புகிறார்கள், புரட்சிக்கு குறுக்கு வழிதேடுகிறார்கள். பாவம், இவர்கள் வெற்றி பெற இயலாது என்கிறார் மேலே குறிப்பிட்ட மார்க்சீய அறிஞர்.

ஆனால் கலியபெருமாளைக் கேளுங்கள், அவர் சொல்வார்-"புரட்சிக்கான காலம் கனிந்து கொண்டிருக்கிறது. இங்கும் இன விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. ஆளும் வர்க்கத்திற்குள்ளேயே பிளவு, அவர்கள் தங்களுக்குள் அடித்து மோதிக் கொண்டு, பலவீனமாகிக் கொண்டிருக்கின்றனர். வறுமையும் சுரண்டலும் மேலும் உக்கிரமாகிக் கொண்டு வருகின்றன. வெறுப்படைந்த மக்கள் ஆயுதப் போராட்டத்திற்கு தயாராகிவிட்டார்கள். தமிழ்நாட்டில் அந்த போராட்டத்திற்கு வீரப்பன் தலைமை தாங்குவார்! தமிழரசன் வாழ்க்கை கூட இவர்களுக்கெல்லாம் ஒரு பாடமாக வில்லை. கல்லூரியில் படிக்கும் போதே நக்சலைட் இயக்கத்தால் கவரப்பட்டு, பின்னர் தமிழின விடுதலை என்று முழங்கிய அவர், இறுதியில் எந்த மக்களுக்காக போராடுவதாக சொல்லிக் கொண்டாரோ, அவர்களாலேயே கொடுமையான முறையில் கொல்லப்பட்டார்.

1987ம் ஆண்டு செப்டெம்பர், மாதம் பொன்பரப்பி என்ற கிராமத்தில் ஒரு வங்கியைக் கொள்ளையடித்து விட்டு தப்பியோட முயற்சித்த போது, மக்களாலேயே பிடிக்கப்பட்டனர். தமிழரசன் மற்றும் அவரது கூட்டாளிகள் நால்வர். அங்கே பொலீசார் வந்து சேர்வதற்குள், மக்களுக்கும் இவர்களுக்கும் வாக்கு வாதம் முற்றி, ஐவரும் கல்லாலேயே அடித்துக் கொல்லப்பட்டனர். ஒரு கம்யூனிச புரட்சியாளனுக்கு அதைவிடவும் கொடுமையான முடிவும் உண்டோ. இன்னும் சிலர் சொல்லிக் கொள்கிறார்கள், மஃப்டியில்(சிவில் உடையில்) இருந்த பொலிசார் தான் அப்படிச் செய்தார்கள் என்று. ஆனால் அந்தப் படுகொலையில் பொது மக்களுக்கும் பங்கிருந்ததை மறுப்பதற்கில்லை.



ராஜ்குமார்

தமிழரசன் முதன் முதலில் கைது செய்யப்பட்ட போது கூட அவரைப் பிடித்துக் கொடுத்தது கூட பொதுமக்கள்தான். எதிரி ஒருவருடன் மோதிக் கொண்டிருந்தபோது, அந்தப் பகுதியிலிருந்தோர் அவரைப்பிடித்து விட்டார்கள் என்று புலவர் கலியபெருமாளே ஒத்துக்கொள்கிறார்.

தமிழரசன் புரட்சிக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்தார், என்பதெல்லாம் சரிதான். ஆனால் அவரால் தனது பணி என்ன என்பதை மக்களுக்கு புரியவைக்க முடியவில்லையே! மக்களின் மனநிலையினை அவரும் புரிந்து கொள்ளவில்லை. தமிழரசனின் சோகமுடிவிற்குப்பிறகு தமிழ்நாடு விடுதலைப்படை சிதறுண்டு போனது. வடமாவட்டங்களில் அதிகமாக வாழும் வன்னியர்களை-குறிப்பாக இளைஞர்களை-சாதியின் பெயரால் ஈர்ப்பது, கட்டைப்பஞ்சாயத்துச் செய்வது, ஏன் வழிப்பறிக்கொள்ளைகளில் ஈடுபடுவது என்றாகி தேய்ந்துபோன அத்தகைய குழுக்களில் ஒன்றுதான் தற்போது வீரப்பனுடன் கைகோர்த்திருப்பதாக சொல்லப்படுகிறது. மாறன் என்ற இளைஞரின் தலைமையில் செயல்படும் அந்தக் குழுவினர்தான் வீரப்பனைத் தங்கள் வழிக்கு இழுத்திருக்கிறார்கள் என்று செய்திகள் அடிபடுகின்றன.

வீரப்பன் ராஜ்குமாரைக்கடத்தி உலகப் புகழ் பெற்று, அத்தோடு நில்லாமல் தமிழினத்தைக்குறித்த கோரிக்கையை முன்வைத்திருப்பதால், தமிழின விடுதலைப்போரில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு விட்டதாக புளகாங்கிதம் அடைகிறார் கலியபெருமாள். நாம் அவரைப் பேட்டிகண்ட போது, உடனிருந்த ஒரு இளைஞர், தமிழ்நாடு விடுதலைப்படையின் அரசியல் முகமான தமிழ் நாடு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் கூறினார். எங்கள் பலம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமாக வளர்ந்து வருகிறது. காவல் துறை கூறுவதுபோல் நாங்கள் ஒன்றும் அடாவடிச்செயல்களில் ஈடுபடுவதில்லை. மாறாக அநீதிகளைக் களைய எங்களைத்தான் மக்கள் நாடுகிறார்கள். "சரி அப்படியானால் உங்களால் நன்மை பெற்ற பொதுமக்களை நாங்கள் சந்திக்க வேண்டும். அப்படி உங்கள் தலையீட்டால் நன்மைபெற்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று சொல்லுங்களேன்?" என்று கேட்டதற்கு அந்த இளைஞர் விழித்தார், தடுமாறினார் அப்படி எவரையும் அவர் இறுதிவரை அடையாளம் காட்டவில்லை. "சரி உங்கள் கட்சியின் அல்லது இராணுவத்தின் பலம் என்ன?" கேட்டதற்கு சற்றுத் தயங்கி, "300,400 பேராவது இருப்பார்கள்" என்றார். தமிழ்நாடு விடுதலைப்படை செயல்படும் பெரம்பலூர் மாவட்டத்தில் விசாரித்த போது, மிஞ்சிப்போனால் அந்தப்படையில் 20, 30 பேர் இருப்பார்கள் என்று தெரிந்தது. மௌனமாக, தார்மீக ஆதரவு காட்டுவோர், 100, 200 பேர் இருக்கலாம் அவ்வளவே. இவர்களை வைத்துக்கொண்டு எந்தக்காலத்தில் இவர்கள் தமிழினத்தை விடுவிக்கப்போகிறார்கள்.

ராஜ்குமார் விவகாரத்தின் காரணமாக இன்னும் 10 இளைஞர்கள் அவர்கள் பால் ஈர்க்கப்படலாம். அங்கிருக்கும் வறுமை, வேலையில்லாத்திண்டாட்டம் இவர்கள் பிரசாரங்களுக்கு சில வெற்றிகளை தேடித்தரலாம். தவிரவும் ராஜ்குமார் விடுதலைக்காக பெருந்தொகை கைமாறுகிறது. இல்லையென்று எல்லோரும் மறுக்கிறார்கள். ஆனால் நம்பத்தகுந்த வட்டாரங்கள் சிலகோடி ரூபாய் வீரப்பனை சென்றடைகிறது என்கிறார்கள். கோடியோ, லட்சமோ பெருந்தொகை என்பது உறுதி. அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வீரப்பன், மாறன் குழுவினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு முன்பு நெருக்கமாய் இருந்த தமிழ் தேச மீட்சிப் படையினர், நிறைய ஆயுதங்கள் வாங்கக் கூடும். மேலும் அதிக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடும். ஆயின் என்ன? காட்டைவிட்டு நாட்டிற்குள் வந்து அவர்களால் மக்களை ஒன்றுதிரட்டி, வெகுஜன போராட்டங்களில் ஈடுபடமுடியுமா என்றால் நிச்சயமில்லை. இன்னும் சில அதிரடி நடவடிக்கைகளில் அக்குழுக்கள் ஈடுபடலாம், அவ்வளவே. காட்டைவிட்டு வெளியே அடியெடுத்து வைத்தால் மூட்டைப்பூச்சியைப் போல அவர்கள் அனைவரையும் அரசு இயந்திரம் நசுக்கிவிடும்.

ராஜ்குமார் விடுதலைக்குப்பிறகு நிச்சயமாக, தமிழ் நாடு விடுதலைப்படை ஆதரவாளர்கள் மீது கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும் என்று இப்போதே கூறுகிறார்கள். ஒரு பாவமும் அறியாத கிராமத்து மக்கள் 51 பேர், வீரப்பனுக்கு உதவியதாக

**கானகன்**

சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள். தடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டு ஆண்டுக் கணக்கில் கர்நாடக சிறைகளில் வாடுகிறார்கள். அவர்கள் விடுதலையைக் கோர எந்த தமிழக அரசியல்வாதிக்கும் அக்கறை இல்லை, நேரமில்லை. இப்போது ராஜ்குமாரைக்கடத்தி அவர்களுக்குப் புதுவாழ்வு பிறக்கவழி செய்திருக்கிறார் வீரப்பன் என்பது உண்மைதான். அரசியல்வாதிகளின் கையாலாகாத்தனத்தை-கபட நாடகத்தை அவர் வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மூலமாக புரட்சி வந்துவிடும் என்று நினைப்பது பகல்கனவே. இந்தக் கனவுகளின் ஒரே விளைவு வட மாவட்ட மக்கள் பல்வேறு கொடுந்துயர்களை அனுபவிக்க இருக்கிறார்கள் என்பது தான் என்று மனம் வெதும்புறார் ஓர் ஆய்வாளர்.

---

**வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் பத்து பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 11

ஏதாவதோர் ஐரோப்பிய நாட்டில் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டு. அவர் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டால் அவர் கொழும்பில் தங்கியிருப்பதானால் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவராகிறார். இவர் வவுனியா போன்ற பிரதேசங்களுக்கும் செல்ல முடியாமலிருக்கும். அம்மாவட்டங்களில் எல்லாம் கடுமையான கட்டுப்பாடுகள் அமுலிலிருப்பதால் இவர்களால் அங்கெல்லாம் சுதந்திரமாக நடமாடமுடியாது. அங்குள்ள பொலிஸார் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் தயவில் தான் இத்தகைய திருப்பியனுப்பப்படுவோர் தங்கியிருக்க வேண்டும்.

கொழும்பில் கூட இத்தகைய நபர்கள் தனியார் தங்கு விடுதிகளில் கூட தங்க முடியாது. ஏனெனில் ஒரு பொலிஸ் பதிவுச் சீட்டினைப் பெற்றுக் கொள்வது இத்தகையோருக்கு மிகவும் சிரமமான காரியம். திருப்பியனுப்பப்பட்டோர்கள் பொலிஸாரிடம் பதிவுப்பத்திரம் பெறச் சென்றபோது, அவர் கைது செய்யப்பட்டதும் உண்டு. அம்பலவாணி குருபரன் என்பவர் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டமையினால் திருப்பியனுப்பப்பட்டவர். இவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறோம்.

பிறநாடுகளிலிருந்து தஞ்சம் நிராகரிக்கப்பட்டமையினால் நாடு திரும்பியவர்கள் சிலர் கொழும்பிலேயே தங்க விரும்புகின்றனர். ஆனால் பொலிஸார் அவர்களை கொழும்பிலிருந்து வெளியேறுமாறு அழுத்தம் கொடுக்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் இருக்கும் போது, திருப்பியனுப்பப்படுவோர் இந்த நாட்டில் எத்தகைய துன்பங்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அறிந்து பீதியும் பதற்றமும் அடைகின்றனர். இவ்வாறு திருப்பியனுப்பப்படுவோர் வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவது சகஜமாக நடைபெறுகிறது. இப்பொழுதெல்லாம் திருப்பியனுப்பப்படுவோர் கொழும்பில் ஏதாவதொரு வேலையில் சேர்ந்து கொள்வதற்கும் முடியாத நிலையிலுள்ளனர். ஏன் - கொழும்பு வாழ் தமிழர்களும் இங்கு ஒரு வேலையை சம்பாதித்துக் கொள்வதிலும் கூட பல சங்கடங்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களானால் ஒரு வேலையை பெறுவது மிக மிக கடினமானது. எங்களைப் போன்றவர்கள் கூட ஒரு தமிழரை வேலைக்கு அமர்த்துவதில் தயக்கம் காட்ட வேண்டியுள்ளது. அந்த நபர் கடந்த காலத்தில் ஏதாவதொரு குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தால் அவரை வேலைக்கு அமர்த்துபவர் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படும் ஒருவரை தங்களுடன் தங்க வைக்கவே வழக்கமாக எவரும் விரும்பமாட்டார்கள். குறிப்பிட்ட நபர் ஒரு தமிழராகவோ, ஒரு வயது குறைந்தவராகவோ இருந்தால் தமிழர்கள் வாழும் வீட்டில் கூட அவரைத் தங்கவைக்க தயக்கம் காட்டுவார்கள். குறிப்பிட்ட நபர் யார், எத் தகைய தொடர்புடையவர் என்பதுகூட தெரிந்திருக்காது. அவர் உறவினராக இருந்தாலும் கூட, அவர் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இரகசிய உறவு வைத்திருக்கலாம். எனவே அவருடைய உறவினர்கள் கூட தங்களுடைய வீட்டில் சேர்த்துக் கொள்ள முடியாமல் இருக்கும். மிக நெருக்கமான ஒருவர் புலிகளுடன் தொடர்பில்லாதவர் என்று நிரூபிப்பதற்கேற்ற சான்றுகள் இருந்தால் சில வேளைகளில் அவருக்கு தங்களுடன் தங்குவதற்கு இடமளிப்பார்கள். இல்லையேல் குறிப்பிட்ட நபரை தங்களுடன் சேர்த்துக் கொண்டமையினால் பிரச்சனைகளை எதிர்பார்க்க வேண்டியதுதான். ஆகவே இவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளாத நிலையில் இவர்கள் தனியார் விடுதிகளையே நாடவேண்டி வரும்.

**கொழும்புக்கு வெளியே தங்கியிருக்கும் திருப்பியனுப்பப்பட்ட நபரின் சங்கடங்கள்:**

திருப்பியனுப்பப்பட்ட ஒரு தமிழன், கொழும்புக்கு வெளியே தங்கியிருக்க நேர்ந்தால் அவர் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் மிகக் கடினமானவை. அவர்கள் இலங்கையிலுள்ள தங்கள் சொந்த இல்லத்திற்கே செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இருப்பார்கள். ஆனால் இத்தகையோர் வடக்குக்குச் செல்ல விரும்பினால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். அதுவும் பொலிஸார் மூலமே பெறப்பட வேண்டும். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கோ வவுனியாவுக்கோ செல்லும் ஒருவர் இத்தகைய அனுமதியைப் பெற்றேயாக வேண்டும். அவ்வாறு பெறப்படும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி ஒரு நாள் மட்டுமே தங்கியிருப்பதற்கேற்ற அனுமதியேயாகும்.

யாழ்ப்பாணத்திற்கு செல்வதானால் அனுமதிக்கு விண்ணப்பித்து சில மாதங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். இருப்பினும் மறைமுகமாக இலஞ்சம் கொடுத்தும் சிலர் அனுமதியைப் பெற்று விடுகின்றனர். இத்தகைய முறையைக் கைக்கொண்டு பலர் பணம் சம்பாதிக்கின்றனர். ஆனால் இது எல்லோருக்கும் சாத்தியமான முறையல்ல. ஏனெனில் திருப்பியனுப்பப்படுவோர் இத்தகைய இலஞ்சம் கொடுப்பதற்கு கையில் பணம் இல்லாத நிலையிலிருப்பார்கள். அதுமட்டு மல்லாமல் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கு விமானப் பயணச்சீட்டையும் பணம் கொடுத்துப் பெற வேண்டிய நிலையிலிருப்பார்கள்.

(இன்னும் வரும்)

அலசுவது - இராஜதந்திரி

# மக்கள் ஆணைகளை நிறைவேற்றாது கலைந்த பொ.ஜ.ஐ.மு. பாராளுமன்ற ஆட்சி

**ஆறு** ஆண்டுகால பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

ஆயினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டிருப்பதன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி தொடர்ந்து ஆட்சியதிகாரங்களில் செல்வாக்குச் செலுத்துவதாகவே இருக்கின்றது.

ஆறு வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை இந்த நாட்டுக்கு ஒரு சாபக்கேடு என்றே பொதுஜன ஐக்கிய முன்னணி கூறியிருந்தது.

பாராளுமன்ற ஆட்சியை மீளவும் பலப்படுத்தப்போவதாகவும், ஜனாதிபதி ஆட்சியை முற்றிலுமாக நீக்கிவிடப் போவதாகவும் பொது ஜன' ஐக்கிய முன்னணி கூறியிருந்தது.

ஆனால் நடந்ததோ வேறு. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படுவதற்குப் பதிலாக இருதடவைகள் ஜனாதிபதி ஆட்சியை பொதுஜன ஐக்கிய முன்னணி தனதாக்கிக் கொண்டுள்ளதுடன், அந்த ஆட்சியில் பெரிதும் சுகம் கண்டதாகவே அக் கட்சி இருந்துவருகின்றது.

இந்நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியைத் தொடர்ந்து தப்பவைத்துக் கொண்டுள்ள நிலையிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு 42 அரசியல் கட்சிகள் இத்தடவை பொதுத்தேர்தலில் போட்டியிடவிருக்கின்றன.

இது தவிர ஐந்துக்குமதிகமான தமிழ் அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தமது வேட்பாளர்களை நிறுத்தவிருக்கின்றன.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்குப் பகுதியை நோக்கித் தலைவைத்துப் படுக்கவும் தயங்கிய தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தலுக்கான நாள் குறிக்கப்பட்டதையடுத்து, வடக்கு-கிழக்கில் தமது தலைகளைக் காட்டத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் கடந்த ஆண்டில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற்றிருந்தது.

மேற்குறிப்பிட்ட இரு தேர்தல்களுக்கும் பல கோடிக் கணக்கான பணம் விரயமாக்கப்பட்டிருந்தது. ஆயினும் வன்முறைகளும், திருகுதாளங்களும் நிறைந்தவையாகவே அத்தேர்தல்கள் விளங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்ட மறுகணமே கொழும்பில் ஒரு கொலை வீழ்ந்துள்ளது.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)வின் உறுப்பினர் ஒருவர் தமது கட்சியின் சுவரொட்டியொன்றை ஒட்டிக் கொண்டிருந்தவேளை குண்டர்கள் சிலரினால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இதுமட்டுமல்ல. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரசியல் வன்முறைகள் சிறிதும், பெரிதுமாக வெடித்துள்ளதையும் அறிய முடிகின்றது.

கடந்தகாலத் தேர்தல்களின்போது வன்முறைகள் கட்டுமீறியவையாகவே இருந்தன. கொலை, தீவைப்பு, ஆட்கடத்தல், எனப்பல்வேறு ரகங்களிலும் தேர்தல் வன்முறைகள் பெரும் அடாவடித்தனத்தைக் கொண்டவையாக இருந்தன.

இதன்காரணமாகவே சர்வதேச சமூகம் கூட இலங்கையில் வன்முறைகளற்ற விதத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்பதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய சமூகத்தைச்சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். இவர்கள் இலங்கையிலுள்ள பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் முக்கியஸ்தர்களைச்சந்தித்து தேர்தல் நடைமுறைகள்குறித்து ஆராய்ந்திருந்தனர்.

எதிர்வரும் அக்டோபர்மாதத்தில் இடம் பெறவுள்ள பொதுத்தேர்தல் வன்முறைகளற்றதாக நீதியாகவும் தலையீடுகளற்றவகையில் சுதந்திரமாகவும் நடத்தப்படவேண்டுமென்பதிலேயே ஐரோப்பிய சமூகம் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் சுமார் நூறுபேரடங்கிய தேர்தல் அவதானிகள் குழுவொன்றையும் இலங்கைக்கு அனுப்பிவைக்கவும் ஐரோப்பிய சமூகம் உத்தேசித்துள்ளது.

எது எப்படியிருந்தபோதிலும் இத்தடவை தேர்தல்களத்தில் குதித்துள்ள அரசியல் கட்சிகள் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஓரிரு வாரங்கள் முன்னதாகவே ஏட்டிக்குப் போட்டியாக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தன.

இனவாதத்தை வெளிப்படுத்தும் கோஷங்கள் கூட அந்த ஆர்ப்பாட்டங்களில் வெளிவந்திருந்தன.

இந்நிலையில் எதிர்வரும்வாரங்களில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கும் போது, வன்முறைகளும் அதிகரிக்கும் அறிகுறிகளே பலமாகத் தெரிகின்றன.

இதேவேளை வடக்கு-கிழக்குப்பிரதேசங்களைப் பொறுத்தவரை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் தேர்தலில் குதிக்க முன்வந்துள்ளன.

ஐந்துக்கும்மேற்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் போட்டியிடவுள்ளன.

ஆ யினும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைச்சேர்ந்த அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களை வெறுமனே கொண்டிருக்க முடியுமே தவிர, எவ்விதத்திலும் பிரயோசனமாக எதனையும் சாதிக்க முடியாதென்பதையே கடந்தகால வடக்கு-கிழக்கு அரசியல் நடவடிக்கைகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை லட்சோப லட்சம் அப்பாவிமக்கள் அமைதியாகவும், கௌரவத்துடனும் உயிர்வாழ்வதற்காகவே பெரும் போராட்டங்களை அன்றாடம் நடத்திவரக்காணப்படுகின்றனர்.

இடம் பெயர்ந்த நிலையில் அகதிகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் இருந்து வருகின்றனர்.

இம் மக்கள் வேண்டுவதெல்லாம் நீடித்து நிலைக்கக் கூடிய இனப்பிரச்சனைத் தீர்வே தவிர, வேறெதுவுமல்ல. 1977ம் ஆண்டிலேயே இறுதித் தடவையாக வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் ஓர் ஆரோக்கியமான பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டிருந்தது.

அத்தேர்தலில் வடக்கு-கிழக்கு மக்கள் அனைவருமே ஏகோபித்தநிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை பெரும் பலத்துடன் கூடிய கட்சியாக பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று கொண்டிருந்த பலமென்பது பாராளுமன்றத்தில் அக்கட்சியை எதிர்க்கட்சியாகக்கூட விளங்கச் செய்திருந்தது.

ஆனால் அன்று ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசினால் அறிமுகஞ்செய்யப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிக்கு முன்பாக பாராளுமன்ற ஆட்சி வலுவிழந்துபோனதுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஓங்கட்டப்படலாயிற்று.

கடந்தவருடங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் குறிப்பாக வடக்கே நடத்தப்பட்ட தேர்தல்கள் என்பது குளறுபடியானவவையாகவும், பித்தலாட்டங்கள் நிறைந்தவையாகவுமே இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப்பிரதேசங்களில் பாராளுமன்றத் தேர்தல்கள் என்பது, அப்பிரதேசங்களில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளினது நலன்களைப் பேணுபவையாகவே



## "நவீன ஆயுதங்களினாலோ அதிகளவு ஆட்பலத்தினாலோ பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது" முன்னாள் நோர்வே பிரதமர் டாக்டர். பொன்ட்விக்

இருக்குமே தவிர வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதில் பாராளுமன்றத் தேர்தல்கள் உதவப்போவதில்லை என்பதையே நான்கறிய முடியும்.

ஆறுவருடங்களுக்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜனாதிபதி ஆட்சி, பாராளுமன்ற ஆட்சி என்பவற்றுக்காக போட்டியிட்டபோது வடக்கு-கிழக்கு மக்கள் சந்திரிகா அரசுமீது நிறையவே நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

யுத்த அனர்த்தங்கள் ஒரு முடிவுக்கு வந்து சுமுகமான நிலை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்தப்படுமென்றே அப்பிரதேச மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் சந்திரிகா அரசின் ஜனாதிபதி ஆட்சியினாலோ அல்லது பாராளுமன்ற ஆட்சியினாலோ வடக்கு-கிழக்குப் பிரச்சனையை எவ்விதத்திலும் தீர்க்கமுடியாமலே போயிருந்தது.

தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பதாக உத்தேச அரசியலமைப்பு மசோதா என்ற விடயத்தை சந்திரிகா அரசு முன்வைத்திருந்தது.

அம்மசோதா அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் அதேசமயம், இனப்பிரச்சனைத் தீர்வுக்குரிய விடயங்களைக் கொண்டிருந்ததென்றே சந்திரிகா அரசு கூறியிருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தமசோதாவையும், அதிலிருந்த இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த விடயங்களையும் நிராகரித்திருந்தன.

அதேசமயம் மேற்படி உத்தேச அரசியலமைப்பு மசோதா பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்கு தென்னிலங்கைக் கட்சிகள் பலவும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

அரசியல் கட்சிகள் மட்டுமன்றி பௌத்த மகா சங்கத்தினரும் தமது கடும் எதிர்ப்பை வெளிப்டுத்தியிருந்தனர்.

எனவே கடந்த ஆறு வருடகாலத்தில் ஜனாதிபதி ஆட்சி மூலமாகவோ அல்லது பாராளுமன்ற ஆட்சி மூலமாகவோ வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு வெற்றிகரமான முறையில் தீர்வு காணப்படாமல் போயிருந்ததையே அவதானிக்க முடிந்தது.

இலங்கையின் பிரதான 'ஆட்கொல்லிப் பிரச்சனையாக இருக்கும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தோல்வியைத் தழுவியுள்ள நிலையிலேயே முன்னாள் நோர்வே பிரதம மந்திரியான டாக்டர் ஜெல் மெக்னே பொன்ட்விக் இலங்கை வந்திருந்தார்.

காலஞ்சென்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் ஞாபகார்த்த உரையை வழங்கும் விதத்திலேயே டாக்டர் பொன்ட்விக் கொழும்பு வந்திருந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்திலேயே காலஞ்சென்ற ஏ.ஸி.எஸ்.ஹமீத் ஞாபகார்த்த உரை இடம்பெற்றிருந்தது.

அப்போது பேசிய முன்னாள் நோர்வே பிரதம மந்திரி பொன்ட்விக் கருத்து வெளியிடுகையில் நவீன ஆயுதங்களினாலோ அல்லது அதிகளவு ஆட்பலத்தினாலோ இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாதென்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஹமீத் ஞாபகார்த்த உரையை நிகழ்த்திய முன்னாள் நோர்வே பிரதமர் டாக்டர் பொன்ட்விக் மட்டுமல்ல, இலங்கைப் பிரச்சனையைப் பரிசீலிக்கும் எந்தவொரு சர்வதேச முக்கியஸ்தரும் இராணுவத்தீர்வல்ல. அரசியல் தீர்வே இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முடியுமென்பதைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையில் இனப்பிரச்சனையைத் தீர்க்க மட்டுமல்ல, எந்தவொரு பிரச்சனையையும் கையாளுவதற்கு அரசியல் நடவடிக்கைகள் ஆரோக்கியமானவையாகவும், மக்களின் அபிமானத்தைப் பெற்றவையாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் இலங்கையில் அரசியல் என்பது தார்ந்துபோய் துர்நாற்றமெடுப்பதாகவே இருக்கின்றது. இனப்பிரச்சனைத் தீர்வுக்காக முயற்சித்தவர்களில் காலஞ்சென்ற அரசியல் முக்கியஸ்தர் ஏ.ஸி.எஸ்.ஹமீத்தும் ஒருவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் பேச்சுவார்த்தைகளைக் கூட ஏ.ஸி.எஸ்.ஹமீத் நடத்தியிருந்தார்.

ஆனால் அப்பேச்சுவார்த்தை முறிவடைந்திருந்தது. ஆயினும் காலஞ்சென்ற முன்னாள் வெளி விவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி அரசியல் தீர்வொன்றை எட்ட முடியுமென்பதில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

கடந்த ஆண்டில் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பதாகக் கூட லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தையும் ஏ.ஸி.எஸ்.ஹமீத் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்புக் குறித்து இலங்கை திரும்பியதும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் ஏ.ஸி.எஸ்.ஹமீத் கூறியிருந்தார்.

புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதிலேயே ஏ.ஸி.எஸ்.ஹமீத் ஆர்வங்காட்டியிருந்தார்.

ஆனால் அவரால் மீளவும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட முடியாதவாறு காலன் அவரது உயிரைப்பறித்து விட்டிருந்தான்.

எது எப்படியிருந்தபோதிலும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதான அரசியல் கட்சிகள் உட்பட ஏனைய அரசியல் கட்சிகள் பலத்த போட்டிக்கே தம்மைத் தயார்படுத்துபவையாக இருக்கும்.

ஆயினும் 'புதிய மொந்தையின் பழைய கள்' என்பது போல புதிய பாராளுமன்றம் கூட்டப்படும் போது கூட உளுத்துப்போன பழைய அரசியல் நடவடிக்கைகளே மீளவும் தோற்றம் பெறுமே தவிர புதிதாக எதனையும் எந்தவொரு விடயத்திலும் எதிர்பார்ப்பதற்கில்லை என்றே கருதலாம்.

## அதிரடி அய்யாத்துரை



***காலஞ்சென்ற ஐ.தே.க. பிரமுகர்*** ஏ.ஸீ.எஸ். ஹமீத் ஞாபகார்த்த பேருரை பண்டார நாயக்கா மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. முன்னாள் நோர்வே பிரதமர் பொன்ட்விக் உரை நிகழ்த்தினார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் மேடையில் அருகருகே இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர். இக்காட்சியைப் படமாக்க படப்பிடிப்பாளர்கள் அவ்விருவரும் முன்பாகக் கூடினர். மறுகணமே ஏதோ முன்பின் தெரியாதவர்கள் போல இருவருமே ஆளுக்கொரு பக்கமாகத் தலையைத் திருப்பிக் கொண்டனர். தேர்தல் காலத்தில் வீண் வம்பில்மாட்டிக் கொள்ளாமல் தவிர்ப்பது போல அவர்கள் கமராக்கள் முன்பாக ஜாக்கிரதை யோடிருந்தனர்.

***நாவடக்கம் என்பது*** பேசும் பொருளைக் குறிப்பிடுவதில் மட்டுமல்ல. குரலோசையிலும் இருக்க வேண்டும். அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஒரு தமிழ் விரிவுரையாளர் தம்முன்பாக ஒலி வாங்கியிருப்பதையும் மறந்து சத்தமிட்டுப் பேசினர். அவரது சத்தமே அதிகம். ஒலிபெருக்கியூடாக அதுமேலும் அதிகமாயிற்று. பேச்சாற்றல் என்பது சொற் சுவை, பொருட்சுவையில் மட்டுமல்ல. பேசுகின்றதை வெளிப்படுத்தும் குரல் ஓசையில் கூட காட்டுக் கூச்சல் இல்லாமல் பக்குவமாக வெளிவர வேண்டும்.

***புதிய இராணுவத்தளபதியாகப்*** புதியவர் பதவி யேற்கிறார். ஆனால் இராணுவத் தலைமைப் பீடத்தில் சிலருக்கு இந்த நியமனத்தில் திருப்தியில்லை. அதனால் நேர காலத்தோட தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கான கடிதங்களையும் அவர்கள் தயாரித்துள்ளனராம்.

***பிபிஸி தமிழோசையில் மட்டுமல்ல.*** ஆங்கிலச் சேவையிலும் தமிழர்கள் பணியாற்றத் தொடங்கியுள்ளனர். கச்சிதமான ஆங்கில உச்சரிப்போடு தமிழர்கள் பலர் பிபிஸி ஆங்கிலச் சேவையின் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளர் களாகத் தோன்றிவருகின்றனர்.

***அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பலொன்றில்*** சென்ற ரஷ்ய கடற்படைவீரர்கள் 118 பேர் அந்நீர்மூழ்கிக்கப்பல் விபத்துக்குள்ளானதால் மரணத்தைத் தழுவியுள்ளனர். வட துருவக் கடலில் நடந்த இவ்விபத்தில் சிக்கியோரை உடனடியாகக் காப்பாற்றத் தவறிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின் நாட்டுமக்களால் பெரும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளார். அவ்விபத்தினால் ஆழ்கடல் அடியிலும் அணுசக்தி கதிரியக்கம் பரவி கடல் வாழ் உயிரினங்களை அழித்துவிடலாமென்று அஞ்சப்படுகிறது0 அழிவுகள் அவலங்கள் தரையில் மட்டுமல்ல. கடலுக்கடியில் கூட நிகழ்வதாகவே இருக்கின்றது.

# பொத்தேரி மாந்த்ரீகன்

இருகூரான்

*மாந்த்ரீகம் ஓர் உன்னதமான வித்தை. தெய்வீகத் தன்மை வாய்ந்தது ஒளியைத் தரவல்ல தீ ஊரையும் அழிக்கும் அல்லவா? அதே போல மாந்த்ரீகத்தையும் பக்குவமாகக் கையாளவேண்டும். சுயநல நோக்கோடு தன் சுய இச்சைகளைப் பூர்த்தி செய்ய மாந்த்ரீக சக்தியைப் பயன்படுத்தினால் விபரீத பலன் தான் கிட்டும்.*

மானம்பொட்டல் பனங்காட்டுக்குள் நரிகள் ஊளையிட ஆரம்பித்து விட்டன.

மயிலம் கிராமத்தில் யாரும் தூங்க முடியவில்லை.

"என்னங்க.... என்னது சத்தம்?" என்று பெண்கள் பீதியுற்று தங்கள் கணவர்களை உலுக்க....

எழுந்தவர்களில் சிலர் பயந்தும்.... சிலர் தயங்கியும்...

"என்னய்யா வீரசாமி.... என்னது இப்படி ஊளையிடுது?" என்று பக்கத்து வீட்டுக்காரர்களிடம் பேசி தெம்பு பட்டும்....

"ஏதாவது பண்ணி வெரட்டணும்ய்யா...எடுத்தா வெட்டறிவாளை!" என்கிற தைரியம் பெற்றும்....

சிறிது நேரத்தில்

ஊரே கூடி விட்டது வேகமாக. ஆளாளுக்கு ஒரு தீப்பந்தம்... சிலரிடம் வெட்டறிவாள், வல்லயம், குத்தீட்டி....

அவர்களை முந்திக் கொண்டு ஊர் நாய்களும் ஓடின.

எல்லாரும் திரண்டு போய் மானம் பொட்டல் பனங்காட்டுக்குள் நாழைந்த போது... அங்கே நரியுமில்லை; நாதியுமில்லை.

ஓங்கி உயர்ந்த பனை மரங்களே ஓலைகளைச் சிலுப்பிக் கொண்டு நின்றன.

"பந்தத்தைப் பார்த்ததுமே எங்காவது பம்மியிருக்கும்! அப்படி அப்படியே உட்காருங்கள்... மறுபடியும் வரும்!"

எல்லாரும் அமர்ந்தார்கள். பந்தங்கள் மண்ணில் தேய்த்து அணைக்கப்பட்டன. வெகுநேரம் காத்திருந்தும் பயனில்லை. வெறுத்துப் போய் திரும்பினார்கள்.

ஊருக்குள் வரும்போது எதிரில் ஒரு அரிக்கன் விளக்குடன் சித்தய்யன் தன்னந்தனியாக நின்றிருந்தான்.

"என்ன சித்தய்யா, இங்கே நிற்கறே.." ஊர் பெரிசு ஒன்று கேட்டது.

"ஒன்னுமில்லை பெரிசு! பொத்தெரி மாந்த்ரீகனை பார்த்துவிட்டு வருகிறேன். என் மாமா பொண்ணை நம்ம ஒரு கெழட்டுப் பய என்னமோ செய்து, மூளையை மழுங்கடிச்சிட்டானில்லே... அதை சரிப்படுத்தத்தான் அவரை பார்த்து விட்டு வருகிறேன். ஆமா, நீங்கள்லாம் எங்கே போயிட்டு வருகிறீர்கள்?" என்று கேட்டான் சித்தய்யன்.

"அதை ஏம்பா கெட்கற...? திடீரென்று நடு ஜாமத்துல நரி ஊளையிடற சத்தம் கேட்டுது. தொல்லை தாங்க முடியாம அவைகளை விரட்டியடிக்க கிளம்பினோம். ஆனா, நாங்க போனபோது, ஊளையிடும் சத்தம் நின்று விட்டது. அதான் திரும்பி வருகிறோம்," என்றான் கூட்டத்திலிருந்த ஒருவன்.

"உங்கள்லே யாருக்கும் மனோ தைரியம் இல்லே. இனியும் எத்தனை நாளைக்கு அந்தக் கெழட்டுப் பயலுக்காக பயந்துட்டு இருக்கிறது! ரெண்டுல ஒரு முடிவு தெரியணும். அவன் சிண்டை அறுத்து மயிலம் பூமிக்கு வடக்கே நாய விரட்டி அடிக்கிற மாதிரி அடிக்கணும்!"

சித்தய்யனின் பேச்சு பலரையும் பீதிக்குள்ளாக்கிற்று.

ஒருவர் இறுகிப் போய் கீதோபதேசம் செய்தார்: "பாருப்பா! பகல்லே பாத்துப் பேசு.... ராத்திரியிலே எதுவும் பேசாதேன்னு சொல்லுவாங்க! நீ பாட்டுக்கு கண்டதை உளறி வைக்காதே! எங்க பெண்டு பிள்ளைங்க நிம்மதி கெட்டுப் போகும்..."

"இனியும் என்னண்ணே நிம்மதி கெடறது? இதுக்கு மேலே இனியும் என்ன ஆகணும்ங்கறீங்க?" கத்தினான் சித்தய்யன்.

இத்தனை வயசானப்புறமும் துளி கூட பெரிய மனுஷத் தனமில்லாமல் இளிக்கிறவன் அந்தக் 'கெழவன்' என்று ஊர் முழுக்க பின்னால் பேசும்! ஆனால், அந்த கெழவனிடம் நேருக்கு நேர் நின்று பேசயாருக்கும் துணிச்சலில்லை. காரணம் வேறொன்றுமில்லை....

அவருக்கு மந்திர வித்தைகள் அத்தனையும் அத்துபடி என்று பேச பயந்து நின்றார்கள் எல்லாரும்.

வசியம் என்றால் என்ன?

விருப்பப்பட்ட பொருள் விரும்பியவனை வந்து அடையச் செய்கிற விஷயம்!

இதில் பொருள் என்று சொல்லப்படுவது எதுவுமாக இருக்கலாம். பொதுவாகவே மனித விருப்பங்கள் மூன்று முக்கியமானவற்றை மோகித்து நிற்பவை. அவை மண்-பொன்-பெண் என்பன. மண் என்பது தாவர ஜங்கம சொத்துக்களையும், பொன் என்பது பொருளாதார சம்பத்துக்களையும் குறிப்பது. அது போலத்தான் 'பெண்' என்பதுவும்.

பெண் என்றாலே பேதை, பெதும்மை, அரிவை, தெரிவை, மங்கை, மடந்தை, பேரிளம் பெண் என்று எல்லா பருவத்தினரையும் குறிப்பன. எனவே தான் மயிலம் மக்களுக்கு ஒரு மனப்பயம். "இந்த 'கெழப்பய' இடம் போனால் என்ன? வலம் போனா என்ன? மேல விழுந்து புடுங்கக் கூடாது?" என்கிற மாதிரியான பீதி.

அப்படியும் அவ்வப்போது இந்தக் கிழட்டு மாந்த்ரீகன் கண்ணுக்குப் 'பெண்' என்கிற அம்சம் சட்டென்று எதிரில் மாட்டித் திக்கு முக்காடுவதுண்டு. முன்னைப் போலில்லை என்றாலும் முதியவனை இன்னமும் பழைய சபலம் விட்டுப் போகவில்லை.

"அடடே... நீ அன்னம்மா பொண்ணில்லே... அப்படியே அவ முகம்!" என்று கண்களைக் கூர்த்துக் கொண்டு நிற்பான். அந்தச் சிறுமியோ பாதிப் பயத்தாலும் மீதிப் பீதியாலும்.... பாவாடை நனைய நிற்பாள்! உடனே கிழவன் கேட்கிற கேள்வி

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கறியா?"

திக்கு முக்காடும் அந்தக் குழந்தை!

"சரி... நீ பெரிய மனுஷி ஆனப்புறம் வா..." என்று அந்தக் குழந்தையின் கன்னத்தைத் தொட்டுச் செல்லம் கொஞ்சுவான்.

விட்டால் போதுமென்று ஓடும் அந்தக் குழந்தை!

இதை எங்கிருந்தாவது யாரும் கவனிக்க நேர்ந்தால் உடனே குழந்தையை எச்சரிப்பார்கள், "இதப்பாரும்மா! இனி நீ அந்தக் கெழுப்பய முன்னாலே ஜென்மத்துக்கும் வராதே! வந்தாலும் நிக்காதே.... நின்னு பேசினா... உன் கால் மண்ணை எடுத்து உன்னை மயக்கிடுவான்...."

பயந்து போகும் குழந்தை பிரிதாபமாக் கேட்கும்...

"மயக்கி..."

"மயக்கி உன்னையே அழிச்சுடுவான்!" என்பார்கள். வேறு எப்படி இதைப் பற்றிப் பிஞ்சு உள்ளத்திற்கு விளக்குவது? நாளைக்கு இதே நிலை, சொல்லுகிறவன் குழந்தைக்கும் வரலாம்.



இதையெல்லாம் கேட்ட குழந்தை பீதியாலேயே புழுங்கிப் போய் பிறகு எப்போதாவது வெளியே வர நேரிட்டால், கிழவன் கண்ணுக்கு படாமல் ஏதாவது சந்துக்குள் போய் பதுங்கிப் பதுங்கித் தப்பியோடப் பார்க்கும்.

இதனால் தான் ஊர் மொத்தமும் அஞ்சுகிறது.

இனி மரணம்.

தான் விரும்பிய ஒன்று தனக்கு எந்த வழிகளிலும் கிடைக்காது என்று தெரிந்த பிறகு அதனை ஸ்தம்பித்துப் போகச் செய்வது! மரமோ மட்டையோ ஸ்தம்பித்தால் அது பிரச்சனை இல்லை. ஆனால், மனிதன் ஸ்தம்பித்தால்?

உயிரை ஓரிரு வினாடியில் அழித்துப் போடுவதை விடக் கொடுமையானது, மூளை மழுங்கிப் போகிற மரண மந்திரம்.

கிழவன் பழங்காலத்தில் இப்படிப் பல பேரை வசியம் பண்ணினதாகவும், மூளைய மழுங்கடித்துப் பிரமை பிடிக்க வைத்ததாகவும் பல கதைகள் ஊருக்குள் வழங்குவதுண்டு.

இப்போது சித்தய்யனின் கோபத்துக்குக் காரணமும், முத்துக்குட்டி மூளை மழுங்கிப் பேதலித்து நிற்கிற அவலமே. இதைச் சரிப்படுத்தத்தான் அவன் பொத்தெரிபோனான். போன இடத்தில் சகலத்தையும் சொன்னான்.

"சரி பொண்ணை எதிர்த்த வீட்டுக்குள்ளே போட்டுப் பூட்டி வச்சுட்டுபோங்க...! ரெண்டு நாள் அப்படியே இருக்கட்டு. அவளே கதவத் தட்டி.... திறக்கச் சொல்ற வரைக்கும் அன்னந் தண்ணி வேண்டாம்! பொண்ணுக்கு அம்மா மட்டும் இங்கேயே தங்கிருக்கட்டும். ஆம்பளைங்க போயிடுங்க...." என்றார் அந்த மாந்த்ரீகன்.

"அன்னாந்தண்ணி இல்லேன்னா செத்துப் போயிடமாட்டாளா?"

"சாகற நிலைமை வராது தைரியமாப் போங்க! இவளுக்குள்ளே ஒரு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கு! அது முதல்லே விலகணும். அப்புறம் தான் மூளையிலே ஏற்பட்டிருக்கற ஸ்தம்பிதமும் அகலும்..." கேட்டதுமே பற்களைக் கடித்தாள் முத்துக்குட்டியின் அம்மா.

"அப்பவே அந்தக் கெழட்டு நாய், கை ரெண்டையும் வெட்டி நெருப்பிலே போட மயிலத்திலே ஆம்பளைங்களே இல்லாமப் போயிட்டாங்களே!" என்று கதறினாள் அவள்.

முத்துக்குட்டியின் அப்பாவும் சரி... சித்தய்யனும் சரி அப்போது தலையைக் குனிந்தபடி தான் நின்றார்கள்.

"சொன்னபடி பொண்ணை உள்ளே வச்சுப் பூட்டிட்டு வாங்கம்மா... எனக்குக் கொஞ்ச நேரம் ஒரு பூஜை போட வேண்டியிருக்கு!" சொல்லிவிட்டு குடும்பியையும் அவிட்டு விட்டு எழுந்தார் பொத்தேரி மாந்த்ரீகன். அது சடை சடையாக முதுகெல்லாம் விரிந்து ஆடியது! முத்துக்குட்டியை அவர் சொன்னபடி அறையில் பூட்டி விட்டு, பூஜை முடிகிற வரை எல்லாரும் வாசலிலேயே காத்திருந்தார்கள்.

"இனி நீங்க ரெண்டு பேரும் ஊருக்குப் போகலாம். ஆனா, இங்கே, பொண்ணு தங்கியிருக்கிற விஷயம் மட்டும் யாருக்கும் தெரிய வேண்டாம்!"

எச்சரித்தார் பொத்தேரி மாந்த்ரீகன்.

அதனால் தான் சித்தய்யனும், பொத்தெரி போனதை மட்டும் சொல்லி முடிப்பதற்குள் மறுபடியும் நரிகளின் ஊளையிடல்.... ஊரையே ஒரு கலக்குகலக்கிறது.

"வாங்க எல்லாரும்..." கூப்பிட்டான்

[அடுத்தவாரமும் வரும்]

## இரட்டை மகிழ்ச்சியில் கவர்ச்சி நடிகை



'பேஸிக் இன்ஸ்டிங்ட்' (அடிப்படை உணர்வு) என்ற ஆங்கிலப் படத்தின் கவர்ச்சியை வாரி வழங்கியதன் மூலம் உலகப் புகழ்பெற்றவர் ஷெரன் ஸ்டோன். பலரது தூக்கத்தைக் கலைத்த இந்தக் கனவு தேவதை, சமீபகாலமாக தூக்கமில்லாமல் தவித்து வந்தார்.

இதற்குக் காரணம் ஷெரனால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாதாம். பிரபல பத்திரிகையாளரான ஃபில் பிரான்ஸ்ரீன் என்பவரைச் சில வருடங்களுக்கு முன் திருமணம் செய்து கொண்டார் ஷெரன் ஸ்டோன்.

இன்னமும் குழந்தைக்குத் தாயாக முடியவில்லையே என்ற வருத்தத்தில் தவித்த இவர் அண்மையில் குழந்தை ஒன்றைத் தத்தெடுத்துள்ளார்.

குழந்தையுடன் மனநிம்மதியுடன் வாழும் ஷெரன் ஸ்டோன் இரட்டை மகிழ்ச்சியில் இருக்கிறார். குழந்தையுடன் பொழுதுபோக்குவதும், சக்கை போடு போட்ட, 'பேஸிக் இன்ஸ்டிங்ட்' படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிக்க அழைப்பு வந்ததுமே ஷெரனின் இரட்டை மகிழ்ச்சிக்குக் காரணம்.

## பெண்களுக்கெதிராகப் பெரும் கொடுமை

உலகம் வேகமாக எல்லாவற்றிலும் முன்னேறிக் கொண்டிருந்தாலும் பெண்களுக்கெதிராக கொடுமைகள் மட்டும் எங்கும் குறையவே இல்லை போலிருக்கிறது.

பாகிஸ்தானைச் சேர்ந்த சிந்து மாகாணத்தில் உள்ள தார் மாவட்டத்தில் இருக்கும் சந்தையில் பெண்கள், ஆடு, மாடுகளைப் போன்று விற்கப்படுகிறார்கள்.

அவர்களை வாங்கவருபவர்களும் மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பது போல், அந்தப் பெண்களின் உடல் முழுவதும் சோதித்துப் பார்க்கிறார்களாம். அப்போது பலர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் படுகிறார்களாம்.

அதன் பிறகே அவர்களுக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறதாம் இந்தத் தகவலை பாகிஸ்தானின் அன்ஸார் பர்னி சர்வதேச பெண்கள் நல அறக்கட்டளை நிறுவனத் துணைத்தலைவர் ஷகீன் பர்னி தெரிவித்துள்ளார்.

## விவாகரத்து வில்லன்



பதின்மூன்று வருடங்களுக்கு முன் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட ராமராஜன்-நளினி நட்சத்திரத்தம்பதி விவாகரத்துச் செய்து கொண்டார்கள். 12 வயது இரட்டைக்குழந்தைகளுக்குப் பெற்றோரான இவர்களது விவாகரத்துக்குக் காரணமான வில்லன் யார்?

டி.ராஜேந்திரால் 'உயிருள்ள வரை உஷா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் நளினி. ஆனால் இதற்கு முன் ஆனந்தி என்ற பெயரில் ரஜினி நடித்த 'ராணுவ வீரன்' உட்பட சில படங்களில் சிறிய வேடங்களில் நடித்தவர்.

நளினி நடிகையாக வளர்ந்து கொண்டிருந்தபோது நளினிக்காகப் படவாய்ப்புத் தேடியவர் சுப்பையா என்பவர். தனது வளர்ச்சிக்கு உதவிய சுப்பையாவுக்கு நன்றியாகத் தனது தங்கையை மணமுடித்துக் கொடுத்தார் நளினி.

இந்நிலையில் ராமராஜன் உதவி இயக்குநராகப் பணியாற்றிய படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது நளினிக்கும் ராமராஜனுக்கும் காதல் மலர்ந்தது. இவர்களது காதல் நளினியின் குடும்பத்திற்கும். சுப்பையாவுக்கும் அறவே பிடிக்கவில்லை.

ஆனாலும் எதிர்ப்புக்களை மீறி நளினியும் ராமராஜனும் தம்பதிகளாயினர். நளினியின் பெற்றோர் நாளடையில் சமாதானமாயினர். ஆனால் சுப்பையா மட்டும் மாறவேயில்லை.

பல தடவைகள் நளினிக்கும் ராமராஜனுக்கும் பிரச்சனைகள் ஏற்பட சுப்பையா காரணமாக இருந்தார். நளினி பக்கத்தில் இருந்து சுப்பையா சூழ்ச்சி வேலைகளைச் செய்து கொண்டிருக்க, ராமராஜனை ஆறுதல் படுத்துவதாகக் கூறிக் கொண்டு ஒரு நடன இயக்குநர் 'வேறு' வழிக்கு இட்டுச் சென்றார்.

இதைக் கண்டித்து நளினி பல முறை சண்டை போட்டிருக்கிறார். இதுவே இப்போது இவர்களது பிரிவுக்குக் காரணமாகிவிட்டது.

## செல்லிடப் பேசிக்குத் தடை

பிரிட்டன் அரசின் கல்வித்துறை அங்குள்ள ஆசிரியர்களுக்கு 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் செல்லிடப்பேசி (செல்ஃபோன்) பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளது.

இப்படி உத்தரவு போடுவதற்கு என்ன காரணம்? கடந்த வருடம் கிறிஸ்துமஸ் பரிசாகப் பல பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு செல்லிடப்பேசிகளைப் பரிசளித்துள்ளார்கள். இதனால் ஒவ்வொருவரும் செல்லிடப் பேசியுடன் தான் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

16 வயதுக்குட்பட்டவர்களின் மண்டையோடு மிகவும் லேசாக இருப்பதால் செல்லிடப்பேசியில் இருந்து வரும் சத்தம் அதிகமாக உள்ளே சென்று விடுகிறது. அதனால் பல நோய்கள் உண்டாகக் காரணமாக இருக்கிறது.

இதுதான் தடையுத்தரவுக்குக் காரணம்.

## வருமானவரி கட்டியவர்களுக்கு விருது



அண்மையில் இந்தியாவின் மும்பை நகரில் வித்தியாசமான விழா ஒன்று நடந்தது. எந்த விதமான தில்லுமுல்லும் இல்லாமல் சரியாக அவ்வப்போது வருமான வரி கட்டியவர்களுக்கு விருது வழங்கிய விழா தான் அது.

பல இலட்ச ரூபாய்கள் வருமான வரி கட்டிய மிகப் பிரபலமானவர்களுக்கு மட்டும்தான் அந்த விருது வழங்கப் பட்டது. விருதின் பெயர் 'ராஷ்ட்ரீய சன்மான்.'

150 பேருக்கு அந்த விருது வழங்கப்பட்டது. சினிமா மற்றும் கிரிக்கெட் மூலம் பல கோடி ரூபாய்கள் சம்பாதிக்கும் நடிக நடிகையர் மற்றும் வீரர்களில் அந்த விருதைப் பெற்றவர்கள் இருவர் மட்டுமே.

ஒருவர் இந்தித் திரையுலக நட்சத்திரம் ஜூஹி சாவ்லா. மற்றவர் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கார்.

## குளித்தபடி குடிப்பு


→ ஆர்ப்பாட்டத்தில் இறங்குபவர்களை, பொலிசார் தண்ணீரை வேகமாகப்பாய்ச்சியடித்து விரட்டுவார்கள். இதுவும் அப்படியொரு சம்பவம் தான் போலும் என்று நினைப்பீர்கள்.

உங்கள் நினைப்புத் தவறு. இங்கே தண்ணீருக்குப் பதிலாகப் பெரிய பைப் மூலம் பீய்ச்சியடிப்பது பியர் பானத்தை. என்ன நாக்குச் சப்புக் கொட்டுகிறதா? (நீங்கள் குடிமகனாக இருந்தால் மட்டுமே)

எதற்காக இப்படி அநியாயத்திற்கு இந்தப் பானத்தைக் கொட்டுகிறார்கள் என்கிறீர்களா?

ஃபிரான்ஸ் நாட்டின் ஸ்ட்ராஸ்பேர்க் பகுதியில் இருந்த மதுத்தொழிற்சாலை ஒன்றை மூடிவிட்டனர். இதை எதிர்த்து அங்கு வேலை பார்த்த தொழிலாளர்கள் நடத்திய விநோத போராட்டம் தான் இது.


அத்தொழிற்சாலையில் இருந்த 20 ஆயிரம் லீட்டர் பியரை பைப் மூலம் பீய்ச்சியடிக்க, சில தொழிலாளர்கள் அதில் குளித்தார்கள். அவர்களில் சிலர் குளித்தபடி குடிக்கவும் செய்தார்கள்.




## மினி ஸ்கூட்டர்

↓ கால்களில் சக்கரங்களைப் பூட்டிக் கொண்டு உருட்டிச் செல்லும் ஸ்கேட்டிங் என்று நினைத்து விடாதீர்கள். இது தனி ஒருவர் செல்லக்கூடிய ஸ்கேட்டிங் ஸ்கூட்டர்.

6 இறாத்தல் மட்டுமே நிறையுள்ள இந்த மினி ஸ்கூட்டர்கள் அவுஸ்திரேலியா, ஃபிரான்ஸ், இங்கிலாந்து, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் பாவனைக்கு வந்து விட்டன.



விரைவில் அமெரிக்கா, ஜெர்மனியிலும் வரவிருக்கும் இந்த ஸ்கூட்டர்களின் வேகம் மணித்தியாலத்தில் 13 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது. இரைச்சல் கிடையாது. இதனால் சூழல் மாசடையும் புகை வராது. அத்துடன் பயணம் முடிந்ததும் மூன்றாக மடித்து கைப்பையில் வைத்துச் செல்லலாம்.



## அரைகுறைப்படம்

தகவல் பெட்டி

↑ அண்மையில் ஏற்பட்ட சந்திரகிரகணத்தின்போது, அரைகுறையாகத் தெரிந்த சந்திரனின் நிலைதான் இது. சந்திரகிரகணத்தின் படிப்படியான நிலையினை உலக மகா கோபுரங்களில் ஒன்றான மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள ட்வின் டவரின் பின்னணியில் படமாக்கியிருக்கிறார்கள்.

## முட்டி மோதிய முரட்டுக் காளை


→ ஜல்லிக்கட்டுக்காளையை அடக்கும் போட்டி ஸ்பெயின் நாட்டில் சகஜமாக நடைபெறும் ஒரு வீரவிளையாட்டாகும்.

இந்தக் காளை அடக்கும் போட்டியில் ஸ்பெயின் நாட்டு வீரர்கள் மட்டுமன்றி, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் கலந்து கொள்வார்கள்.

உயிரைத் துச்சமென மதித்து, இவ் விளையாட்டில் பங்குபெறும் வீரர்கள் சில வேளைகளில் முரட்டுக் காளைகளால் முட்டி மோதித் தாக்கப்பட்டு இறப்பதும் உண்டு. பலர் படுகாயமடைவதும் உண்டு.

சமீபத்தில் ஸ்பெயினில் நடந்த காளை அடக்கும் போட்டியில் பல நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் கலந்துக் கொண்டார்கள். இப்போட்டியில் முரட்டுக்காளை ஒன்றின் காலில் சிக்கினார் மெக்ஸிக்கோ வீரர் எலாலியோ லோபஸ்.

சில நிமிடப் போராட்டத்திற்குப் பின் அதிஷ்டவசமாகக் காயங்களுடன் தப்பினார் லோபஸ்.



திரையுலக மறுபக்கம் (162)

தமிழ்நாட்டிலிருந்து பயன்

# முன்னாள் நடிகைகளின் இந்நாள் வேலைகள்

முன்னாள் பிரபல நடிகைகள் இருவர் இப்போது தமிழ் நாட்டின் சென்னையின் முக்கிய பகுதியைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு கோலோச்சி வருகிறார்கள்.

ஒருவர் பழம் பெரும் 'நிர்மலமான வெற்றி' நடிகை இவரது அக்காவின் மகள் தெலுங்குத் திரையுலகின் அதிரடி நாயகியாக வலம் வந்தவர். அக்கா மகள் 'ஓகோ' வென்று இருந்தாலும் முன்னாள் நடிகையான சித்தி இப்படிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

அடுத்தவர் 'ஏக் தோ தீன்...' பாடல் மூலம் புகழ் பெற்ற இந்தி நட்சத்திரத்தின் பெயரில் முன்பாதியைத் தன் பெயராகக் கொண்டவர். இவர் வீட்டில் ஏகப்பட்ட புதுமுகங்கள். அதுமட்டுமன்றி தமிழ்த்திரையுலகின் பிரபலமான மற்றும் பிரபலமாகாத நடிகைகளும் தென்படுவார்கள்.

இவரது வீட்டுக்கு எப்போதும் கார்கள் வருவதும் போவதுமாக இருக்கும். இவரது வாடிக்கையாளர்கள் இந்த நடிகைதான் வேண்டும் என்றால் சில மணிநேரத்திற்குள் அவர்கள் அங்கு ஆஜராகி விடுவார்கள்.

இவ்வளவு வெளிப்படையாக இவர்களால் நடத்தப்படும் இந்த விவகாரங்கள் காவல்துறையின் காதுகளுக்கு எட்டி, எதுவும் செய்ய மாட்டார்களா?

ஒருவருமே ஒன்றும் செய்யமாட்டார்கள். காரணம் காவல்துறையில் பெரிய பெரிய அதிகாரிகள் அந்த முன்னாள் நடிகைக்கு மிகவும் வேண்டப்பட்டவர்கள்.

அதுமட்டுமன்றி இப்போது ஆட்சியிலிருக்கும் தமிழக அரசியல்வாதி ஒருவரும் நடிகைக்கு மிகமிக நெருக்கமானவர். இதனால் அந்த முன்னாள் நடிகையையோ அவர் செய்யும் காரியங்களையோ எவராலும் தட்டிக் கேட்க முடியவில்லை.

அண்மையில் நடிகையின் பகுதிக்கு புதிய காவல்துறை அதிகாரி ஒருவர் வந்திருந்தார். அப்பகுதியில் அந்த நடிகையின் விவரங்களைக் கேள்விப்பட்டார்.


கோபத்தில் துள்ளியெழுந்த அந்தப் புதிய அதிகாரி, 'எப்படியும் அவர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தாமல் விடமாட்டேன்' என்று சபதம் செய்யாத குறையாகப் புறப்பட்டார்.

புதிய காவல்துறை அதிகாரி தன் இருப்பிடத்திற்கு வருவதைத் தனக்கு விசுவாசமானவர்கள் மூலம் அறிந்து கொண்டார் அந்த நடிகை. அதற்கு முன்னேற்பாடாக ஒரு காரியத்தையும் செய்தார்.

சிறிது நேரத்தில் நடிகையின் வீட்டுக்குள் நுழைந்த அந்தப் புதிய அதிகாரி, தன் உத்தியோகத் தோரணையைக் காட்டத் தொடங்கினார்.

அடுத்த விநாடி, அந்த முன்னாள் நடிகை கையசைக்க, உள்ளேயிருந்து இன்றைய பிரபல 'தேவ' நடிகை வெளியே வந்தார்.

அவ்வளவு தான் அந்தப் புதிய அதிகாரியும் அம்பேல்.


பிரபு-மும்தாஜ்
படம் : பட்ஜெட் பத்மநாபன்

# பிஸியான ஷகீலா

மலையாளத்தில் மீண்டும் 'அந்த'மாதிரியான படங்கள் வெளிவர ஆரம்பித்து விட்டன.

பிரபல மலையாள நடிகைகள் 'அந்த' மாதிரியான படங்களில் நடித்துத் தமது பெயர்களைக் கெடுத்துக் கொள்ள விரும்பாததால் சின்னச் சின்ன வேடங்களில் நடிக்கும் நடிகைகளைத் தேடிப் படையெடுக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்த ஷகிலா-அந்தல சகோதரிகள் தமிழில வாய்ப்பில்லாமல் மீண்டும் மலையாளத்திற்குச் சென்று 'அந்த' மாதிரி படங்களில் நடித்தார்கள்.

இவர்களில் ஷகீலா நடிக்க 'கின்னாரத்தும்பி' என்ற மலையாளப் படம் பெரும் வெற்றிகரமாக ஓட ஷகீலா இப்போது பிஸியான நடிகையாகி விட்டார்.

மலையாளத்தில் அதிக படங்களைக் கைவசம் வைத்திருக்கும் ஒரே நடிகையும் இவர் தான்.

# ரம்யாவுக்கு மறுப்பு

சொந்த படம் தயாரிக்க முயற்சியில் ... சென்று, தனது படத்தை இயக்கி ... மாறு கேட்டார் ரம்யா கிருஷ்ணன். இவர் ... இராமநாராயணனிடமும் பின் கே.எஸ்.ரவிக்குமாரிடமும் சென்று ... இவர்கள் இருவரும் இப்போதைக்கு முடியாது என்று மறு... கடைசியில் ரம்யாகிருஷ்ணன் தயாரிக்கும் படத்தை சுந்தர்.சி இயக்குவார் என...

# கண்ணீரில் ரோஜா

'உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்' படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக ரோஜாவுக்கு சிறந்த நடிகை விருதை வழங்கியுள்ளது தமிழக அரசு.

இந்த விருதுடன் வழங்கும் தங்கப் பதக்கத்தை ரோஜாவுக்கு வழங்கக் கூடாது என்று ரோஜாவை நீதிமன்றத்துக்கு இழுக்க போகிறார் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

இந்தப் பதக்கத்தை வாங்கி ஏலத்திற்கு விட்டுத் தனக்கு ரோஜா கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்டிருக்கிறார் போதரா.

இது பற்றி ரோஜா கண்ணீருடன் கூறியது, "என்னைத் திரையுலகில் இருந்தே விரட்டப்போவதாக சவால் விட்டிருக்கிறார் அந்த ஆள். இது பற்றி நடிகர் சங்கத்திடம் புகார் செய்திருக்கிறேன்"

# நடிகையின் புது பிஸ்...

சில வருடங்களுக்கு முன் தமிழில் ... நடிகையாகத் திகழ்ந்தவர் ... மார்க்கெட் மங்கியதும் சென்னையில் ... ஒரு பெரிய உணவகத்தை ஆரம்பித்... அவ்வப்போது அந்த உணவகத்தி... யம்மா(அதுதாங்க சுகன்யா)அதிரடி விஜ... இதன் காரணமாக அந்த உணவக... மாகிவிட்...

# அருண்குமார் நடி...

அருண்குமார்-ரம்பா நடித்து வரும் 'அ... இன்னமும் முடிந்தபாடில்லை. இந்நேரத்தி... நடிக்கப் புதிய படம் ஒன்று தொடங்கப்பட... படத்தின் பெயர் 'புத்தன்'. தொடர்ந்து... அருண்குமாருக்கு ஜோடியாக தில்... ரகுவரன், மான்டர் பிரின்ஸ் உட்பட ... இப்படத்தின் கதை, திரைக்க... இயக்குகிறார் வி.சி.வடிவுடையான் ... இவர் பலமுன்னணி இயக்குநர்களிட... இயக்குநராகப் பணியாற்றியவர் 'ஒவ்வொரு இளைஞனும்' 'புத்தனா'க...




உமா
படம் : கடல் பூக்கள்


பிரசாந்த்-லைலா
படம் : பார்த்தேன் ரசித்தேன்

# சொந்தக் குரலில் பாடிய ஹுஸைனி

'கண் மணி உனக்காக', 'ஜெயம்' போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கும் இஷாக் ஹுஸைனி தற்போது கதாநாயகனாக நடித்து வரும் படம் 'பூவே பெண் பூவே'. இதில் கதாநாயகியாக 'சேது' அபிதா நடிக்கிறார்.

இப்படத்திற்காக முதன்முறையாக சொந்தக்குரலில் பாடியுள்ளார் இஷாக் ஹுஸைனி.

'கொக்கோ கோலா சாரல் மழையே...
கொக்கி போடும் காதல் விழியே...'

என்று தொடங்கும் சூரியதாசன் என்பவரின் வரிகளுக்கு சபேஷ் முரளி இரட்டையர்கள் இசையமைத்துள்ளார்கள்.

புருஷோத்தமன் என்பவர் இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

# பிரியதர்ஷன் இயக்கும் 'சிநேகிதியே...'

பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் நடிகைகள் மட்டுமே நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய 5 மொழிகளில் தயாராகும் இப்படத்தின் தமிழ்ப்பதிப்புக்கு 'சிநேகிதியே...' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இப்படத்தில் ஜோதிகா, தபு, ஷர்மிளா(ராணி முகர்ஜி(ராணி முகர்ஜியின் தங்கை) இஷிதா அருண்(இந்திப்பாடகி இலா அருணின் மகள்) தீப்தி பட்நாகர், லட்சுமி, மனோரமா, வடிவுக்கரசி, சுகுமாரி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இந்தியத் திரையுலக வரலாற்றிலேயே முதன் முறையாகப் பெண்கள் மட்டுமே நடிக்கும் இப்படத்தில் திரைக்கதை வசனத்தை எழுதியிருப்பவர் 'வல்லரசு' பட இயக்குநர் மகாராஜன்.

ஜீவா ஒளிப்பதிவு செய்ய வைரமுத்துவின் பாடல்களுக்கு வித்யாசாகர் இசையமைக்கிறார்.

# வடிவேலுவின் 'இமேஜ்' பயம்

'குடும்பத்தைப் பற்றிக்கேட்டால் பேட்டி கிடையாது' என்று நிருபர்களுக்கு கூறி வருகிறார் நகைச்சுவை நடிகர் வடிவேலு. அவரது குடும்பத்தில் அப்படி என்ன மர்மம்? 'வடிவேலுவுக்கு திருமண வயதில் பெண்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லி விட்டால், தனக்கு வயது அதிகம் என்று நினைத்து விடுவார்கள். இதனால் தன் 'இமேஜ்' போய் மார்க்கெட் விழுந்து விடும் என்று பயந்து தான் யாருக்கும் வடிவேலு பேட்டி கொடுப்பதில்லை' என்று தெரிவித்துள்ளார் அவருடன் கூட நடிக்கும் நடிகர் ஒருவர்.

## ...டிக்கும் 'புத்தன்'

...அனபுடன்' படத்தின் படப்பிடிப்புகள் ... அருண்குமார் கதாநாயகனாக ...ள்ளது.

...தை மாற்றிக் கொண்டு நடிக்கும் ... உன்னி நடிக்கவுள்ளார். மேலும் ... நடிக்கிறார்கள். ...கதை, வசனம் எழுதி ... புதியவர். ... உதவி ...

வாழ ஆசைப்படுகிறான் ஆனால் அவனை வாழ விடாமல் சூழ்நிலைகள் எப்படிச் சீரழிக்கின்றன? என்ற கதைக் கருவைக் கொண்டு உருவாகிறது இந்தப்படம்.



## மினி சினி

✪ இயக்குநர்-நடிகர் மௌலி நீண்ட இடைவெளிக்குப் பின் தமிழ்ப் படம் ஒன்றை இயக்கப்போகிறார். கமல் கதாநாயகனாக நடிக்கவிருக்கும் இப்படத்தைக் கமலே சொந்தமாகத் தயாரிக்கிறார்.

✪ இராம நாராயணனின் 'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா' படத்திற்குப் பின் குழந்தை பிறந்ததால் சிறிது காலம் நடிக்காமல் இருந்தார் ஊர்வசி. இப்போது விசு இயக்கி நடிக்கும் 'சிகாமணி ரமாமணி' படம் மூலம் மறுபடி நடிக்கிறார்.

✪ கன்னடப் படம் ஒன்றில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார் இந்தி நடிகை மாதுரி டிக்ஷித். ராஜேந்திரசிங் என்பவர் இயக்கும் இப்படத்தில் முக்கிய வேடம் ஒன்றில் பிரபுதேவாவும் நடிக்கவுள்ளார்.

✪ இந்தியில் 'நாயக்' படத்தை இயக்கி வரும் ஷங்கர், இப்படத்தில் இடம்பெறும் 'ஷக்கலக்க பேபி..' பாடலுக்குத் தமிழில் நடனமாடிய சுஷ்மிதா சென்னையே ஆடவைக்கவுள்ளார்.

✪ விஜய்-வனிதா விஜயகுமார் நடித்த 'சந்திரலேகா' படத்தின் இயக்குநரும் நடிகருமான நம்பிராஜனின் மகள் சத்யா, பாரதிராஜாவின் 'கடல்பூக்கள்' படத்தின் மூலம் பாடகியாக அறிமுகமாகிறார்.

✪ முரளி-ஜோதிகா ஜோடியாக நடிக்க 'கந்தவேல்' என்ற புதிய படத்தில் 'சேது' அபிதா இரண்டாவது நாயகியாக நடிப்பதற்கு ஒப்பந்தமாகி இருந்தார். இப்போது அபிதா இப்படத்தில் நடிக்க மறுத்து விட்டார்.

✪ அரவிந்தசாமிக்கு ஜோடியாக 'புதையல்' படத்தில் அறிமுகமான சாக்ஷி, அதன் பின் ஓரிரு தமிழ்ப்படங்களில் நடித்து விட்டுத் தெலுங்குக்குச் சென்றார். இப்போது விஜயகாந்திற்கு ஜோடியாக 'வாஞ்சிநாதன்' படத்தில் நடிக்கிறார்.

✪ விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தை லட்சுமி மூவி மேக்கர்ஸ் பட நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்திற்காக 12 தலைப்புக்களை எழுதி வைத்திருக்கிறார் இயக்குநர் விக்ரமன்.

## ரஜினியின் பட வசனம்

"பாம்புக்கு பல்லுல பலம்
மானுக்கு கொம்புல பலம்
கருடனுக்கு கண்ணுல பலம்
சிங்கத்துக்கு காலுல பலம்
ஆனா இந்த ராயல சீமாராமண்ண சௌத்ரிக்கு உடம்பு முழுக்க பலம்"

இப்படி ஒரு வசனம் ரஜினி கதை, திரைக்கதை, வசனம் எழுதி, மோகன்பாபு நடிக்கும் 'ராயல சீமா ராமண்ணா சௌத்ரி' என்ற தெலுங்குப் படத்தில் அடிக்கடி இடம்பெறுகிறது.

ரஜினியின் இந்த வசனம் மிகப் பிரபலமாகும் என்று எல்லாரிடமும் கூறி வருகிறார் மோகன்பாபு.

## அம்மா வேடத்தில் நளினி

ராமராஜனை 13 வருடங்களுக்கு முன் காதலித்துக் கைப்பிடித்துக் கொண்ட நளினி திருமணத்திற்குப் பின் நடிப்புக்கு முழுக்குப் போட்டிருந்தார்.

இப்போது ராமராஜனிடமிருந்து விவாகரத்துப் பெற்றிருக்கும் நளினிக்கு மறுபடி சினிமா ஆசை வந்திருக்கிறது.

மணிவண்ணன் இயக்கிய பல படங்களில் கதாநாயகியாக நடித்த நளினிக்கு, இப்போது மணிவண்ணனுக்கு ஜோடியாக நடிக்க ஒரு படத்தில் அழைப்பு வந்திருக்கிறது.

## முத்தம் இல்லாத படம்

கமல் நடித்த படங்களைத் தெலுங்கில் வெளியிடும் உரிமையைப் பெரும்பாலும் வாங்குபவர் ஏ.எம்.ரத்னம். இப்போது கமல் நடித்து இறுதிக் கட்டத்தில் இருக்கும் 'தெனாலி' படத்தின் தெலுங்கு உரிமையை பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் வாங்கியுள்ளார். 'தெனாலி' தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் தெலுங்கிலும் வெளியாகவுள்ளது. கமலின் படங்கள் தெலுங்கில் மொழிமாற்றப்படும்போது கமலுக்குக் குரல்கொடுப்பவர் எஸ்.பி.பாலசுப்ரமணியம். 'தெனாலி' படத்தை அவரே வாங்கி, கமலுக்காக அவரே குரல் கொடுக்கிறார். 'தெனாலி'யின் தெலுங்கு உரிமையை இரண்டரைக் கோடி ரூபா கொடுத்து வாங்கியுள்ளார் எஸ்.பி.பி.

முக்கியமான செய்தியொன்று: வழக்கமாக கமல் படங்களில் இடம்பெறும் முத்தக்காட்சிகள் 'தெனாலி'யில் இல்லை.

## அக்காவின் ஆலோசனை

"படத்தில் உடை விஷயத்தில் டைரக்டர் எது சொன்னாலும் மறுக்காமல் 'செய்' என்று 'கருத்தம்மா' ராஜஸ்ரீ அவரது தங்கை பாபிக்குக் கட்டளையிட்டுள்ளார்.

டி.ராஜேந்தரின் 'சொன்னால்தான் காதலா' படத்தில் பாபி நடித்து வருகிறார். தான் முதல் படத்திலேயே இழுத்துப் போர்த்திக் கொண்டு நடித்ததால் தனக்கு புதுப்பட வாய்ப்புக்கள் வரவில்லை. தன்னைப் போன்று வாய்ப்புக்களின்றி இருக்காமல் இருக்க, உடை விஷயத்தில் தாராளமாக இருக்கும்படி கூறியுள்ளார் ராஜஸ்ரீ.



ராஜா-தேவயானி
படம் : கண்ணுக்குக் கண்ணாக




## காதோடு சொல்லுகிறோம்

இளம் ரசிகைகளை 'அலைபாய' வைத்த நாயகன் தற்போது நடித்து வரும் 'பளிச்சிடும்' பெயரைக் கொண்ட படத்தின் படப்பிடிப்புகளுக்கு காதல் மனைவியை அழைத்து வருகிறாராம். படப்பிடிப்புத் தளத்தில் 'அதைக் கொண்டுவா... இதைக் கொண்டுவா....' என்று அடிக்கடி எதையாவது கேட்டுத் தொல்லை கொடுத்து வருகிறாராம் நடிகரின் மனைவி.

முன்பொரு காலத்தில் 'வாலி' நடிகையுடன் நட்பாக இருந்தார் நகைச்சுவை 'வண்ண' நடிகர். நடிகை ஓரிரு படங்களில் நாயகியாக நடிக்க ஆரம்பித்ததும் 'வண்ண' நடிகருடனான நட்பை வெட்டிக் கொண்டார். நடிகைக்கு இப்போது படங்கள் இல்லாததால் நட்பைப் புதுப்பிக்க அவருக்குத் தூது விட்டாராம் நடிகர். 'மம்மி ஃபிரியாத்தான் இருக்கு. பேசிப்பாருங்க' என்று மூக்குடைத்து விட்டாராம் 'வாலி' நடிகை.

இரண்டெழுத்துப் பூ நடிகை கோர்ட் படி ஏறிய கதை எல்லாரும் அறிந்ததே. இதில் பலர் அறியாத சங்கதி ஒன்றும் உள்ளது: பூ நடிகைக்குப் பிடிக்காத சில நட்சத்திரங்களே, நடிகைக்கெதிராக வழக்குத் தொடுத்த தயாரிப்பாளரை அவ்வப்போது உசுப்பேற்றி நடிகைக்குத் தொல்லை கொடுக்கச் செய்தனராம்.

இதுவரை காலமும் 'கார்' நடிகருடன் நடிக்கக் கூடாது என்று முட்டுக்கட்டை போட்டு வந்தாராம் 'சிம்ம' நடிகையின் நடனக் காதலர். இப்போது இவர்களது காதலில் விரிசல் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, நடன காதலரை வெறுப்பேற்றுவதற்காக, 'கார்' நடிகருடன் ஜோடியாக நடிக்க, நடிகருக்குத் தூது விட்டு வருகிறாராம் 'சிம்ம' நடிகை.

## சின்னத்திரையில் ரிச்சா

சன்.டி.வி. மூலம்

'சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'இப்படிக்குத் தென்றல்' முதல் பாகமும் இரண்டாவது பாகமும் முடிவடைந்து விட்டன.

இப்போது 'இப்படிக்குத்தென்றல்' மூன்றாம் பாகம் 'பணம் பெண் பாசம்' என்ற பெயரில் சன்.டி.வியில் ஒளிபரப்பட்டு வருகிறது. விரைவில் இங்கும் ஒளிபரப்பாகலாம்.

'பணம் பெண் பாசம்' தொடரில் 'நிழல்கள்' ரவி கதாநாயகனாகவும் அவரது மகளாக கதாநாயகி வேடத்தில் ரிச்சாவும் நடிக்கின்றனர். ரிச்சா 'உயிரோடு உயிராக' படத்தில் அஜித்குமாருக்கு ஜோடியாக நடித்தவர்.

## மறுபடியும் சிரஞ்சீவி

தெலுங்குபடவுலகின் சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி நடித்த படங்கள் தொடர்ந்து தோல்வியைத் தழுவ அவர் முதலிடத்தில் இருந்து இறங்கினார். நீண்ட இடைவெளிக்குப் பின் சிரஞ்சீவி என்ற இவர் பெயரில் நடித்த படம் அண்மையில் வெளியாகி வெற்றிகரமாக ஓடுகிறது.

இதன் மூலம் விட்ட இடத்தைப் பிடித்து விட்ட சிரஞ்சீவிக்குப் பின்னால் தயாரிப்பாளர்கள் கூட்டம் துரத்தியபடி இருக்கிறது.

## விஜய் படம் சாதனை

இந்த வருடம் வெளியாகி வெள்ளி விழாக் கொண்டாடிய படங்களில் வசூல் சாதனை படைத்திருக்கிறது விஜய்-ஜோதிகா நடித்துள்ள 'குஷி' படம்.

சென்னையில் 'குஷி' திரையிடப்பட்ட திரையரங்குகளில் ஒன்றான 'உதயம்' திரையரங்கில் மட்டும் 49 நாட்களில் சுமார் 31 இலட்சம் இந்திய ரூபாய் வசூலாகியுள்ளது.

## அதிர்ச்சித் தோல்வி

மலையாளத்தில் தொடர்ந்து வெற்றிப்படங்களைக் கொடுத்து வந்த மோகன்லாலுக்குச் சின்னச் சறுக்கல்.

இவர் அண்மையில் நடித்து வெளியான 'ஸ்ரதா' என்ற படம் படுதோல்வியடைந்துள்ளது. இதில் மோகன்லாலுக்கு ஜோடியாக ஷோபனா நடித்திருந்தார். படத்தை ஐ.வி.சசி இயக்கினார்.

இந்தப்படத்தின் தோல்வி மோகன்லாலுக்கும், சசிக்கும் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ராசியான ராம்கி

படவாய்ப்புக்களில்லாமல் வீட்டில் இருந்த ராம்கியை அழைத்து வந்து 'பாளையத்து அம்மன்' படத்தில் நாயகனாக்கினார் இராமநாராயணன்.

படத்தின் பெரும்பகுதிப் படப்பிடிப்புக்கள் முடிவடைந்து விட்டன. இதற்குள் இப்படம் இரண்டு கோடி ரூபாய்க்கு வியாபாரமாகியுள்ளது. இதனால் ராம்கிக்குப் புதிய படவாய்ப்புக்கள் வரத்தொடங்கியுள்ளன.

## முக்கோணம்

சத்யராஜ்
ரோஜா
ரம்யாகிருஷ்ணன்

# உலகப் (புகழ்பெற்ற) அழகிகள் படம்



உலக அழகிகள் பட்டம் இந்திய அழகிகளுக்குக் கிடைப்பது இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. சுஷ்மிதா சென்னில் ஆரம்பித்து லாரா தத்தா வரை தொடர்கிறது.

படத்தில் 'மிஸ் யுனிவேர்ஸ்' (பிரபஞ்சம்) 2000 லாரா தத்தாவைத் தவிர உலக அழகிகள் பட்டம் வென்ற 4 பேரை ஒன்றாக அமர வைத்துப் படம் பிடித்திருக்கிறது ஓர் இந்திய ஆங்கில சஞ்சிகை.

படத்தில் இடமிருந்து வலமாக ஐஸ்வர்யாராய் (உலக அழகி-1994), சுஸ்மிதா சென் (பிரபஞ்ச அழகி 1994), யுக்தாமுகி (உலக அழகி 1999), டயானா ஹெய்டன் (உலக அழகி 1997), புன்னகைத்தபடி இருக்கின்றனர்.

## ஆதி மூலம்

அப்பா அப்பா நான் யாரோ
அம்மா அம்மா நான் யாரோ
எப்போதென்னைப் படைத்தார்கள்
எங்கே இருந்து நான் வந்தேன்!
***
அப்பா உன்னைக் கொடுத்தாராம்
அம்மா உன்னைப்படைத்தாளாம்
அப்போதேத்தான் நீ வந்தாய்
அழகுப்பிள்ளை நீ யானாய்!
***
அம்மா அப்பா நம்மால் தான்
அழகாய் நானும் உருவானால்
அப்பா அம்மா இருவரையும்
அன்றே தந்தவர் யாரம்மா?
***
அப்பாவுக்கொரு பெற்றோராம்
அம்மாவுக்கொரு பெற்றோராம்
தப்பில்லாமல் அவராலே
தரணியில் வந்தவர்யாரம்மா?
***
அம்மாவுக்கும் அம்மாக்கள்
அவர்களுக்கு முன்னே பெரியோர்கள்
ஆயிரம் பேர்கள் அப்போது
ஆரம்ப அம்மா எப்போது?
***
முதலாம் அம்மா அப்பாவே
மூலம் என்றார் பெரியோர்கள்
அதனால் தானே பெரியோர்கள்
ஆதிமூலம் என்றார்கள்!
***
ஆதிமூலம் முதல் மூலம்
அதற்குமுன்னே எதுவுமில்லை
நீதி மூலம் நிலை மூலம்
நீண்ட காலத்தத்துவமாம்!
***
அனைத்தும் வந்தது எதனாலே
ஆதி மூலம் தன்னாலே
நினைத்துப் பார்த்தால் உலகினிலே
நீதி மூலம் அவன் தானே?
***
கண்ணே பாப்பா மறக்காதே
கடவுள் என்பது அவன் தானே!
மண்ணும் வானும் அவனே தான்
மானிடத் தத்துவம் அவனேதான்!
***
இதனால் தானே மனிதரெல்லாம்
இறைவன் உண்டு என்கிறார்
குதலை மொழியே என் கண்ணே
கோவிலில் சென்று காண்பாயே!

தோ.ஜேக்கப் விக்டோரியா-அக்கரபத்தனை.

## சிறையிருந்த சீதை!

இதயத்தை
இரும்பாகக்கொண்டவளே!
இன்றுடன்
எட்டாண்டுகளாகின்றன
என்னிதயத்தில்–உனை
இருத்திய நாள்!
அன்று
மனதைப்பிடித்தேன்
மடியைக் கேட்கவில்லை;
ஏனென்றால்
நான் காதலித்தது
உன் சரீரத்தை–அல்ல
இதயத்தை!
மனம்
காதலித்துப்பார் என்றது
காதலித்தேன்–
காதலிக்கப்பட்டேன்!
அன்று
என் இதயத்தில்
சீதையாக சிறையிருந்து
இன்று
சிம்ரானாக அலைகிறாய்!
காரணம்
என் இதயத்தில்
இருந்த ஓட்டையை
இப்போதுதான்
அறிகிறேன்!

கோவிலூரான்.

## தொலை – ஜி.எஸ்.ரி

முகவரி தராத
என் டெலி:போன் குயிலே
நீயாவது நலமா?
நான் இன்னும் நலமில்லை;
உன்முதல்–
'ஹலோ'விற்குப்பிறகு.
***
நீ காற்றில் இசைந்து
காதில் ஊதுகிறாய்....
தோழி,
என் சுவாசம் தொலைந்தது
அந்தக் காற்றில்
இன்னும்–
தொக்கி தவிக்கிறது!
***
சுவாசம்–நீ
தென்றலாய் வருவாயா?
புயலாகத் தெறிப்பாயா?
***
உன் அழைப்பு
மணி ஓசைகளில்
நான்–
சிலிர்த்துக் கிடக்கிறேன்!
***
இப்போதெல்லாம்
உணவு உடையைப் போல்
தொலைபேசியும்
அவசியமென நினைக்கிறேன்!
***
.......!
என்றெல்லாம்
நேற்று எழுதியிருந்தேன்.
***
இன்று தான்–
எனக்கு தொலைபேசி
பட்டியல் வந்தது
மன்னிக்கவும்
தொலைபேசிக்கு
ஜி.எஸ்.ரி.யும் உண்டு!
***
பண்டங்கள் சேவைகள் வரி
காதலுக்குமா?
***
இந்த நாட்டில்
வரி விதிக்கும்
காதல் எனக்கு வேண்டாம்!
***
மன்னித்து விடு
இந்த அரசை!
மறந்து விடு! என்னை!
***
இனி அழைக்காதே!
என்னால் உனக்கும்
வரி செலுத்த முடியாது!

தஸ்ரிப்-அக்கரைப்பற்று.

## நல்லோரை நாடு

மன்னிப்பதென்பதும்
மறப்பதென்பதும்
மனிதனின் பண்பில்
மிக உயர்வாம்....!
***
உன்னிப்பாய் உன்னுள்ளே
வைத்திரு நீ..!
உன் எதிர்காலம்
உயர்வு பெற....
***
தவறினைச் செய்தவன்
நல்லவன் தான்....!
தவறை அறியாமல் செய்தால்
தவறுக்குத் தண்டனை
மன்னிப்புத்தானே...?
அவனும் திருந்திடுவான்....!
நல்ல பண்புகளை
மதித்திருந்தால்
நல்லோர் என்னும்
உறவினா உனைநாடி....
வெல்லத்தைச் சுற்றும்
எறும்புகளைப் போல்
விரைந்து வருவர்
நம்மை விரும்பியுமே...!

பீ.எம்.ஹலீம்-கல்முனை.

## கண்டுகொண்டேன்

இந்த இதமான....
இரவு வேளையில்....
இனியவளின்....
கூந்தலைக் கண்டேன்...!
***
அந்த வானில்....
நட்சத்திரமாய்–அவள்...
கண்கள்–எனைப்
பார்த்துச் சிரிக்கக்....
கண்டேன்...!
***
அழகு வானு(லு)க்கு....
வணக்கம் சொல்லி....
உலாவரும் நிலா.... அவள்....
வதனம் போலவும்....
கண்டேன்....!
***
அது....! அவள்....
யாரும் பாராமல்....
தோழிகளுக்கிடையே....
ஒளிந்து–எனைப் பார்த்து....
புன்னகை உதிர்த்துவதைப் போல....
***
மேகங்களுக்கிடையே... நிலா....
ஒளிந்து ஓடிக் கொண்டிருந்ததைக்....
'கண்டுகொண்டேன்'....
'கண்டுகொண்டேன்'....!

ந.பாலுமகேந்திரா-காரைதீவு-08.

## ஒலிக்கட்டும் வீரமுரசு

முரசுக்கு என் முதற்கவி
நசுங்கும் என் தமிழுக்கு
முழுமூச்சாய் சேவை செய்ய
என் கோடி வாழ்த்துக்கள்
வீழ்ந்த தமிழினத்தை
எழுத்தினால் எழுப்பிட
எழுந்தவன் ரமேஷ்
வீழ்த்தினர் வஞ்சகர்
வீழ்ந்திடுமா எம்மினம்
வீழ்த்திட முடியுமா
இவர்களால்?
விழவிழ எழுமினம்
நீதிக்காய் வாழ
அநீதியை எதிர்
தமிழனின் அவலத்தை
எட்டுத்திக்கும் ஒலிக்க
வீரமுடன் என்
முதற்கண் வாழ்த்துகள்

பாலையூற்று-வி.மாதவன்.

## பேனா நண்பர்கள்



பெயர்: டி. சிவகுமார்
வயது: 20
முகவரி: 137, மலிபன் வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எஸ். சந்திரகுமாரி.
வயது: 22
முகவரி: புகையிரத நிலைய விடுதி, குட்செட் வீதி, வவுனியா.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

27.08.2000 முதல் 02.09.2000வரை

ஜோதிடர் 'கார்னர்'

**மேடம் :**
மனதில் மாற்றமும், முக்கிய விடயங்களால் திருப்தியும் ஏற்படும். பெற்றோரால் உதவியும்–சுபகரும விடயம் கைகூடும். கல்வியில் நல்ல முடிவுகள் அமைவதுடன் எதிர்ப்புத்தடைகளும் நீங்கும். பரணிக்காரப் பெண்களுக்கு சிக்கல்கள் குறைவு பெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 02.

**இடபம் :**
சிக்கல்களில் இருந்து மீட்சியும் நெடுநாட்கள் தடைவிலகும். குடும்பத்தில் சில பிரச்சனைகள் வந்து போகும். பணச்செலவு பயணத்தடை ஏற்படும். குடும்பத்தில் வார இறுதியில் மருத்துவச்செலவு ஏற்படும். ரோகிணிக்காரருக்கு, அவமரியாதைகள் வந்துசேரவுள்ளது. கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் நிறம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

**மிதுனம் :**
பணத்துடன் தொழில்கஷ்டமும் கரைச்சலும் காணப்படும். உறவினரால் பிரச்சனைகள் ஏற்படும். திருமணத்தடைகள் ஏற்படும். முக்கிய மாற்றங்கள் ஏற்படும். சிக்கல்கள் குறையும். திருவாதிரைக்காரர் எதிலும் திட்டமிட்டு செயல்படவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : மரூண்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 31, 01.

**கடகம் :**
பொருள் பணவசதிகள் பெருக இருக்கின்றது. எதிர்பார்த்த உதவிகள் தாமதமடையும். முக்கிய விடயங்கள் திருமண விடயங்கள் மனச்சந்தோஷமடையும். ஆயிலிய நட்சத்திரர் பல மாற்றங்களை எதிர்கொள்வார்கள். வெளிநாடுபோகும் முயற்சிகளை முயற்சிக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 30, 31.

**சிம்மம் :**
பண, பிரயாண வசதிகள் அமையும், முக்கிய பிரமுகர்கள் வந்து சந்திக்கும் பலன் காணப்படும். எல்லாவிடயங்கள், எதிர்ப்புக்கள் நீங்கும். பெரியமாற்றங்கள் ஏற்படும் நிலை தென்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 28, 01.

**கன்னி :**
பல்வேறுபட்ட பெரிய முயற்சிகள் வரப்பெறும். உடல் நோய்துன்ப நிலை மாற்றம் பெறும். மாமியார், பெரியோர்களின் சிக்கல்கள் வெறுப்பு, காணப்படும். பணச்செலவுகள், முக்கிய கரும விடயம் தள்ளிப்போகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 27, 30.

**துலாம் :**
உடல் நிலை மாற்றமடையும். எடுத்த கல்வி பரீட்சைகள் சிறப்பாக காணப்படும். சுபகருமப் பேச்சுக்கள் நடைபெறும். காலக்கிரக பலன் பெரிய வசதிகள் கொடுக்க இருக்கின்றது. தொழில் நன்றாக அமையும். பணம் சுவாதிக்காரருக்கு, சேரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 28, 30.

**விருச்சிகம் :**
பலமாற்றம் மனநிலையில் தோன்றும். கடன்பிரச்சனைகள் நிறைவு பெறும். உடல்நோய் துன்பம் மாறும் பணவருவாய் பிள்ளைகளால் உதவி தென்படும். பலசிக்கல்கள் குறைவு. அனுசு நட்சத்திரகாரபெண்களுக்கு கஷ்டம் குறையும் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 27, 01.

**தனுசு :**
தடுமாற்றமும், மனதில் பயமும் தோன்றும். தொழில் பண வசதி சிக்கல் தோன்றும். கடன் பிரச்சனைகள் தலைவிரித்தாடும். எதுவானாலும் முக்கிய மாற்றங்கள் தென்படும். மூலநட்சத்திரருக்கு தொழில் வசதிகள் அமைய இருக்கின்றது.
அதிஷ்ட நாட்கள் : சனி, வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

**மகரம் :**
முக்கிய முடிவுகள் எடுக்கப்படும். நோய் துன்பம் நிவர்த்தி பெறும். கைவிடப்பட்ட பயணம் வெற்றிகளைக் கொடுக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய விடயம் நடைபெறும். திருவோண நட்சத்திரர் பலவெற்றிகளை பெறபலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 31, 02.

**கும்பம் :**
எடுத்த முடிவுகள் மாறும். எதிலும் தேக்க நிலை தென்படும். கல்வியால் பிரச்சனைகள் வந்து போகும். தாய் வழி உறவினரின் தீயசெய்திகள் வரப்பெறும். கவனம் தேவை. வாகனப்போக்குவரவு எச்சரிக்கை தேவை.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளபச்சை; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 28, 01.

**மீனம் :**
மனதில் முக்கிய செயற்பாடுகள் வெற்றியைக் கொடுக்கும். எதுவானாலும் செலவுகள் கையடங்கும். தெய்வதரிசனமும் பெரியோர்களின் ஆசிர்வாதமும் கிடைக்கும். உடல் நிலை நன்றாக அமையும். திருமணத்தடையும், பிரயாணமும், வெற்றிபெறும் உத்திரட்டாதிக்காரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 30, 01.

## நில்–கவனி–முன்னேறு

மனம் என்பது என்ன? நாம் என்பது என்ன? கண்ணாடியில் தெரியும் முகமா நாம்? நமக்குள் வீற்றிருக்கும் மனம்தான் நாம். அதன் வெளிப்பாடுகள், செயல்கள், குறைகள், நிறைகள், வடிவங்கள், வசீகரங்கள்–இவையே நாம்!

நம் உடலுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் உடனே மருத்துவரிடம் ஓடுவது போல், நம் மனதையும் அவ்வப்போது கவனித்தல் நலம். அம்மனதை தெளிவாய் அறிந்து, முறையாகப் பாதுகாத்து முழுமையாய் பயன்படுத்தினால் வளமான வாழ்க்கையை நம்மால் அமைத்துக் கொள்ள முடியும்!

இன்றைய உலகம். வேகம், அவசரம், போராட்டம், தயக்கம், துடிப்பு, போட்டி, சலிப்பு, மகிழ்ச்சி, துக்கம், பதட்டம், இறுக்கம் என பலவற்றால் கட்டிப் போடப்பட்டிருக்கிறது.!

ஒன்று இருப்பதை நாம் பல நேரம் மறந்தே செயலாற்றுகிறோம். கண் நம்மை கேட்டுக் கொண்டா பொருள்களைப் பார்க்கிறது? அது அது தன்னிச்சையாக, இயல்பாக நடைபெறுகிறது. மேலும் மூக்கிற்கும் கண்ணிற்கும் பாதிப்பு வரும் போதுதான் நமக்குப் பிரச்சனையாகிறது. பாதிப்பு சூழலால் உருவாகிறது! என்ன பாதிப்போ அதற்கு ஏற்றாற் போல சிகிச்சை பெறுகிறோம். அதே நேரம் அவற்றிற்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் சில சூழ்நிலைகளை தவிர்த்தும் வருகிறோம். அதேதான், மனதிற்கும்! எது தேவையில்லை என்று அறிந்து கொண்டு விலகி இருக்கும் பட்சத்தில் நமக்கு, திருப்தியும் நிம்மதியும் கிடைக்கும். அதேபோல் மனதிற்கு பாதிப்பு வந்து விட்டால் நம் மனமே அதனை சரி செய்ய முயல்கிறது! மனதின் சக்திகளில்



இவற்றிலிருந்து விடுபடுவது எவ்வாறு?

இப்படித்தான் என்பதை முதலில் உணருங்கள். உங்களுக்குள் ஓர் எண்ணம், கனவு இருக்கும். இப்படியாக வேண்டும் அப்படியாக வேண்டும் என்றெல்லாம். அதனை அடைவது அன்றி வேறு எதுதான் வாழ்க்கை? எப்பேறப்பட்டவராக நாம் இருந்தாலும்.... இந்த பூலோகம் தான் நம்மை உருவாக்கியது, சிதைப்பது, வடிவமைப்பது, ஊக்கம் கொடுப்பது இல்லையா? இதில் எங்கே வந்தது, பதட்டம். அதை தூக்கி குப்பைத் தொட்டியில் வீசுங்கள்!

சுவாசத்தைப் போலத்தான் வாழ்வும். சுவாசம் நடைபெறுவது பற்றி நாம் அக்கறைப்பட்டிருக்கிறோமா? மூக்கு என்று ஒன்றுதான் 'தற்காப்பு' முறை–தூசும், தும்பும் நிறைந்த சூழலில் இயல்பாக தும்மல் ஏற்பட்டு உடல் பாதிப்பு விலகுவது போல மனமும் பிரச்சனை வந்தால் சில விதங்களில் செயல்படுகிறது. இதனையே 'தற்காப்பு' என்கிறோம்!

நம் மனதின் தற்காப்பு செயல்களை கொஞ்ச நேரம் கழித்து அலசினால், நம் செயல்களின் அர்த்தம், அடிப்படைபற்றிய தெளிவு கிடைக்கும். அடுத்த முறை இன்னும் சிறப்பாகச் செயல்பட உதவும். இதுபோன்று பிறருக்கும் உண்டு என்பதை நாம் புரிந்து கொண்டால் யார் மீதும் நம்மால் கோபப்பட முடியாது. நம் முகத்தில் எப்போதும் 'புன்னகை தேவதை' அமர்ந்திருப்பாள். பயிற்சி செய்வீர்களா?

## லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# கொஞ்சம் அசுத்தமும் தேவை



குழந்தைகளை மிகவும் சுத்தமான சூழ்நிலையில் பொத்திப் பொத்தி வளர்ப்பதும் அவர்களது உடல்நிலைக்குக் கேடு விளைவிக்கும் என்கிறது ஓர் அமெரிக்க ஆராய்ச்சி. அவர்கள் சிறிது அசுத்தமான சூழ்நிலையிலும் வளர வேண்டும் என்கிறது அந்த ஆராய்ச்சி.

அசுத்தமான சூழ்நிலையில் இருக்கும் ஒருவகையான பக்ரீரியாக்கள் குழந்தைகளின் உடலில் நோயை எதிர்க்கக் கூடிய சக்தியை அவர்களுக்கு வழங்குகிறதாம்.

# என்றும் இளமையாக இருக்க...



சினிமாவிலும் தொலைக்காட்சிகளிலும் தோன்றும் நளின மங்கைகளை போல் நீங்களும் இளமைததும்பும் புதுப்பொலிவுடன் எந்த நேரமும் திகழ ஆசைப்படுகிறீர்கள் இல்லையா? அப்படியானால் தினமும் வாழ்க்கையை இப்படி கடைபிடியுங்கள்.

இரவில் நன்றாக தூங்க வேண்டும். தினசரி 8 மணி நேர தூக்கத்துக்கு குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

காலையில் வழக்கமான தேனீர், கோப்பிக்குப் பதிலாக ஒரு கப் அருகம்புல் சாறு அருந்துங்கள்.

உணவு வகைகளில் பழங்கள் பச்சை காய்கறிகளை சேர்த்துக் கொள்ளுங்கள். காலை உணவில் முளை விட்ட கடலை, சிறு பயறு சேர்த்துக் கொண்டால் இன்னும் நல்லது. காலையில் ஏதோ ஒரு உடற்பயிற்சியை குறைந்தது 1/2 மணி நேரமாவது செய்து வாருங்கள்.

குளிக்கும் போது குதிகாலையும், கால் விரல்களையும் நன்கு தேய்த்து குளிக்க வேண்டும். சிலருக்கு வாய் துர்நாற்றம் இருக்கலாம். அவர்கள் மஞ்சளை சுட்டு பவுடராக்கி உப்பு சேர்த்து தினசரி பல் துலக்கி வந்தால் துர்நாற்றம் அகன்று விடும்.

வாரத்துக்கு ஒருமுறை நகங்களை வெட்டுங்கள். ஆவி பிடியுங்கள், மசாஜ் செய்யுங்கள், எண்ணை குளியல் செய்யுங்கள். செருப்புகளை சுத்தப்படுத்துங்கள்.

வாரத்தில் ஒரு நாள் மேக்-அப் சாதனம் எதையும் பயன்படுத்தாது இருங்கள்.

மதியச் சாப்பாட்டுக்கு 1/2 மணி நேரத்துக்கு முன்னர் ஒரு தம்ளர் தண்ணீரில் எலுமிச்சை சாறு, தேன் கலந்து குடியுங்கள். சாப்பிடும் போது தண்ணீர் குடிக்காமல் சாப்பிட்டு முடிந்ததும் குடியுங்கள்.

மனது சரியில்லாத நேரத்தில் உடலுக்கு ஓய்வு கொடுங்கள். கோபத்தை குறைக்கப் பாருங்கள். இந்த கோபம்தான் நிஜத்திலேயே நமது அழகை கெடுக்கிறது.

முடிந்த அளவு நடந்து செல்லப் பழகுங்கள். தினசரி 50 முறை உட்கார்ந்து எழுங்கள்.

மாலையில் பழ சாலட் அல்லது 2 பழங்கள் சாப்பிடுங்கள். பேரீச்சம்பழம் நல்லது.

இரவு படுக்கப் போகும் முன்பு முகம், கை, கால்களை நான்கு கழுவ வேண்டும், பற்களையும் சுத்தம் செய்யுங்கள். கவலைகளை மறந்து தூங்குங்கள்:

இப்படி அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளை கறாராக பட்டியலிட்டுக் கொண்டால் உங்களை போல அழகி உலகத்தில் யாருமில்லை!

# தாலாட்டு இரகசியம்

குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு ஆட்டுவதும், தலாட்டுப் பாடுவதும் சும்மா அவர்களைத் தூங்க வைப்பதற்காக மட்டும் அல்ல. இது அவர் களுக்கு ஆரோக்கியத்தையும் அளிக்கிறதாம். இந்தந் தகவலை அமெரிக்க குழந்தைகள் நல மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

தொட்டிலில் ஆடியபடி தாலாட்டுக் கேட்கும் குழந்தைகளின் மனது சிலாகிப்பதோடு, அவர்களின் வளர்ச்சியும் 'கொழு கொழு' வென்று இருக்குமாம்.

இந்தத் தகவல்களை எல்லாம் குழந்தைகளுக்கான வெப்தளம் ஒன்று தெரிவிக்கின்றது. உங்களில் இன்டர்நெட் இணைப்பு வசதியுடையவர்கள் www baby centre.com.என்ற முகவரியில் குழந்தைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.



**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தோ்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IC

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-09-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

51

# மோனிக்கா என் மோனிக்கா

லிண்டா ட்ரிப்பின் பெயரை கிளின்ரன் குறிப்பிட்டதும், மோனிக்கா, "அவள் ஒரு நல்ல பெண். அவளைப்பற்றி எந்தவகையிலும் ஐயப்படலாகாது! அவள் தனது அலுவலக மேசையிலும் தன் வீட்டிலும் உங்களுடைய படத்தை மதிப்புடன் வைத்திருக்கிறாள். அப்பேற்பட்ட விசுவாசமுள்ள ஒரு பெண்மீது சந்தேகப்படலாகாது" என்றும் கூறினாள்.

இருப்பினும் லிண்டா ட்ரிப் பற்றி கிளின்ரன் தெரிவித்த கருத்துக்கள் மோனிக்காவுக்கு லிண்டா மீது சற்று சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்தது.

மைக்கேல் இசிகோ.:.ப் லிண்டாவை, வெள்ளை மாளிகைத் தகவல்களைத் திரட்டுவதற்காக சுற்றிச் சுற்றி வருவதாக ஏற்கனவே தன்னிடம் லிண்டா கூறியதை நினைத்துப் பார்த்தாள். தானே பெரும் தவறைச் செய்திருக்கலாமோ என்றும் கவலைப்பட ஆரம்பித்து விட்டாள்.

அன்றையதினம் கிளின்ரனுடனான சந்திப்பு மோனிக்காவைப் பொறுத்தவரையில் ஒரு சோகமான அடையாளத்தையே பதித்திருந்தது.

வெள்ளை மாளிகையிலிருந்து திரும்பியதும் வழமையாக லிண்டாவைச் சந்திப்பதைப் பழக்கமாக வைத்துக் கொண்டிருந்த மோனிக்கா, அன்றையதினம் அத்தகைய சந்திப்பைத் தவிர்த்தாள்.

லிண்டாவைச் சந்தித்தால், அன்றைய தினம் (ஜூலை 14) கிளின்ரனைச் சந்தித்தது, இருவருக்குமிடையில் நடைபெற்ற உரையாடல் போன்ற தகவல்களை லிண்டாவிடம் கூறவேண்டியிருக்கும் என்பதனால் அவளைச் சந்திக்காமல் விட்டுவிடுவதே மேல் என்று கருதினாள்.

இதற்கிடையில் பௌலா ஜோன்ஸ் என்பவளும் தன்னை கிளின்ரன், அரக்கன்ஸாஸ் கவர்னராக இருந்தபோது பாலியல் ரீதியாக அணுகியது தொடர்பான விசாரணைகளும்



னார்கள்.

லிண்டா ட்றிப் மீது மோனிக்காவுக்கு ஓரளவு பயமும் சந்தேகமும் இருந்த போதிலும் அவள் மீதான பற்றுக் குறையவேயில்லை. லிண்டாவின் தொழிலுக்கே ஆபத்து வந்து

யன்று மோனிக்கா ஓவல் அலுவலகம் சென்றாள். அன்று கிளின்ரனுடன் காரசாரமாக விவாதிக்க ஆரம்பித்தாள். மோனிக்காவின் ஆத்திரம் அவளுடைய குரலில் மிக உக்கிரமாக ஒலித்தது. சப்தமும் அதிகரிக்கத் தொடங்கியதும் மெதுவாகப் பேசும்படி கிளின்ரன் பலமுறை கூறியும் அவளுடைய குரல் மேலெழவே செய்தது. தனது இருக்கையிலிருந்து எழுந்து அவளை இறுக அணைத்து தனது உதடுகளினாலேயே மோனிக்காவின் வாயை மூடவைத்தார்.

அன்றைய தினத்தில் கிளின்ரனின் 51 வது பிறந்த தினத்துக்கான பரிசுப் பொருட்களையும் அவளுடன் கொண்டு வந்திருந்தாள். ஆகஸ்ட் 19ம் திகதிதான் பிறந்த நாள். எனினும் அன்றைய தினம் கிளின்ரனைக் காணும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டும் என்ற நம்பிக்கை இல்லாமையினால், மூன்று நாட்களுக்கு முன்னர்- 16ம் திகதியன்றே பரிசில்களை ஒவலுக்கு எடுத்து வந்து விட்டாள்.

## கிளின்ரனின் 51வது பிறந்தநாள்

நடைபெற்றன.

இதே வேளை 'நியூஸ் வீக்' சஞ்சிகையில் கத்தலீன் வில்லியின் கதை பிரசுரமானது. தான் கிளின்ரனை ஓவல் அலுவலகத்தில் சந்திக்கச் சென்ற போது, அவர் தன்னை பாலியல் உறவுக்கு உட்படுத்தியதாக பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் வில்லியின் பேட்டி ஒன்றும் தொலைக் காட்சியில் 60 நிமிடங்கள் ஒளிபரப்பப்பட்டது. இதில் தன்னை கிளின்ரன் இழுத்து, அணைத்து முத்தமிட்டதாக அவள் தெரிவித்திருந்தாள்.

கத்தலீன் வில்லி ஒவலிலிருந்து வெளியேறியபோது அவளுடைய தலை அலங்காரம் குலைந்திருந்ததாகவும் மேல் சட்டைப் பொத்தான்கள் கழற்றப்பட்டிருந்ததாகவும், அவளுடைய உதட்டுச் சாயம் கலைந்து கிடந்ததைக் கண்ணுற்றதாகவும் ஒருவர் சாட்சி கூறியிருந்தார்.

இந்தக் கதை வெறும் கட்டுக்கதை என்று கிளின்ரன் மறுத்துக்கூறினார். "கத்தலீன் வில்லி குறிப்பிட்ட தினத்தன்று என்னிடம் வந்தது உண்மைதான். தனக்கு பண நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும், நிரந்தரவருமானம் பெறக்கூடிய ஒரு தொழில் ஏற்பாடு செய்து தரும்படியும் என்னிடம் கேட்டாள். மிகவும் சோகமாகவே காணப்பட்டாள். எந்தவிதமான பாலியல் எண்ணத்துடன் நான் அவளுடன் அன்று பழகவேயில்லை. அவளுடைய தலையைத்தடவி ஆறுதல் கூறினேன். கன்னத்தில் முத்தமிட்டிருப்பேன்," என்று அவருடைய மறுப்புத் தொடர்கிறது.

கிளின்ரனின் கூற்றை உண்மையானது என்றே மோனிக்கா ஆமோதித்தாள். "எந்தப் பெண்ணும் வெளியில் வரும்போது, தன்னுடைய உடைகள் ஒழுங்காக இருக்கிறதா என்பதை அவதானிக்காமல் வரத்துணியமாட்டாள். அவளுடைய உதட்டுச்சாயப்பூச்சு சீராக இருக்கிறதா, முகத்தில் பூசப்பட்ட பவுடர் அழிந்திருக்கிறதா, தலை அலங்காரம் கலைந்திருக்கிறதா என்பதையெல்லாம் நன்றாகப் பார்த்த பின்னரே வெளியில் தலை காட்டுவாள். தனது 'மேக்கப்'பை தன்னுடைய டம்பப் பையில் எப்போதுமிருக்கும் கண்ணாடியிலாவது பார்த்துச் சரி செய்து கொள்வாள். ஆகவே கத்தலீன் வில்லியின் கூற்று நிச்சயமாக உண்மைக்குப் புறம்பானதாகும்!" என்று மோனிக்கா கூறினாள்.

பௌலா ஜோன்ஸின் வழக்கறிஞர்களுக்கு கத்தலீன் வில்லி விவகாரத்தை லிண்டா ட்றிப்பே கூறியிருக்க வேண்டும் என்று பலரும் கருதி



விடுமோ என்று கூட மோனிக்கா பயந்தாள். 'நியூஸ் வீக்' செய்தியில் ஓரிடத்தில் லிண்டாவின் பெயரும் இழுபட்டிருந்தது. இது மோனிக்காவும் லிண்டா ட்றிப்பும் பணிபுரியும் பென்டகனின் அலுவலர்களிடம் பரவியது. இருவருக்கும் மேலதிகாரியாக விளங்கிய கென் பேக்கன், லிண்டாவை அழைத்து, எந்தப் பத்திரிகையிலும் தனக்குக்கீழ் பணிபுரியும் எவருடைய பெயரும் வெளியாவதைத்தான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது, என்று எச்சரித்தார்.

இது பற்றி லிண்டா மோனிக்காவிடம் கூறிய போது இப்பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதும்படி லிண்டாவிடம் மோனிக்கா கூறினாள். அக்கட்டுரையில் அனாவசியமாகத் தன்னுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாக எழுதும்படி மோனிக்கா சொன்னாள். இருவருமாக இருந்து ஒரு கடிதத்தினை வரைந்து 'நியூஸ் வீக்'குக்கு அனுப்பினார்கள், கடிதமும் அடுத்த வாரமே பிரசுரமானது.

ஆகஸ்ட் மாத மத்தியில் மோனிக்காவுடன் மார்ஷா ஸ்கொட் தொடர்பு கொண்டாள். வெள்ளை மாளிகையில் மோனிக்காவுக்கு ஏற்ற இடம் ஒன்று காலியாக இருப்பதாகவும் அதனை மோனிக்காவுக்கே ஏற்பாடு செய்ய விருப்பதாகவும் வாக்களித்தாள். ஆனால் சில நாட்களிலேயே அந்த வேலையும் வேறொருவருக்கு நிச்சயிக்கப்பட்டு விட்டதாக அறிந்து கொதிப்படைந்தாள்.

ஆகஸ்ட் 16ம் திகதி

பழைமையான நூல்களை வாசிப்பதில் கிளின்ரனுக்கு இருந்த ஆர்வத்தை நன்கு தெரிந்து வைத்திருந்த மோனிக்கா, ரஷ்யாவை ஆட்சி புரிந்த சார் மன்னர் (1682 முதல் 1725 வரை) மற்றும் 'பீட்டர் த கிரேட்' என்ற வரலாறுகளைக் கொண்ட ஒரு [illegible]லையும் எங்கெல்லாமோ தேடி வாங்கி வந்திருந்தாள். இந்நூலின் விலை 125 டொலராகும். வெள்ளை மாளி கைக்கு கிளின்ரன் வருவதற்கு முன்னரே மோனிக்கா வந்து சேர்ந்தாள். உடனடியாகவே அவளை பின்புறமாக ஒவல் அலுவலகத்துள் அனுமதித்தனர். அதற்கு பெட்டி கியூரியிடம் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தாள். தன்னுடன் பிறந்தநாள் கேக் ஒன்றையும், அவர் விரும்பி ருசிக்கும் அப்பிள் கூட்டையும் எடுத்து வந்திருந்தாள். இவற்றை பின்புற அறையில் ஒரு மேசையில் அலங்காரமாகப் பரப்பி வைத்திருந்தாள். 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்று பொறிக்கப்பட்டிருந்த ஓர் அட்டையையும் பொருத்தி மெழுகு திரிகளையும் வைத்திருந்தாள்.

கிளின்ரன் ஒவல் அலுவலகத்துள் பிரவேசித்ததும் அவரை வரவேற்று நேராக உள் அறைக்குள் அழைத்துச் சென்றாள். மெழுகுதிரிகளை ஊதி அணைக்க வைத்து, கேக்கை வெட்ட வைத்து அப்பிள் கூட்டையும் பருக வைத்து விட்டு 'ஹப்பி போர்த்டே ரூ யூ மை டார்லின்' என்ற பாட்டையும் பாடினாள். பிறந்த நாள் முத்தங்களும் பரிமாறப்பட்டன.

கிளின்ரனிடம் வழமையான மகிழ்ச்சியை அன்று அவளால் காண முடியவில்லை. அவருடைய முழங்கால் நோ அவரை வாட்டியது. அத்துடன் அவர் மனதில் ஏதோ ஓர் இனந்தெரியாத வேதனை அழுத்து வதையும் அவதானித்தாள். கூடுமானவரை அவரை மகிழ்ச்சியாக அன்று வைத்திருக்கவே அவள் எண்ணினாள். இருப்பினும் மார்ஷல் ஸ்கொட்டினால் ஏற்பட்ட ஏமாற்றம் அவளுடைய நோக்கத்தை அன்று கெடுத்து விட்டது.

(வருவாள்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**இரத்தினபுரி வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | எம். மேரி மக்தலின், நிரல்கம, இரத்தினபுரி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# அடிமையின் தந்திரம்

கேசரி கோட்டை என்ற நாட்டை கேசவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். இவன் மிகவும் நல்லவன். இரக்க குணம் உடையவன். தெய்வபக்தி மிக்கவன். எனவே இவனது ஆட்சியில் மக்கள் சுகமாக வாழ்ந்தனர். எனினும் அக்கால வழக்கப்படி அரசரிடம் நிறைய அடிமைகள் பணிபுரிந்தனர்.

அரசன் அடிமைகளிடமும் அன்பு காட்டுவான். ஆனாலும், அவர்களை மேற் பார்வை செய்வோர் மிகவும் துன்புறுத்திய படியால் அடிமை ஒருவன் தப்பி ஓடி, வீரர்களிடம் பிடிபட்டான்.

அவனைக் கொண்டுவந்து அரசர் முன் நிறுத்தினர். அமைச்சரைப்பார்த்து, "தப்பி ஓட முயற்சித்த இந்த அடிமைக்கு



என்ன தண்டனை விதிக்கலாம்" என்றான் அரசன்.

எப்போது பார்த்தாலும் அந்த அடிமையைக் கடுமையாக நடத்துவான் அமைசசன். இதனால் அமைச்சரை ஒரு முறை எதிர்த்து பேசிவிட்டான் அந்த அடிமை. ஒரு அடிமை தன்னை எதிர்த்து பேசுவதா? என்று ஒரு வன்மம் கொண்டிருந்த அமைச்சன் இதுதான் சமயம் என்று நினைத்து,

"அரசே! இந்த அடிமைக்கு தூக்குத் தண்டனை விதியுங்கள். தப்பிச் செல்ல நினைக்கும் மற்ற அடிமைகளுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்" என்றான்.

அரசனுக்கு அவ்வாறு செய்வதில் சிறிதும் விருப்பமில்லை. அதற்குள் அறிவுள்ள அந்த அடிமை,

"அரசர் பெருமானே! தூக்கு தண்டனை கொடுக்கக் கூடிய அளவிற்கான தப்பு ஏதும் நான் செய்யவில்லை. இந்த அமைச் சரின் பேச்சைக் கேட்டு நீங்கள் என்னை கொன்று விட்டால், நாளைக்கு ஆண்டவனின் திருமுன்னர் அப்பாவி ஒருவனைக் கொன்ற கொலையாளியாக நீங்கள் நிற்க வேண்டி வரும். எனவே தங்கள் மீது இந்தப் பழி வராமல் இருக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் உள்ளது?" என்றான்.

"என்ன வழி?" என்றார் அரசர்.

"உங்கள் மீது கொலையாளி என்ற பழி வருவதற்கு ஆலோசனை சொல்லி, அதற்கு காரணமாக இருந்த இந்த அமைச்சரை கொல்ல எனக்கு அனுமதி தாருங்கள் பிறகு அமைச்சரைக் கொன்ற குற்றத்திற்காக எனக்கு கொலை தண்டனை விதியுங்கள். அப்படிச் செய்தால் உங்கள் மீது எந்தப் பழியும் சேராது." என்றான் அடிமை.

அதைக் கேட்ட அமைச்சன் திடுக் கிட்டான். எங்கே அரசர் கோபம் கொண்டு தனக்கு தண்டனை கொடுத்து விடுவாரோ? என்று பயந்தான்.


"அமைச்சரே! சின்ன தண்டனைக் கொடுக்க வேண்டிய அடிமைக்கு அநியாயமாக தூக்குத் தண்டனை கொடுக்கச் சொல்லி என்னையும் அநியாயம் செய்ய தூண்டினீர்கள். இப்போது நான் என்ன செய்யட்டும்?" என்றார் அரசர்.

அடிமையின் தந்திரப் பேச்சில் தான் நன்றாக சிக்கிக் கொண்டதை அறிந்த அமைச்சர்,

"அரசே! இவனது குற்றத்தை மன்னித்து விடுங்கள். அப்போதுதான் இறைவன் என் குற்றத்தையும் மன்னிப்பார்." என்றான்.

அரசனிடம் விடுதலை பெற்ற அடிமை சந்தோஷமாகச் சென்றான்.

கீழே இருக்கும் டைனி தனது சகோதரன் டோனி இருக்கும் இடத்தை அடைய வழிகாட்டுங்கள் பார்க்கலாம்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.09.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **357**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 355

**பரிசுக்குரியவர்:**
எம்.ஜெ. ரோஷான்,
அமீனா மகளிர் பாடசாலை, மாத்தளை.


**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே.திலூனி,<br>க/க/கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டிய. | ஜி.சரிதா,<br>மட்/கோ.அ.த.க.பாடசாலை,கோரகல்லிமடு,கிரான். |
| தெ.துவாரகா,<br>இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. | ஐ.பி.சசிகலா தேவி,<br>பாலர் யேசு கன்னியர் மடம்,இரத்தினபுரி. |
| எஸ்.பிரவீன்,<br>புனித அந்தோனியார் கல்லூரி, கட்டுகஸ்தோட்டை. | ந.வடிவுக்கரசி,<br>நா/லோவர் கிரன்லி த.வி.,அக்கரப்பத்தனை. |
| எம்.ஷாஜாத் முகம்மத்,<br>மட்/மெத்தைப்பள்ளி வித்தியாலயம், காத்தான்குடி. | பாத்திமா அஸானா அஸ்வர்,<br>அல்-பஹ்ரியா மத்திய கல்லூரி, தொட்டவத்தை, பாணந்துறை |
| எம்.இளையராஜ்,<br>நு/கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | எம்.டீ.எம்.யூனுஸ்,<br>மட்/ம.ம.வித்தியாலயம், காத்தான்குடி-03. |

## வித்தியாசமான சிலைகள்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கிறிஸ்டல் சிட்டி என்ற நகரம் உள்ளது. இங்கே 'போபேயி' என்னும் ஒரு கேலிச்சித்திரத்திற்குச் சிலை வைத்துள்ளனர். அந்தப் பகுதியில் உள்ளவர்கள், உணவுப் பொருளை உற்பத்தி செய்ய இந்தக் கேலிச் சித்திரம் உதவி செய்ததென்றே இச்சிலையை அமைத்தார்கள்.





பெனிடிக்ட் அர்னோல்ட் என்பவர் அமெரிக்கப் புரட்சியின்போது தனது இடது காலை இழந் தார். அவர் இறந்த பின் அவரது நினைவாக இடது கால் அளவுக்கு ஒரு சிலையும் வைத்தனர். இந்தச் சிலை இன்னமும் உள்ளது.



அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் பருத்திச் செடியைத் தாக்கும் 'போல் வீல்' என்ற பூச்சிக்குச் சிலை வைத்துள்ளார்கள். கடந்த நூற்றாண்டின் இறுதி வரை பருத்தி உற்பத்தி செய்து 'போல்வீல்' பூச்சிகளால் நஷ்டத்திற்கு ஆளானார்கள். இதனால் பட்டாணி உற்பத்தி செய்யவதற்குத் தள்ளப்பட்டனர். பட்டாணி விளைச்சலால் அமோக இலாபமடைந்த இவர்கள், தங்கள் பாதையை மாற்றிய 'போல் வீலு'க்குச் சிலை வைத்தனர்.



## செய்து பாருங்கள்

பெரிய கூழாங்கற்கள் சில, பெயிண்ட், பிரஷ், வார்ணிஷ்.

**செய்முறை**

* கற்களைச் சுத்தமாகக் கழுவிக் காய வையுங்கள்.
* கற்களின் வடிவத்தைப் பொறுத்து படத்தில் உள்ளது போன்ற உருவங்களில் பெயிண்ட் அடித்துக் காயவைத்து விடுங்கள்.
* பிறகு அவற்றின் மேல் வார்ணிஷைத் தடவி விட்டால் பார்ப்பதற்குப் பளபளவென்று அழகாகக் காட்சி தரும்.

பெங்குயின், பூச்சி, நாய்க்குட்டி போன்று அழகான உருவங்களைச் செய்து ஷோகேசில் வைத்தால் அழகாக இருக்கும்.



## விறு விறு தொடர்

## 10

"தன் முன்னாள் காதலிக்குக் கல்யாணம்னு கேள்விப் பட்டு உணர்ச்சிவசப்பட்டு அவளைப் பழிவாங்க அவ புருஷனைக் கொலை செய்யணும்னு துடிக்கிற ஒருத்த னோட் அவசரத்தனமான உணர்ச்சிப் பூர்வமான இந்தத் திட்டத்தில பர்ஃபெக்ஷன் எதிர்பார்க்க முடியாது. இவன் ஒண்ணும் புரொஃபெஷனல் கில்லர் இல்லை. அதனால சகஜமா சில தப்புகளை செய்துட்டான். மாட்டிக்கிறான். மாட்டிக்கணும்னு யார்தான் ஆசைப்படு வாங்க? அதுக்கு என்ன நோக்கம் இருக்க முடியும்?"

இப்போது ஹோட்டல் வாசலில் போலீஸ் ஜீப்கள் இரண்டு வந்து நின்றன. தபதபவென்று இறங்கினார்கள்.

நியூட்டன் பரத்தின் கைகுலுக்கி சப்-இன்ஸ்பெக்டர் பழனிவேலை அறிமுகப் படுத்தி வைத்தார்.

ரிசப்ஷனுக்குச் சென்று, "ஒரு குற்றம் சம்பந்தமா உங்க ஹோட்டல்ல தங்கியிருக்கிற ரஞ்சித்தை நாங்க கைது செய்ய வேண்டியிருக்கு!" என்று தகவல் சொல்லி விட்டு லிப்ட்டை நோக்கி நடந்தார் நியூட்டன். அவரோடு சப்-இன்ஸ்பெக்டர் பழனிவேலும், பரத், சுசீலாவும் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்களும் சேர்ந்து கொண்டார்கள்.

ஐந்தாவது தளத்தில் வெளிப்பட்டு ஓசையில்லாமல் நடந்து அறை எண் 517 முன்பாக வந்து நின்றார்கள்.

அழைப்பு மணிப் பித்தானை அழுத்தினார் நியூட்டன். காத்திருந்தார். கதவு திறக்கப்படாததால் மீண்டும் அழுத்தினார். பதில் இல்லை.

"தண்ணியடிச்சிட்டுத் தூங்கறான் போலிருக்கு!" என்றபடி பழனிவேல் கதவின் கைப்பிடியை அழுத்திப் பார்க்க... உள்புறம் தாழிடப்படாததால் கதவு திறந்து கொண்டது.

இரவு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்த அந்த அறைக்குள், நுழைந்து அவசரமாக எல்லா சுவிட்சுகளையும் போட்டார் நியூட்டன்.

கட்டிலில் போர்வை மட்டும் கலைந்து கிடக்க... ரஞ்சித் இல்லை!

அவசரமாக ஓடி குளியல் அறைக் கதவைத் திறந்து பார்க்க.... அங்குமில்லை!

அறையில் ஒரு சட்டையோ பேண்டோ, சூட்கேஸோ, ஷூவோ அவன் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பொருளும் இல்லை. ரஞ்சித் சாப்பிட்டு முடித்த தட்டுக்கள் மட்டும் டீப்பாய் மேல் இருந்தன.

நியூட்டன் திரும்பி பரத் முகத்தைப் பார்த்தார்.

"என்ன பரத், நீட்டா காலி செஞ்சிட்டுப் போயிருக்கான் போலிருக்கு! இங்க இருக்கான்னு எப்படிச் சொன்னீங்க?"

"ரிசப்ஷன்ல கேட்டப்போ ரூம் இன்னும் காலி செய்யப்படலைன்னு தான் சொன்னாங்க. அது மட்டுமில்லாம பத்து நிமிஷம் முன்னாடி வந்த ஒரு ஃபோன் காலை ரூமுக்குக் கனெக்ஷன் கொடுத்து ரஞ்சித் பேசியிருக்கானே...."

"அப்படீன்னா நீங்க அவனைத் தேடி வந்திருக்கிறதை அவன் ஸ்மெல் பண்ணிட்டான். அவசர அவசரமா புறப்பட்டுட்டான்."

"நோ சான்ஸ்! நாங்க ரிசப்ஷன்ல தானே இருந்தோம். அவன் எங்களைத் தாண்டிதானே போயிருக்கணும்?"

"நீங்க ஹோட்டலுக்கு வந்து சேர்றதுக்கு முன்னாடியே அவன் புறப்பட்டிருந்தா? நீங்க சொன்னீங்களே, யாரோ ஃபோன் செஞ்சதா... அந்த ஃபோன் கால் பேசிட்டு அவன் உடனே புறப்பட்டிருக்கலாம். ரிசப்ஷன்ல முறையா பில் செட்டில் செஞ்சி புறப்படறதுக்கான அவகாசம் இல்லாததால அவசரமாப் போயிருக்கலாம்."

"அப்படீன்னா அவனுக்கு வந்த ஃபோன் கால் அவனுக்கு நாம் அவனைத் தேடி வர்ற தகவலைச் சொல்லியிருக்குமா?" என்றாள் சுசீலா.

"மே பீ. வாங்க, ரிசப்ஷன்ல ஃபோன் கால் கனெக்ஷன் கொடுத்தவனை விசாரிக்கலாம்."

"ஒரு நிமிஷம் சார்!" என்ற பரத்தின் பார்வை டிரெஸ்ஸிங் டேபிள் டிராயர் சரியாக மூடப்படாமல் லேசாக எட்டிப் பார்க்கும் ஒரு காகித முனையின் மேல் பதிந்திருந்தது.

சென்று டிராயரை இழுத்தான்.

அது ஹோட்டலின் பெயர் அச்சடித்த ஒரு காகித நாப்கின்.

அதில் அவசரக் கையெழுத்தில் ஏதோ எழுதப்பட்டிருப்பதை கவனித்து கையில் எடுத்துப் பார்த்தான்.

'தீபிகா விதவையாவதை யாராலும் தடுக்க முடியாது' என்று அதில் எழுதப் பட்டிருந்தது.

நியூட்டன் அதை வாங்கிப் பார்த்தார்.

"பயங்கரமான வெறியில இருப்பான் போலிருக்கு!" என்றார்.

"இதோ மாட்டிக்கிட்டான், மேட்டர் முடிஞ்சதுன்னு நினைச்சேன்!" என்றான் பரத் சற்றே ஏமாற்றத்துடன.

அனைவரும் கீழே வந்து ரிசப்ஷனில் தகவல் சொன்ன அந்த இளைஞனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"என்னது ஆள் இல்லையா? எப்போ எப்படிப் போயிருக்க முடியும்?" என்று அவனும் சேர்ந்து ஆச்சர்யப்பட்டான்.

"ஒரு ஃபோன் கால் வந்தது, கனெக்ஷன் கொடுத்தேன்னு சொன்னீங்களே, அது ஆணா, பெண்ணா?" என்றான் பரத்.

"ஒரு ஆம்பளை வாய்ஸ் தான் சார்."

"எங்கேர்ந்து வந்த கால்னு தெரியுமா?"

"தெரியாது சார்!"

"இன் கமிங் காலை அடையாளம் காட்ற கருவி பொருத்தலையா உங்க ஹோட்டல்ல?"

"இல்லை சார்."

"சரி, பேசின நபர் என்னன்னு கேட்டான், கொஞ்சம் நல்லா ஞாபகப்படுத்திச் சொல்லுங்க."

"'ரூம் நம்பர் 517ல மிஸ்டர் ரஞ்சித் ப்ளீஸ்' ன்னு கேட்டான்."

"தன் பேர் சொல்லலையா?"

"இல்லை."

"கனெக்ஷன் கொடுத்ததும் அவங்க ரெண்டு பேரும் என்ன பேசிக்கிட்டாங்கன்னு கவனிச்சீங்களா?"

"இல்லை சார்!"

"சரி, குரலை வெச்சி உத்தேசமா சொல்ல முடியுமா? கூப்பிட்ட நபருக்கு என்ன வயசு இருக்கலாம்?"

"கம்பீரமான குரல் சார். நிச்சயம் நாற்பது வயசுக்கு மேல் இருக்கும்."

"ஐ ஸீ" என்று யோசித்தான் பரத்.

நியூட்டன் லெட்ஜரில் இருந்த ரஞ்சித் கொடுத்திருந்த கோவை விலாசத்தைத் தனியாக ஒரு காகிதத்தில் எடுத்து எழுதிக் கொள்ள,.

"சுசீ!" என்றழைத்த பரத், "இந்தக் கல்யாணத்தில ஆகாஷோட அப்பா விஸ்வநாத்துக்குப் பரிபூரண சம்மதம்தானான்னு முதல்ல தெரிஞ்சுக்கணும்!" என்றான்.

இன்ஸ்பெக்டர் நியூட்டன் ஹோட்டல் ஜெம்மின் ரிசப்ஷனிஸ்ட் சரவணனைக் கேள்வி கேட்கத் துவங்கினார்.

"இந்த ரஞ்சித் உங்க ஹோட்டல்ல எத்தனை நாளா தங்கி இருந்தான்?"

சரவணன் லெட்ஜர் பார்த்து "நாலு நாள் சார்!" என்றான்.

"ரூமுக்கு வாடகை எவ்வளவு?"

"ஆயிரத்தி நூறு ரூபாய்."

"அட்வான்ஸ் கொடுத்தானா?"

"ஆமா சார்"

"எவ்வளவு?"

"பத்தாயிரம்."

"செக்கா, கிரெடிட் கார்டா?"

சரவணன் கம்பியூட்டரில் தட்டிப் பார்த்து, "கேஷ் சார்!" என்றான்.

"ரஞ்சித் முகம் நினைவிருக்கா உங்களுக்கு?"

"சரியா நினைவு வரலை சார். இருநூத்தி நாற்பது ரூம்ஸ் இருக்கு சார் இங்கே. தினம் ஆயிரம் பேர் வந்து போற இடம். எல்லாரையுமே வெறும் பேராத்தான் தெரியும். அடிக்கடி மாசம் ஒரு தடவைன்னு ரெகுலரா வந்து தங்கற பிசினஸ் எக்ஸிகியூட்டிவ்கள் முகங்கள் ஞாபகம் இருக்கும்"

"அப்போ ரஞ்சித் ரெகுலர் கஸ்டமர் இல்லை!"

"ஆமாம் சார்!"

"உங்க ஹோட்டல்ல தங்கறவங்க சொல்ற ஃபோன் கால்ஸ் விவரம் 'நோட் பண்ணுவீங்களா?"

"டைரக்ட் லைன்ஸ் சார். எத்தனை கால் பேசினாங்கன்ற கணக்கும் இருக்கும். எந்த நம்பரோட பேசினாங்கன்றதும் கிடைக்கும்."

"வெரிகுட் ரஞ்சித் வந்து தங்கினதிலேர்ந்து அவர் பேசின அத்தனை ஃபோன் கால்ஸ் பில்களும் கொடுங்க, பார்க்கலாம்."

அறை எண் 517க்கு உண்டான தனி குட்டி ஃபைல் எடுத்துப் புரட்டிப் பார்த்து, "ஸாரி சார்!" என்றான்.

"ஸாரின்னர?"

"ரஞ்சித் ஹோட்டல் ஃபோன் மூலமா எந்த; போன் காலும் பேசலை. இன்கமிங் கால்ஸ் மட்டும்தான். பேசியிருக்கிறார்."

"பக்கா பிளானோட வந்திருக்கான்" என்றார் நியூட்டன் அருகில் நின்ற பரத்தைப் பார்த்து.

"சார், இப்பதான் ஞாபகத்துக்கு வருது?" என்றான் சரவணன்.

"என்ன?" என்றாள் சுசீலா.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவருக்கு ஃபோன் கால் வந்து ரஞ்சித்துக்கு கனெக்ஷன் கொடுத்தேன்னு சொன்னேனே, அது ஒரு ஃபோன் கால் இல்லை, ரெண்டு ஃபோன் கால்ஸ்!"

"அப்படியா? முதல்ல நாற்பது வயசுக்கு மேல மதிக்கத்தக்க ஒரு ஆண் குரல் பேசினதா சொன்னீங்க. அப்புறம் பேசினது யாரு? அவரேதானா?"

"இல்லை சார். லேடி வாய்ஸ்"

பரத் நிமிர்ந்தான். "லேடி வாய்ஸா? இந்தநேரத்திலயா? யாருன்னு தெரியுமா? அவங்க ரெண்டுபேரும் என்ன பேசிக்கிட்டாங்கன்னு தெரியுமா? நீங்க அவங்க பேசினதை கவனிச்சிங்களா?"

சரவணன் தயங்கி, "அது... அது.." என்றான்.

"எதுவா இருந்தாலும் பரவாயில்லை, சொல்லுங்க!"

"சார், கனெக்சன் கொடுத்துட்டு நாங்க அவங்க பேசறதை கவனிக்கக் கூடாது. நேரம் கெட்ட நேரத்துல லேடி ஃபோன் கால் வந்ததால ஒரு சின்ன ஆர்வம் ஏற்பட்டு..."

"ஹலோ மிஸ்டர்! நீங்க ஏன் அவங்க பேசினதை ஒட்டுக் கேட்டீங்கன்னு கேஸ் போடமாட்டோம். ஹோட்டல் நிர்வாகத்துக் கிட்டயும் கம்ப்ளைண்ட் பண்ண மாட்டோம். கேட்டதைச் சொல்லுங்க முதல்ல!" என்றார் நியூட்டன்.

"அந்த பொண்ணு பேர் தெரியலை. ஆனா கோபமா பேசிச்சு, இவரும் கோபமா பேசினார். ரெண்டு பேரும் காரசாரமாக திட்டிக்கிட்டாங்க."

பரத் அவன் தோளில் கை வைத்து, "இப்படி கதைச்சுருக்கமா சொல்லிடாதீங்க. ஒரு டேப் ரெக்கார்டர் மாதிரி அப்படியே கேட்டதைச் சொல்லுங்க. அப்பதான் எங்களுக்கு உதவியா இருக்கும்" என்றான்.

(தொடர்ந்து வரும்)



மர்மக்கதை மன்னன்

பட்டுக்கோட்டை பிரபாகர்

# மறுபக்கம்

## 03

## எம்.ஆர்.ராதா



*சிறிய வயதிலேயே எம்.ஆர்.ராதாவிடம் ஒப்பனைக் கலைஞராக ('மேக்-அப் மன்') பணியாற்றியவர் கஜபதி. எம்.ஆர்.ராதாவின் மறைவிற்குப் பின் அவரது மகன் ராதாரவிற்கும் ராதாவின் பேரன் வாசு விக்ரமிக்கும் (இவர் எம்.ஆர். ஆர்.வாசுவின் மகன்) ஒப்பனைக் கலைஞராகப் பணியாற்றி வருகிறார்.*

*எம்.ஆர்.ராதாவுடன் பணியாற்றிய காலத்தில் அவரிடம் கண்ட-கேட்ட விஷயங்களை சில வருடங்களுக்கு முன் தமிழகப் பத்திரிகை ஒன்றின் வார இணைப்பில் பகிர்ந்திருந்தார். அவற்றில் இருந்து சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.*

**ஏ**. பி. நாகராஜன் மிகவும் நொடித்துப் போய், கஷ்டத்தில் இருந்த நேரம்.

புதிதாக ஒரு படம் தயாரிக்க முனைந்தார். அவருக்கு எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் கிடைக்கவில்லை.

அன்று ஸ்டூடியோவில் பாடல் ரெக்கார்டிங் வேறு, வைத்து விட்டார்.

ஏ.பி.என்.., பணம் இல்லாமல் தவிக்கிற செய்தியை அறிந்த ராதா, உடனே ஐம்பதாயிரம் பணத்தை எடுத்துக் கொண்டுபோனார்.

ரெக்கார்டிங் தியேட்டரில் இருந்த ஏ.பி. நாகராஜனிடம் பணத்தைக் கொடுத்து, "அவசரத் தேவைக்கு இதை வைத்துக்கொள்!" என்றார்.

உடனே, ஏ.பி.என்.., ராதாவைப் பக்கத்திலிருந்த ரூமிற்கு அழைத்துப் போனார்.

ரூமிற்குள் ராதா காலில், சாஷ்டாங்கமாக விழுந்தார். ஏ.பி.என்...,

பிறகு வெளியே வந்த ராதா என்னிடம் சொன்னார்: "இந்தப் பயலுக்கு பண உதவி பண்ணினதே தப்புய்யா. இவன் காலிலே விழுவான்னு எதிர்பார்த்தா காசு குடுத்தேன். அப்படியே மனப்பூர்வமா காலிலே விழுறவனா இருந்தா பலர் முன்னிலையிலே விழணும். ரகசியமா ரூமிற்குள்ளே கூப்பிட்டு விழறான்னா, அப்போ என் காலிலே இவன் விழறது யாருக்கும் தெரியக் கூடாதுன்னு நினைக்கிறான்! இப்படிப்பட்டவனுக்கெல்லாம் நான் போய் உதவி பண்றேன் பாரு," என்று நொந்து கொண்டார். போலித்தனம் என்பது ராதாவுக்கு ஒரு போதும் பிடிக்காது.

இதற்கு இன்னொரு உதாரணம்.

**போ**லித்தனங்கள் எம். ஆர்.ராதாவுக்கு பிடிக்கவே பிடிக்காது.

ராதா நடித்த படங்கள் எல்லாம் இந்தியில் ரீ-மேக் செய்யப்பட்டதால், தமிழில் ராதா நடித்த கேரக்டரில் இந்தியில் ஓம்பிரகாஷ் என்ற நடிகர் தான் நடிப்பார்.

அவருக்கு ராதா மீது மிகுந்த மரியாதை. ஒரு முறை வாகினி ஸ்டூடியோவில் ஒரு விழா. அதற்கு ராதாவும் போயிருந்தார். விழாவிற்கு வந்திருந்த ஓம்பிரகாஷ், ராதாவைப் பார்த்ததும், ஓடிவந்து ராதாவின் காலில் 'தடால்' என்று விழுந்து வணங்கினார்.

விழா முடிந்து காரில் திரும்பும் போது ராதா என்னிடம், "ஓம்பிரகாஷ் 'தண்ணி' அடிச்சிட்டு முழு போதையில இருக்கான். அதனாலதான் பகிரங்கமா என் காலிலே விழுந்திட்டான். நிதானத்திலே இருந்திருந்தா அப்படி செஞ்சிருக்க மாட்டான். சும்மா, 'நமஸ்காரம்'னு ஒரு கும்பிடு மட்டும் போட்டிருப்பான்," என்றார்.

மறுநாள்-அதே வாகினி ஸ்டூடியோவில் படப்பிடிப்பு. ஒரு பக்கம் ஓம்பிரகாஷ் நடித்துக் கொண்டிருக்கும் இந்திப் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. தமிழ் படத்துக்காக ராதா வந்தார். அவரைக் கண்ட ஓம்பிரகாஷ் ஓடி வந்தார் 'தடால்' என்று காலில் விழுந்து வணங்கினார்.

பிறகு எழுந்து, "நேத்து நான் போதையிலே இருந்தேன்; அதனாலே உங்க காலிலே நான் விழுந்ததை, ஏதோ போதை மயக்கத்திலே நான் பண்ணினதா நீங்க நினைச்சிருக்கலாம். அதனாலேதான் இப்போ நிதானத்திலே இருக்கும் போது ஒருதடவை உங்களை வணங்கறேன்," என்றார் இந்தியில்.

ராதா, அவரை கட்டித் தழுவிக் கொண்டார்.

**ச**ந்திரபாபுவுக்கு இந்தச் சம்பவம் தெரியும் போலும்.

'கவலை இல்லாத மனிதன்' படத்தில் ராதா நடித்தார். சந்திரபாபு தினமும் படப்பிடிப்புக்கு தாமதமாகவே வந்து கொண்டிருந்தார். அவருக்காக, ராதா காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் படி ஆகிவிட்டது.

ஒரு நாள் ராதா காலை ஒன்பது மணிக்கே மேக்கப்புடன் படப்பிடிப்புக்கு வந்து விட்டார். சந்திரபாபு வரவில்லை.

ராதா கோபத்துடன், "இன்னைக்கு அந்தப் பயல் வரட்டும்; நான் யார்னு காட்டறேன். இன்னையோட அவன் இண்டஸ்ட்ரியை விட்டே ஓடணும். அப்படிப் பண்ணிடறேன்," என்று கத்திக் கொண்டிருந்தார்.

ராதா கோபத்துடன் இருப்பதை யாரோ ஃபோன் மூலம் சந்திரபாபுவுக்கு தெரிவித்து விட்டனர்.

காலை பதினொரு மணிக்கு வந்த சந்திரபாபு, காரை விட்டு இறங்கியதுமே நேராக ராதா இருக்கும் இடத்திற்கு வந்து, 'பொத்'தென்று அவர் காலில் விழுந்தார்.

"அண்ணே! மன்னிச்சுடுங்க. உங்களை அனாவசியமா காக்க வச்சுட்டேன். இனிமே இந்த தவறு நடக்காது," என்று சொன்னார்.

ராதாவும் கோபம் தணிந்து, அன்று அமைதியாக நடித்துக் கொடுத்தார்.

'**ஜீ**வபூமி' என்றொரு படம். சாண்டில்யன் எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது. சிவாஜி கணேசன் தான் ஹீரோ. பிறகு, இந்தப் படம் பாதியோடு நின்று விட்டது.

'ஜீவபூமி'யின் படப்பிடிப்பு 'ஆக்ரா' நகரில் நடந்தது.

ராதா நன்றாக சமைப்பார். இந்த விஷயம் சிவாஜிக்கு தெரியும் என்பதால், ஒரு நாள் படப்பிடிப்பில்,

"அண்ணே! இன்னைக்கு நீங்க சமைங்க அண்ணே! இந்த வடக்கத்திக்கார பசங்க செய்யற சாப்பாட்டை சாப்பிட்டு நாக்கு செத்துப் போச்சு," என்றார் சிவாஜி.

ராதாவும் அன்று இரவு தலையில் பெரிய முண்டாசைக் கட்டிக் கொண்டு, சமையற் கட்டிற்குள் புகுந்து, கரண்டியும், கையுமாக சமையல் வேலையில் இறங்கி விட்டார்.

அங்கிருந்த வடக்கத்தி சமையல்காரர்கள், ராதாவை, ஏதோ தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ள சமையல்காரன் என்று நினைத்துக் கொண்டு, அவரை வேலை செய்ய விடாமல் தடுத்திருக்கின்றனர்; திட்டியிருக்கின்றனர்.

ராதா திரும்பி வந்து "என்னய்யா, அந்த ஆளுங்க ஏதோ அவன்க தொழிலுக்கு நான் போட்டியா வந்திருக்கற சமையல்காரன்னு நினைச்சுகிட்டு, என்னை விரட்டுறானுங்க," என்றார்.

அதன் பிறகு சிவாஜியும், மற்ற நடிகர்களும் போய், 'ராதாவும் ஒரு நடிகர் தான், சமையல்காரர் இல்லை.' என்று விளக்கிச் சொன்னதன் பிறகுதான், அவர்கள் ராதாவை சமைக்க அனுமதித்தனர்.

'**இ**ருவர் உள்ளம்' படத்தில் ராதா தாலாட்டு பாடுகிற மாதிரி ஒரு காட்சி வைத்திருந்தனர்.

படத்தின் டைரக்டரும் தயாரிப்பாளருமான எல்.வி.பிரசாத்திடம் ராதா, "நான் பாட்டு சீனிலே எல்லாம் நடிச்சா நல்லா இருக்காது. ஜனங்க ரசிக்க மாட்டாங்க. அதனாலே, அந்தக் காட்சியை, 'அவாய்ட் பண்ணிடுங்க," என்றார் ராதா.

எல்.வி.பிரசாத், "இல்லே இப்படி ஒரு காட்சியிலே நீங்க நடிச்சா நல்லாதான் இருக்கும். நீங்க நடிங்க; நான் படமாக்கி உங்களுக்கு ப்போட்டுக்காட்டறேன்; உங்களுக்குத் திருப்தி இல்லேன்னா படத்திலே அந்தக் காட்சியை சேர்க்காம விட்டுடறேன்," என்றார்.

ராதாவும் அரைமனதுடன் நடித்தார். காட்சியை எடிட் செய்து, பிரசாத் திரையிட்டுக் காட்டினார். ராதாவுக்கு ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது. பிரசாத்தை வாயாரப் புகழ்ந்தார்.

(தொடர்வார்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 17

எங்கிருந்தோ வந்து சேர்ந்த தோழர் கிருஸ்ணக் குட்டி அவர்கள் மட்டக்களப்பு மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு தானும் மட்டக்களப்பையே தாயகமாகக் கொண்டவன் என்ற தோரணையில் வாழ்ந்தார். மட்டக்களப்பு பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பாகவே இயங்கினார். சில தொழிற்சங்கங்களை உருவாக்கினார்.

நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்திருந்த போது குட்டி அவர்களின் நேர்மையான, உறுதியான கொள்கைப் பிடிப்பில் நிரம்பிய மதிப்பு வைத்திருந்தேன். அவரிடமிருந்து எத்தனையோ படிப்பினைகளைக் கற்றுக் கொண்டேன்.

"இமய மலையில் மீனைப் பொரித்துச் சாப்பிட்ட தமிழன் தானே!" என்று அவர் எங்களைக் கிண்டல் செய்யும் போது, "அந்தத் தமிழைத் தாயாகக் கொண்டது தானே உங்கள் மலையாளம்," என்று நாங்கள் கூறுவதுண்டு. அப்போது அவருக்கு அடக்க முடியாத கோபம் வரும். மலையாள மொழியை நாங்கள் கீழ்த்தரமாக மதிப்பிடுவதாகக் கருதி எங்களுடன் சண்டைக்கு வந்து விடுவார். தோழர் கிருஷ்ணக்குட்டிக்கு தன் தாய் மொழியான மலையாளம் மீது அத்தனை பற்று.

தோழர் கிருஷ்ணக்குட்டிக்கு மட்டுமல்ல, மலையாளத்தைத் தம் தாய் மொழியாகக் கொண்ட எவருக்குமே மொழிப் பற்று, ஏனைய இனத்தவர்களைவிட மிக உயர்வாகவே இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

எமது நாட்டில் ஆங்கிலம் படித்தவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது உடனடியாகவே ஆங்கிலத்தில் தான் அவர்களுடைய உரையாடலை ஆரம்பிப்பார்கள். ஆனால் மலையாளிகள் எவரிடமும் இத்தகைய பழக்கம் கிடையவே கிடையாது. இதற்கு ஓர் உதாரணத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1966ம் ஆண்டு இலங்கை வந்திருந்தார். அவர் எம்.டி.குணசேன அமைப்பினரால் நாடாத்தப்பட்ட 'ராதா, தமிழ் வார இதழின் சார்பில்தான் சரோஜா தேவியுடன் இங்கு வந்திருந்தார். எம்.ஜி.ஆர். அவர்களின் இலங்கை விஜயத்துக்கான ஏற்பாடுகளை இலங்கை வானொலி வர்த்தக சேவையில் கொடி கட்டிப் பறந்த அறிவிப்பாளர் எஸ்.பி.மயில்வாகனம் அவர்களே ஏற்பாடு செய்திருந்தார்.

இக்காலகட்டத்தில் திரு.எம்.ராஜப்பன் அவர்கள் கொழும்பிலுள்ள சிறந்த புகைப்படப் பிடிப்பாளராக இருந்தார். எம்.ஜி.ஆர். அவர்களின் இலங்கை விஜயத்தை முழுமையாக தானே பொறுப்பேற்க வேண்டும் என்று விரும்பினார். இதற்கான ஏற்பாட்டைச் செய்து தரும்படி திரு.மயில்வாகனம் அவர்களிடம் திரு ராஜப்பன் கோரியிருந்தாரோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னைக் கண்டு தன்னுடைய விருப் பத்தை அவர் தெரிவித்ததும், அதற்குரிய ஏற்பாடுகளை நான் செய்து தருவதாக ஒப்புக் கொண்டேன். அவர் என்னிடம், "பத்மன் ஒரு தடவை மட்டும் அவரை நான் கண்டு ஓரிரு வார்த்தைகள் மட்டும் பேச ஏற்பாடு செய்யுங்கள். மற்றவற்றை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று கூறினார்.

எம்.ஜி.ஆர் அவர்கள் எட்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார். அந்த எட்டு நாட்களும் 'கோல் பேஸ்' ஹொட்டலில் என்னையும் தங்களுடன் இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார். எனவே எம்.ஜி.ஆர் அவர்களை ராஜப்பன் அவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது எனக்குச் சிரமமாக இருக்கவில்லை.

புரட்சித் தலைவர் தமது குழுவினருடன் இங்கு வந்து சேர்ந்த அடுத்த நாட்காலையில் ஹொட்டலுக்கு வந்திருந்த திரு.ராஜப்பன் அவர்களை எம்.ஜி.ஆருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். உடனடியாகவே நான் அந்நியப் படுத்தப்பட்டு விட்டேன். அவ்வளவு தூரம் அவர்கள் இருவரும் பேசும் மொழியால் இணைக்கப்பட்டு விட்டதைக் கண்டேன். நீண்ட நெடு நாட்கள் உறவு கொண்டவர்கள் என்று கருதக் கூடிய நிலையில் அவர்கள் உறவாடி மகிழ்ந்தனர். இருவரும் அப்போதும் சரி எம்.ஜி.ஆர் அவர்கள் நாடு திரும்புவதற்காக விமானப் படிக்கட்டுகளில் ஏறும் போதும் சரி இருவரும் தங்கள் தாய் மொழியான மலையாளத்திலேயே உரையாடினர்.

புரட்சித்தலைவருடன் திரு.ராஜப்பனைக் காணும்போதெல்லாம் திரு.மயில்வாகம் கொதிப்படைந்தார். அதனால் இதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை.

திரு. ராஜப்பன், எம்.ஜி.ஆர். அவர்களின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தன் கமாராவுக்குள் நுழைத்துக் கொண்டார். படங்கள் அத்தனையையும் ஒரு பெரிய அல்பமாகத் தொகுத்து இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து எம்.ஜி.ஆர். அவர்களிடம் கையளித்தார் ராஜப்பன். திரு.வீரப்பன் அவர்கள் இப்படங்களுக்கான கூலியாக சில நோட்டுக்களை ராஜப்பன் கையில் திணித்தார். ஆனால் அவர் அதனை ஏற்க மறுத்ததுடன் கண்ணீர்



'ஆரையூர் அமரன்' க. அமரசிங்கம்

மல்க, "நான் கூலிக்காக இதனைச் செய்யவில்லை" என்று உணர்ச்சி ததும்பக் கூறினார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய இலங்கை விஜயம் பற்றி பின்னர் பல சுவையான தகவல்களை நான் தரவிருக்கிறேன். ஆகவே இந்த இடத்தில் எம்மவர்களுக்கு ஒரு சிறுகுறிப்பை மட்டும் கூறிவிட்டு எனது தொடரைத் தொடர்கிறேன்.


மலையாள மொழி பேசுகிற ஒருவர் அம்மொழிக்கு எத்தகைய மதிப்பளிக்கிறார். என்பதை எமது வாசகர்களுக்கு எடுத்துக் காட்டவே இச்சம்பவத்தை எடுத்துரைத்தேன். ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலத்தைப் பேசுவதில் தப்பில்லை. என்றாலும் அவர்கள் தம் தாய் மொழியை ஒதுக்கி விட்டு ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதை கூடுமானவரை தவிர்க்க வேண்டும், என்பதே எமது அவா.

மட்டக்களப்பில் பல ஆண்டுகள் வாழ்ந்து மட்டக்களப்பு மக்களுக்கு அருஞ் சேவை ஆற்றிய தோழர் கிருஷ்ணக் குட்டி எவ்வாறு வந்து சேர்ந்தாரோ அவ்வாறே திடீரென மறைந்து விட்டார். 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளி தோழர் கிருஷ்ணக் குட்டி அவர்களையும் பலியெடுத்து விட்டது. ஏதோ ஒரு காரணத்துக்காக ஆரையம்பதிக்கு தோழர் கிருஷ்ணக்குட்டி சென்றிருந்தார். அங்கிருந்த கிராமச் சங்கக் கட்டடத்தில் சூறாவளிக்கு ஒதுங்கி நின்று பாதுகாப்புத் தேடிய அவரையும் இன்னும் சிலரையும் அக்கட்டடம் இடிந்து வீழ்ந்து பலிவாங்கிய துயரச் சம்பவம் பல நாட்களின் பின்னத் தான் தெரிய வந்தது. அந்தக் கிராமச் சங்கத்தின் தலைவராக இருந்து பல வருடங்கள் தொண்டாற்றிய. ஆரையூர் அமரன்' என்ற புனை பெயர் பூண்ட திரு.க.அமரசிங்கம் அவர்களே எனக்கும் தெரியப்படுத்தினார்.

இத்தகவல் எனக்கு மிகுந்த வேதனையை அளித்தது. மட்டக்களப்பு மக்களுக்காக இணையற்ற தொண்டாற்றிய அந்தத் தன்னலங் கருதாத தொண்டனுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு, அவரால் உயர் வடைந்த எவருக்கும் வாய்ப்புக்கிட்டாமலே போய்விட்டது.

**தோழர் கிருஷ்ணக்குட்டி அவர் களுக்கு என்றும் அழியாததொரு நினைவுச்சின்னம் அமைக்க வேண்டி யது மட்டக்களப்பு மக்களின் இன்றி யமையாத கடமையாகும். செய்வார் களா............?**

'சுதந்தரன்' பத்திரிகைவாயிலாக தமிழ் உணர்ச்சி கொப்பளிக்கும் கவிதைகளை எழுதும் எண்ணற்ற கவிஞர்களை திரு. சிவநாயகம் அவர்கள் உருவாக்கி அறிமுகம் செய்து வைத்தார். அவர்களில் ஆரையூர் அமரனும் ஒருவர். இவர் சில கவிதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். ஆரையூர் அமரன் அவர்கள் ஒரு தமிழாசிரியராக இருந்து இன்று ஓய்வு பெற்றிருக்கிறார். தமிழுணர்ச்சியால் உந்தப்பட்டு அவர் எழுதிய கவிதைகளை நல்லிசைப் பாடல்களாக மேடைகளில் பாடி உணர்ச்சியூட்டி வந்தவர் திரு.தங்கராசா அவர்கள். இவர் அண்மையில் தான் காலமானார், என்ற செய்தி கிடைத்தது. திருகோண மலையில் தான் தமிழரசுக் கட்சியின் பல வருடாந்த மாநாடுகள் நடைபெற்றன. 1956ம் ஆண்டு திருகோணமலையில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டை புதிய முறையில் நடத்த வேண்டும் என்று ஒரு திட்டத்தை தமிழரசுக்கட்சியின் செயற்குழுவுக்கு திரு.சிவநாயகம் அவர்களும் திரு.வி. நவரத்தினம் அவர்களும் ஆலோசனைக் கூறியிருந்தனர். தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தமிழுணர்வை ஊட்டும் பொருட்டு அத்திட்டம் தீட்டப்பட்டது. 'யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளிலிருந்து தொண்டர்கள் கால் நடையாக திருகோணமலைக்கு வந்து மாநாட்டில் பங்குகொள்ள வேண்டும்' என்பதுதான் அத்திட்டம். திரு. சிவநாயகம் அவர்கள் அதுவரை தமிழரசுக் கட்சியின் ஓர் உறுப்பினராக முறைப்படி சேரவில்லை. இருப்பினும் பின்னணியிலிருந்து சிறந்த ஆலோசனைகளை வழங்கி வந்தார்.



மட்டக்களப்பிலிருந்து அணி திரண்ட தொண்டர்களுக்கு தந்தை செல்வாவே தலைமை தாங்கினார். பத்து வயதுச் சிறுமியான புஷ்பராணி என்பவரே அணியின் முன்புறமாக தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியைத் தாங்கிச் சென்றாள். திருமலையாத்திரையில் ஆரையூர் அமரனும் பாடகர் தங்கராசாவும் இணைந்து கொண்டனர். திரு.அமரசிங்கம் அவர்கள் திருமலை யாத்திரை தொடக்கத்தின் போது மட்டு நகரிலுள்ள ஒரு கடையுள் புகுந்து ஒரு கடதாசியையும் பேனையையும் எடுத்து ஏதேதோ கிறுக்கி தங்கராசா அவர்களிடம் கொடுத்தார். ஊர்வலத்தின் முன்னணியில் ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தது. ஆரம்பத்தில் தமிழ் வாழ்த்து கோஷங்களை மட்டுமே ஒலிபெருக்கி ஒலித்துக் கொண்டிருந்தது. தங்கராசா அவர்கள் ஒலி வாங்கியைக் கையில் எடுத்து ஆரையூர் அமரன் எழுதிக் கொடுத்தப் பாடலைப் பாட ஆரம்பித்தார்.

'ஞானசௌந்தரி' திரைப்படத்தில் வரும் ஒரு பாடலான 'அருள் தாரும் தேவ மாதவே....' என்ற பாடலின் மெட்டி அமைக்கப்பட்டிருந்தது. அமரசிங்கத்தின் அந்தப் பாடல் தங்கராசா அவர்கள் தனது இனிமையான குரலில் அப்பாடலைப் பாடியபோது யாத்திரையில் பங்குபற்றிய தொண்டர்களுக்கு மட்டுமல்லாது வீதியின் இரு மருங்கிலும் நின்று பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேருடைய கண்களும் கண்ணீர் உகுந்த காட்சி எவராலும் மறக்கமுடியாத தொன்றாகும். (ஆரையூர் அமரன் இயற்றிய பாடல் அடுத்தடுத்த தொடர்களில் இடம் பெறும்)

**(இன்னும் வரும்)**

## மொழிப் பற்றுக்கோர் எடுத்துக்காட்டு

## இரா. பத்மநாதன்



புரட்சித் தலைவருடன் கட்டுரை ஆசிரியர்.
-திரு. ராஜப்பன் எடுத்த படம்

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 71**

# அரங்கம் அந்தரங்கம்

"இந்தச் சந்திரசூரியன் ஒரு மடையன். ஆகவேண்டிய காரியம் ஆயிரம் இருப்பினும் மதுவிலக்கைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறான். நீர் கவிஞர்! மதுவுக்காகவும் மாதருக்காகவும் நீர்தான் வாதாட வேண்டும்" என்றார் அவர்.

நான் அதை டேப்பில் ரெக்கார்டு செய்து கொண்டேன்.

மதுரையில் இருப்பவர்கள் மட்டும் தானா சம்பாஷணையைப் பதிவு செய்ய முடியும்?

என்னிடம் எவ்வளவோ பேர் பேசிய பேச்சு இன்னும் டேப்பிலேயே இருக்கிறது. சில சுவைக்குறைவான சம்பாஷணையைக் கூடப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

வரதராஜனிடம் கொஞ்ச நேரம் பேசியதில் இருந்து, இந்த நேரத்தில் அவரிடம் பேசிப் பிரயோசனம் இல்லை இன்று முடிவு கட்டினேன்.

பிறகு கமலுக்குப் போன் செய்தேன்.

அவரும் ஒழுக்கத்தைப் பற்றி எனக்கு உபதேசித்தார்.

என்னுடைய தலையெழுத்து மிகவும் விசேஷமானது. யாரிடம் எல்லாம் ஒழுக்கத்தைப் பற்றி உபதேசம் கேட்க வேண்டி வருகிறது!

எல்லோருமே என்னை 'ஏமாளி, கோமாளி' என்று அர்ச்சித்தார்கள்.

பிறகு தலைவர் தங்கசாமிக்குப் போன் செய்தேன்.

அவர் சந்திரசூரியன் மீது ஒரு இலட்சார்ச்சனை நடத்தினார். அதையும் டேப்பில் பதிவு செய்து கொண்டேன். என்ன செய்து என்ன? அதிகாரம் அவர்கள் கையில் அல்லவா இருக்கிறது.

நான் டெலிபோனை வைத்ததும் மீண்டும் மணி அடித்தது.

ஒருவேளை சந்திரசூரியனாக இருக்குமா...?

இல்லை. குமாரசாமி டெலிபோன் செய்தான்.

தங்கக் கடத்தலில் ஈடுபட்டதாகக் கற்பகத்தையும் நாராயணசாமியையும் கைது செய்து விட்டார்களாம்.

அதை நான் எதிர்பார்த்ததுதான்!

"பேய் அரசு செய்தால், பிணந்தின்னும் சகத்திரங்கள்" என்றான் பாரதி.

போலீஸ்காரர்கள் காளைமாடுகள்; அதிகாரத்தில் இருப்பவன் வண்டிக்காரன்.

இது காளையின் செயலா? வண்டிக்காரனின் செயலா?

இந்தக் கேள்விக்குப் பதில் காண்பது ஒன்றும் சிக்கலானது அல்ல!

நாராயணசாமியின் பணம்; அற்புதமான அவர் வீட்டுச் சாப்பாடு: அழகான அவருடைய மனைவி; இவ்வளவையும் ஆனந்தமாக அநுபவித்தவர்களே அவரைக் குற்றக் கூண்டிலே நிறுத்தி இருக்கிறார்கள்.

எல்லாம் கற்பகத்தினுடைய குற்றம் தான்.

மகாலெட்சுமி வாசற்படியைத் தாண்டிவிட்டால், மாடு மேய்ப்பவன் கூட, 'வாடி கண்ணே' என்று அழைக்க மாட்டானா?

அரங்கத்தில் காணப்படும் தெய்வமாகவே பெண்கள் அந்தரங்கத்திலும் இருந்தால்தான் மரியாதை.

அந்தரங்கம் பலபேருக்குத் தெரிந்துவிட்டால், மான பங்கம்தவிர்க்க முடியாததாகி விடும்.

ஒன்றாகக் குதித்து விளையாடிய ஒரே சமுகத்தில், மூன்று பேர் பதவியிலே; மூன்று பேர் குற்றக் கூண்டிலே!



சந்திரசூரியன், வரதராஜன், கமல்- பதவியிலே!

நாராயணசாமி, கற்பகம், சந்திரபுஷ்கரணி- குற்றக் கூண்டிலே!

வழக்குகள் ஆரம்பமாகி விட்டன.

என்னுடைய திட்டம் எதுவும் நிறைவேறவில்லை.

கையிலே பணமோ, பதவியோ இல்லாதவன் திட்டம் போட்டால் அதைக் கடவுள்தான் நிறைவேற்றி வைக்க முடியும்.

அதிலே சந்திரபுஷ்கரணியின் வழக்கு மறுநாளே விசாரணைக்கு வந்துவிட்டது.

நானே அவளைக் கோர்ட்டுக்கு கூட்டிக் கொண்டு போனேன்.

வழக்கு என்ன தெரியுமா?

சட்டம் ஐ.டி.ஏ; செக்ஷன் 8-பி.

தெருவிலே நின்று ஆட்களை விபசாரத்துக்கு அழைத்ததாக!

கடவுள் என்றொருவன் இருந்தால், இந்தப் பாவிகளின் தலையில் கல்மழையாகப் பொழிய மாட்டானா?

என்னுடைய வக்கீல் இந்த வழக்கில் மிக உற்சாகமாக ஈடுபட்டார்.

"எப்போதாவது ஏதாவது ஒரு தெருவில் எவளோ ஒரு பெண் நின்று கை காட்டுகிறாள்.

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

அப்போதெல்லாம் அந்தப் பக்கமாக ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வருகிறார்.

இந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் என்ன கிருஷ்ணாவதாரங்களா? வெறும் ஜோடனை! தனக்கு இணங்காத பெண்களின் மீதே போலீஸ்காரர்கள் வழக்குப் போடுகிறார்கள்.

இங்கே குற்றம் சட்டப்பட்டிருக்கும் பெண்ணைப் போலீஸ் அதிகாரி பலவந்தப்படுத்த முயன்றார். அது பலிக்காததால், இந்த வழக்கைப் போட்டிருக்கிறார்.

## கவியரசு கண்ணதாசன்

அவரும் இந்தக் கூண்டில் ஏறிச் சாட்சி சொல்லியாக வேண்டும்.

இன்னும் இந்தப் பெண்ணைப்பலவந்தமாக காயப் படுத்தியவர்கள் உண்டு; அவர்களும் வந்தாக வேண்டும்.

(அந்தரங்கம் வரும்)

# நேரம்

"எல்லாம் என்னோட தலைவிதி.....!" தலையில் அடித்துக்கொண்டான் கோகுலன். அவன் கால்கள் ஓரிடத்தில் நிலை கொள்ள மறுத்தன, அங்கும் இங்குமாக அலைந்தவன்;

"ச்சே.... ஒரு நாளாவது..., ஒரு நாளாவது எனக்காக... ஐயோ....., ஐயோ எல்லாமே என்னோட தலைவிதி!" மீண்டும் அலுத்துக் கொண்டான் கோகுலன்.



"என்னங்க, ஒங்களுக்கு இப்ப என்ன ஆயிடுச்சு? என்னு இப்படி தலையில அடிச்சுக்கிறீங்க....! நானும் வந்ததில இருந்து பாாக்கிறன், 'தலைவிதி, தலைவிதி' என்னுறிங்க, உண்மையிலேயே ஒங்களுக்கு என்ன ஆயிடுச்சு...?

எதுவாயிருந்தாலும் சொல்லுங்க. என்னால முடிமென்னா நானும் ஒங்களுக்கு ஒத்தாசையா இருக்கன். அத விட்டுட்டு இப்படி வேதனைப்பட்டுகிட்டிருக்கறதால ஒண்ணுமே நடக்கப்போறதில்ல.... சொல்லுங்க.....?"

"எனக்குவாற கோபத்துக்கு நீ வேற..., இருபத்தெட்டு... இருபத்தெட்டு வருசமா நானும் பாத்துக்கிட்டுதான் வாரன். ஆனா எனக்காக ஒருநாளாவது, ஒருநாளாவது இசைந்துபோ....., இல்ல, இல்லவே இல்ல. எல்லாம் என்னோட தலைவிதி....!" மீண்டும் கோகுலன்.

"என்னங்க என்னைய கட்டிக்கொண்டதாலதான் நீங்க.... நீங்க இப்படி பேசுறீங்களா.....?" தளர்ந்த குரலுடன் மனைவி சுகந்தினி.

"ஐயோ, ஐயோ எனக்கிருக்க பிரச்சனையில நீ வேற.... இப்ப நான் ஒன்னைய ஏதாச்சும் சொன்னேனா....?" கடுமையான குரலில் கோகுலன்.

"பின்ன என்னங்க... தன்னோட புருசன் இப்படி அவதிப்படுரப்போ எந்த பொண்டாட்டியாலதான் தாங்கிக்கொள்ள முடியும்?"

சிணுங்கினாள் சுகந்தினி.

"அக்கம்பக்கத்தவர்கள் நெனைக்கப் போறாங்க நம்ம ரெண்டு பேருக்குமிடையில சண்டையென்று. ஏங்க ஒங்களுக்கு அப்படி யென்னதான் பிரச்சனை எனக்குச் சொல்லக்கூடாதா....?"

மீண்டும் சுகந்தினி.

"ஒவ்வொரு நாளும்..... ஒவ்வொரு நாளும் லேட்டா வேலைக்குப் போறதால என்னோட மேலதிகாரிக்கிட்ட ஒரே பேச்சு வாங்கிறதே என்னோட வேலையாப்போச்சு. சின்ன காலத்துல டீச்சஸ்கிட்ட ஏச்சு இப்ப இப்படி, என்ன நான் வேணுமெண்டா இப்படி செய்யிரன்....?"

**எம்.ரமேஷ் – கொழும்பு-15**

"என்னங்க அது நம்மோட தவறுதானே....? நேரத்தோட வேலைக்குப் போக வேண்டியது நம்மோட கடமை. அதுசரி நீங்க யாருக்கோ ஏசுனிங்களே....!"

புரியாதவளாய் மீண்டும் சுகந்தினி,

"வேரயார.... ஒவ்வொருநாளும் தான் நான் ஏச்சுப்படுரன், ஒருநாளாவது எனக்காக இந்த நேரம் மாத்திரம் ஏன் பிந்திப் போகக்கூடாது.....? அதுதான் ஏசினன்."

கூறிச் சிரிக்கத்தொடங்கிய கோகுலன் மேல் சுகந்தினிக்கு கோபம் கோபமாக வந்தது.....

"போங்க ஒங்களுக்கு எப்பவுமே என்னோட விளையாடுரதே வேலையாப் போச்சு...."

கோபமாக அவ்விடத்தை விட்டகலும் சுகந்தினியை சமாதானப்படுத்த பின் தொடர்ந்தான் கோகுலன்....

# சித்தி விநாயகர்

ஒரு சாதுரியமான சமுதாயம் என்றில்லாமல், வசதியானவர், வறியவர், படித்தவர், பயிலாதவர் என உள்ளடக்கப்பட்டு ஒரு பிரதான நகரையும் அண்மித்துள்ள கிராமம் தான் அது.

'காய்ந்த வயிற்றுக்கு, கம்பங்கூழ்' கூட இல்லாத போதிலும், மனச் சாந்திக்கும் உளத்தூய்மைக்கும், உருவாக்கப்பட வேண்டிய மதச்சந்நிதிகள் அந்தக் கிராமத்திலும் தன்மானம் கருதியோ, 'மற்றவரை விட தாம் சளைத்தவரல்லர்' என்கின்ற வேட்கை கருதியோ ஒவ்வொரு மதத்தவருக்கும் ஒவ்வொரு சந்நிதிகள் உருவாகித்தானிருந்தது.

எது எப்படியோ, சித்திவினாயகர் என்று ஒரு பாடசாலையும் பெயரளவில் அந்தக் கிராமத்தின் மையத்தில் 'போனால் போகிறதென்று' அமைந்துதானிருந்தது.

ஒரு நீளமான விறாந்தை போன்று அமைக்கப்பட்டிருந்த அந்தக் கட்டடம் தான் சித்திவினாயகர் பள்ளிக்கூடம்.

அந்தக் கிராமத்தில் வாழும் சிறுவர்களை எதிர்காலத்தில் சட்ட வல்லுநர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், சிறந்த அரசியல்வாதிகளாகவும், வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஒப்பற்ற பண்டிதர்களாகவும், உருவாக்க வேண்டிய அடிப்படை வித்தியாலயம், குறைந்த பட்சம் ஒரு நல்ல மனிதனைக் கூட உருவாக்கும் திறமையை இழந்திருந்தது.

ஆனால் அதில் கடமை புரியும் ஆசிரியர்கள் என்னவோ, மாதாந்தம் சம்பளத்தை பெற்றுக் கொண்டுதானிருந்தார்கள்.

எத்தனையோ திறமையான ஆசிரியர்களும், அதிபர்களும் அந்தப் பாடசாலைக்கு வந்துதான் போனார்கள். ஆனால் அதன் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு மட்டும் எவருமே முயற்சிக்கவில்லை. அல்லது அதற்கான சூழ்நிலை அமையவில்லை.

தரமானது என்று கருதப்படுகின்ற பாடசாலைகளில் அதன் பெயருக்காகவே தமது பிள்ளைகளை, பல சிரமங்களுக்கு மத்தியிலும், பெருமளவு அன்பளிப்பு பணத்தையும் கொடுத்து, போக்குவரத்துக்கென நாளாந்தம் பல ரூபாய்களையும் செலவழித்து, அனுப்பும் சில பிற்போக்கான பெற்றோர்களுக்கு மத்தியிலும், தமது பெருமையை பறைசாற்றிக் கொள்வதற்காகவே தனியார் கல்லூரிகளில் மாதாந்தம் பெருமளவு பணத்தையும் செலவிடும் பல வசதி யானவர்களுக்கு மத்தியிலும், தாம் கற்பிக்கும், பாடசாலையில் தமது பிள்ளைகளையே சேர்த்துவிட துணியாத சில நம்பகத் தன்மையற்ற ஆசிரியர்களுக்கு மத்தியிலும் அந்தப் பாடசாலை.

சில வறியவர்களின் பிள்ளைகளையும், வறுமை என்று சொல்லிக் கொண்டு தினமும் மதுவுக்கும், தேவையற்றவற்றுக்கும் அன்றாடம் தேடும் பணத்தை கரைத்து விட்டு, ஏனோ தானோ என்று அனுப்பப்படும் பிள்ளைகளும், தவறியேனும், சில வகுப்பு தேவைக்காக பணம் கேட்டுவிட்டால், ஆசிரியர்களுடன் சண்டைக்கு வரும் சில அறிவற்ற பெற்றோர்களின் பிள்ளைகளையும்



மட்டுமே கொண்டிருந்தது.

பகலில் பாடசாலையாகவும், இரவில் சில தகாத குற்றச்செயல்களின் கோட்டையாகவும் இருந்த அந்தப் பாடசாலையில், பொறுப்பில்லாத சில ஆசிரியர்களும், கடுமையான போக்கைக் கடைப்பித்தால் வம்பில் சிக்க வேண்டியும் நேரலாம் என்ற பயத்தில் வாயளவில் கடமையை நிறைவேற்றிவிட்டு செல்லும் ஆசிரியர்களும் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில்தான்,

'தயானந்தம்' அந்தப் பாடசாலைக்கு அதிபராக வந்து சேர்ந்தார். அவரது வலிமையான தோற்றமும், அதற்குள்ளிருந்த மென்மையான குணமும் பலரை அவர்பால் ஈர்த்தெடுத்தது. மாணவர்களும் அவரது போதனையை மிகவும் விரும்பினார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஆனாலும் 'இந்து' பெயரை அந்த பாடசாலை கொண்டிருந்த போதிலும், பல இந்துக்களே தமது பிள்ளைகளை சேர்க்க முன் வராததையிட்டு மிகவும் மனவேதனையடைந்தார்.

முயற்சியை கைவிடாத அவர், அவர், முதலில் தனது பிள்ளைகளை அந்த பாடசாலையில் சேர்த்தார். அவரது செயலை உண்மையாக வியந்த சில ஆசிரியர்கள் தமது பிள்ளைகளையும், சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

உளரீதியாக ஒரு பாதிப்பும், எதிர்பார்ப்பும், இலட்சியமும் ஏற்பட்டு விட்டால், எத்தகைய அசௌகரியங்களையும், அவமானங்களையும், தியாகங்களையும், பொருட்படுத்தாத பண்பு இயல்பாகவே தோன்றிவிடுவது இல்லையா?"

அத்தகைய ஒரு பண்பினால், தயானந்தம் அதிபர், தனது நண்பர், உறவினர் உட்பட அந்தக் கிராமத்தில் உள்ளவர்களின் வீடுகளுக்கெல்லாம் சென்று மாணவர்களை சேகரிக்கும், தலையாய பணியில் ஜாதி, மதம், இனம், பாராது சித்திவினாயகர் பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது முயற்சி செய்து கொண்டிருந்தார்.

பல வசதியானவர்களின் உதவியாலும், அதிபரின் முயற்சியில் அரசாங்கத்தின் உதவியாலும், புதிய, புதிய கட்டடங்கள் உருவாகிக் கொண்டிருந்தன.

ஆண்டுகள் பல கழிந்து, சிறந்த பெறுபேறுகளை பெற்று வந்த அந்தப் பாடசாலை, தேசிய அளவிற்கு தரமுயர்த்தப்பட்ட போது, ஒரு விழாவில் பலரும் அதிபரை பாராட்டிப் பேசினார்கள். இறுதியாக அதிபரும் தனது உரையை தொடங்கினார்.

"கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு என்பார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரைக்கும் கற்றது கைமண்ணளவு கூட இல்லை. இரண்டு விரல்களால் அள்ளக் கூடிய ஒரு துளிமண்ணளவு கூடக் கற்றிருக்கிறோமோ, என்னவோ? அதனை உணர்ந்தே நானும் கல்வி உருவாகும் இடங்கள் புனிதமானவையாகவும், வசதியானதாகவும், இருக்க வேண்டும் என்று இந்த கல்லூரியின் வளர்ச்சிக்கு என்னால் இயன்றளவு முயற்சி செய்திருக்கிறேன். இதில் எனது சாதனை என்று எதுவும் இல்லை. ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்க வேண்டிய கடமையுணர்வு என்று தான் நான் கருதுகிறேன்.

ஒரு சாதாரண மனிதன் செய்ய வேண்டிய கருமங்களை சரியாக செய்பவர்களையெல்லாம், மகாத்மாக்களாகவும், சாதனையாளர்களாகவும், ஒதுக்கி வைத்து விடாதீர்கள். அவர்கள் சமுதாயத்தில் ஒருவர். சமுதாயத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் மகாத்மாக்களாக உருவாக வேண்டும். அப்போது தான் உயர்வு தாழ்வு என்றில்லாத ஒரு சமமான உலகம் பிறக்கும்!" என்று அதிபர் தனது உரையை முடித்துக்கொண்ட போது.

"ம்... மனுஷன் இலட்சியம், இலட்சியம் என்று, எத்தனை இலட்சங்களை ஒதுக்கியிருக்கிறாரோ?" என வாய்க்குள் சிலர் முணு முணுத்து கொள்ளத்தான் செய்தனர்.

**சண்முகராஜா-தலவாக்கலை**

# (வ)சாரி

அந்தக் காரியாலயத்தினுள் இன்று நுழைந்த போதும் மனது அவ்வளவாக திருப்திப்படவில்லை. தொடர்ந்து இரண்டு புதன் கிழமைகளாகக் காத்திருந்தும் தனக்குரிய விடயம் எதுவும் நடைபெறாமற் போன விரக்தி மனசு பூராவும். இன்று பொருத்தப்பாடற்ற நாளாக இருந்தும் அவள் தனது காரியம் நிறைவேற்றப்படல் வேண்டும் என்ற எண்ண மேலீட்டினால் உள்ளே நுழைந்தாள். நிதானித்துச் சற்றுத் தயங்கி, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் மேசையை அண்மித்துக் கொண்டாள். எதிரே, கடமைக்கென ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, தனது வேலையிலேயே தீவிரமாக இருந்தாள், சம்பந்தப்பட்ட ஊழியை.

"என்ட பைல் விசயம்...!"

"வெளியில போயிட்டு சற்றுப் பொறுத்து வாங்க. இப்போ அவசரமான வேலை நடந்துகிட்டிருக்கு!"

"நான் கொடுத்து மூணு மாசமாக...."

"நாங்கள் சும்மா குந்திக்கொண்டிருக்கவில்லை. பிறகு பார்க்கலாம்!"

அவள் வார்த்தைகளினால் எரிந்து விழுந்தாள்.

"அப்படியில்லை. நாங்களும் லீவு போட்டுக் கொண்டு இதற்கென்று...."

"என்ன பேச்சு பேசுறீங்க....? பொறுத்து வாங்க பார்க்கலாம் என்று சொல்லியாச்சு தானே?" பதில் அவ்வளவு திருப்தியாக இல்லை. சற்று நேர மௌனத்தின் பின்னர், அடிக்கடி தனது இடது கையை உயர்த்தி நேரத்தைப்பார்த்துக்கொண்டாள்.

"மிஸ் கடைசி பஸ் 3.00 மணிக்கு அதற்குள்ளாக...!"

வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டதும் அவள் பொறுமையை இழந்தாள். காலை தொடக்கம் தொடர்ச்சியான வேலைப்பழுக்களின் அசதியும், எப்படியும் இன்று கடமை முடிந்து போவதற்கு முன்பாக சில பைல்களை தன் மேசைக்கு அனுப்பியாக வேண்டுமென்று உயரதிகாரி இட்ட கட்டளையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஏச்சுக்களும் அவளை சினம் கொள்ளச் செய்தன. அந்த வெஞ்சத்துடன் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது இப்படியொரு இடையூறென்றால்....


"வீண் பேச்சுக்கள் வேண்டாம். எனக்கு இப்போ முடியாது!" முகத்தில் அடித்தாற் போல் சொன்ன வார்த்தைகளினால் வந்தவளுக்கு மிகுந்த அவமானமாகிப் போனது. இருந்தும், தனது வேலையை முடித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தினால் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அலட்சி போக்கில் நடந்து கொள்ள, அந்தக் காரியாலயத்தின் எல்லோர் பார்வைகளும் அவர்கள் பக்கமே.

"சும்மா நீங்க இஸ்டப்பட்ட நேரத்திற்கெல்லாம் வந்து போகக்கூடிய இடமல்ல இது!" வார்த்தைகளின் தொனி சற்று உயர்வாகவே காணப்பட்டது.

"மிஸ்! நேற்று புதன் கிழமை வந்தேன். பெரியவர் ஏதோ மீட்டிங் போனதால சந்திக்க முடியாமல்..."

"பிளீஸ்! எனக்கு இப்போ எதுவும் செய்ய முடியாது. வேண்டுமானால் அதோ சீ.சீ. இருக்கார் போய் கதைச்சுப் பாருங்க!"

அவள் காண்பித்த மேசைக்கு அருகே



வந்ததும், எதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் அமரும்படியாக முதலில் கூறிய வார்த்தைகள் உள்ளத்தைக் குளிரச் செய்தன. விசயம் என்னவாக இருக்கும் என்பதை அவர் ஓரளவு உணர்ந்து கொண்டது போல,

"இங்கே புதன் கிழமைகளில் மாத்திரம் தான் வர வேண்டும்!"

"அது எனக்குத் தெரியும் சேர்! ரெண்டு புதன் கிழமை வந்தும் எதுவும் நடக்கவில்லை. இன்னும் நாலு நாட்களில் என்ட மகளுக்கு சடங்கு செய்ய வேண்டியிருக்கு. அதுதான் இந்த அவசரம்!"

கஷ்டத்தையுணர்ந்து கொண்டமையினால் எப்படியும் உதவி புரிய வேண்டும் என்ற எண்ணத்திற்குள்ளானார். இருந்தும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் உதவியுடனேயே காரியத்தை முடித்துக்கொடுக்க வேண்டியிருந்தமையினால் எதிரே, அந்த சக ஊழியரைப் பார்த்து,

"இப்போ முடித்துக்கொடுக்க கஸ்டமா இருக்கா....?"

"பைல் போட்டிருக்கு. சைன்பண்ணி வர வேண்டும்."

"இப்போ சேர் ஸீட்டிலதான். ட்றைபண்ணிப் பாருங்களேன்."

"வீட்டுக்குப் போவதற்கு முன்னால் தர வேண்டுமென்று மனுசன் ஏகப்பட்ட வேலைகளைத்தந்திருக்கு. இந்த நிலைமையில..."

"பிளீஸ்! முடிஞ்சால் செய்து கொடுங்க."

அது கட்டளையாக இல்லாதபடியினால் அவருக்காக ஏற்றுக்கொண்டாலும், மனதிற்குள் ஒரு நெருடல். பொதுவாக தனக்கு வரும் பிரச்சனை சிக்கல்களில் மற்றவர்களையும் இழுத்து சின்னதைப் பெரிதாக்கிக் கொள்ளும் சுபாவம் கொண்டவள் அவள். பெரியவரிடம் தான் போவதை விட வந்தவளை அனுப்பிவைத்தால், இப்போது அவர் இருக்கின்ற மூட்டில் தன் மீது கொண்டுள்ள கவனம் திசை மாற்றப்படலாம் என்ற எண்ணத்திற்கு ஏற்ப செயற்படத்தயாரானாள். இன்று புதன் கிழமையாக இல்லாததை விட, வந்தவள் சாரி அணிந்திருக்காமல் கட்டைச் சட்டையுடன் வந்திருப்பது எப்படியும் ரகளையை ஏற்படுத்தும் என்பது அவள் உறுதி.

உள்ளே செல்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதும், தயக்கத்துடனே சென்றவள் சற்று தள்ளியே நின்று கொண்டாள். அவர் பாட்டில் தொலைபேசியில் கதைத்து முடித்துக்கொண்டு,

"என்ன விசயம்...?"

"சேர்! என்ட பைல் உங்கட கவனத்திற்கு...."

சட்டென்று அவளை முகத்திற்கு நேரே ஏறிட்டு பின்னர், மேசையின் இடப்பக்கத்தில் குவியலாகக்கிடந்த பைல்களை நோட்டமிட்டார்.

"உங்களை இங்கே யார் அனுப்பியது....?"

"..............................."

"என்ன விசயம் சம்பந்தமானது...?"

"சம்பள அரியஸ் சேர்!"

விசயத்தைத் தெரிந்து கொண்டதும் பியோனை அழைத்து, சம்பந்தப்பட்டவருடன் சீ.சீயையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

"சீ.சீ பப்ளிக்கை வேர்க் டேயில ஏன் அனுப்பிவைச்சீங்க?"

வந்தவர்கள் இருவருமே தடுமாறிப் போனார்கள். விசயம் உடன் பெரியவர் வரைக்கும் வருமென்று சீ.சீ எதிர்பார்க்கவில்லை.

"நிர்வாகக் கட்டுப்பாட்டை குழப்பாதீங்க. ச்சே!" கடுகடுப்புடன் வந்தவளை நோக்கி,

"சேர்! சீ.சீக்கு எதுவும் தெரியாது. அவங்கதான்..."

"பின்னே எனக்கு வந்து இடைஞ்சல் செய்தால்...?" அவளும் கடுகடுப்பாகிக் கொள்ள, பெரியவர் கோபத்தின் உச்சிக்குப் போனாலும் வெளியார் முன்னே சற்று அடக்கிக்கொண்டு,

"புதன் கிழமை பார்த்து வரத் தெரியாதா...?"

"ரெண்டு தடவைகளாக வந்தேன் சேர். நீங்க ஸீட்டில இல்லை அதான்...!"

தன்னைக் குற்றம் சாட்டுவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. உள்ளே கொதித்துக் கொண்டார். தன்னைச் சுடக்கூடிய வார்த்தைகளை வீசியவளைப் பார்வையினால் சுட்டார்.

"முதல்ல காரியாலய[illegible] எப்படி வரவேண்டுமென்று கற்று[illegible]ளுங்கள்." அந்த வார்த்தைகள் சாதாரணமாக இருந்தாலும், அவரது முகபாவம் அவளுக்கு உடன்பாடாக இல்லை. 'அப்படியென்ன கேவலமாக வந்து விட்டோம்' என்ற ஆதங்கம் அவளை ஆட்கொள்ள ஒரு தடவை குனிந்து தனது கவுனை அவதானித்து அவரை முகத்திற்கு நேரே,

"என்ன பேசுறீங்க...? இதற்கு என்ன குறை...?"

"நோ. இங்கே சாரியுடன் தான் வர வேண்டும். கண்ட உடைகளுக்கெல்லாம் இங்கே அனுமதியில்லை."

"என்னசேர்! சாரி உடுத்தினால் இடுப்பு கழுத்துப்பகுதி எல்லாமே தெரியும்; இதுல அப்படியில்லை. பின்ன ஏன் முகம் சுளிக்க வேண்டும்...?"

"டோண்ட் டோக் டு மச். நம்மட கலாசார உடை அது. அத்தோடு பார்க்க எவ்வளவு லட்சணமாக, அழகாக..."

"அப்போ! இப்படி உடுப்பதை அசிங்கம் என்று சொல்றீங்க அப்படித்தானே?"

"யெஸ். அசிங்கம் மாத்திரமல்ல; கேவலமாகவும் இருக்கு!"

உடன் அவள் மெலிதாகவே சிரித்துக் கொண்டாள். அவர் கோபத்தின் எல்லைக்கு. சற்று நிதானித்தவள் அருகே கட்டைச் சட்டையுடன் நின்று கொண்டிருக்கும் அவரது உத்தியோகத்தரை ஏறிட்டாள். அங்கே அவள் புழுவாகத் துடித்துக்கொண்டு முகம் நிறைந்த கோபத்துடன் பெரியவரை எரித்துக் கொண்டு.

**இளையவன்-திருகோணமலை**

# மறந்திருக்க முடியாதவள்.....

"ஏ! அங்கே பார்! ஒரு கன்று கோயில் மண்டபத்திற்குள் நுழைந்து விடப் போகிறது!" என்று கத்தினான் ரமணன்.

வேலையை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்த விஜயன், "கடவுளின் வாகனம்தானே, அவரைத் தேடிப் போகிறது. அதற்கேன் கத்துகிறாய்?" என்று சினந்து விட்டுத் திரும்பத் தன் வேலையில் மும்முரமானான்.

இருவரும் கோயில் சுவருக்கு வெள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். மூங்கில் தடிகளால் கட்டப்பட்டிருந்த சாரத்தில் இருந்து மேல் சுவருக்கு சுண்ணாம்பு பூசிக் கொண்டிருந்தார்கள்.

"அது ஒன்றும் சாமியைத் தேடவில்லை. தன் தாயைத் தேடுகிறது... அதன் கண்களைப் பார்!"



## இலக்கிய நயம்

"இளங்கன்று தாயைத் தான் தேடும்.... வேலையை விட்டு விட்டு வேடிக்கை பார்க்க அதில் என்ன இருக்கிறது? உன் பக்கத்தை ஒழுங்காகக் கவனி!" என்று தன்கைவேலையை நிறுத்தாமலே ரமணனுக்குச் சொல்லி விட்டு காரியத்தில் கண்ணாயிருந்தான் விஜயன்.

"அதன் தலை நடுங்குகிறது பார், பசியில் தான் தாயைத் தேடுகிறது. அந்த ஏக்கம் நிறைந்த கண்களைப் பார்த்தால் எனக்கு அது வேறொன்றை ஞாபகப்படுத்துகிறது."

"மைதிலி ஞாபகம் வந்துவிட்டதா உனக்கு?"

"எப்போதும் என்னை விட்டுப் பிரிய நேர்கையில் எல்லாம் அவள் கண்கள் இப்படித்தான், மனம் நடுங்கிப் போகும் விதமாய் சோர்வைக் கொட்டும். அதே ஆசை விழிகளை அந்தக் கன்றின் பார்வையிலும்....."

"சரி சரி, வேலை நேரத்தில் வேலையைக் கவனி இப்போது உன்காதல் இந்தச் சுவரை அழகுபடுத்துவதில் இருக்க வேண்டும்."

"அழகு என்பது காட்சியில் இல்லை விஜயா! அழகு என்பது நடத்தை. அசைவில், தலை சாய்த்துப் புன்னகைப்பதில், விட்டுப் பிரிகையில் தளரும் அந்த நடையில், பார்வையின் ஏக்கத்தில் கோபம் கொண்டு சிணுங்குகையில்...... மனம் முழுக்கத் தேன்வழிய மலைத்துப் போய் நிற்கிறோமே அந்தக் கணங்களெல்லாம் அழகின் தாக்குதலில் விளைந்தவைதான்...."

வெள்ளையடிப்பதை மறந்து விழிகளைத் தூரத்தில் நிலைகுத்தி விறைத்து நின்றான் ரமணன்.

"உன் நடத்தையில் என்னால் அழகு காணமுடியவில்லை. எரிச்சல்தான் வருகிறது. இன்று இந்த வேலையை முடித்தாக வேண்டும். இப்படிப் பித்தன் போல் நடந்து கொண்டால், அழகை இரசிக்கும் வாழ்க்கை நமக்கு அருகிலும் வராது. நீ சொன்னது போல வேலையிலும் தான் இருக்கிறது அழகு. இப்போதைக்கு இந்த அழகில் மனதைச் செலுத்து. மைதிலி அழகை மாலையானதும் பார்த்துக் கொள்!"

"மன்னித்துக்கொள் விஜயா!" என்று கொஞ்சம் பாணியில் சொல்லிவிட்டு பரபரவென சுண்ணாம்பை இழுத்துப் பூச ஆரம்பித்தான் ரமணன்.

சிறிது நேரம் கழிந்தபின் திடீரென்று. "இப்படித்தான் அவள் கூந்தலும். கொடிபோல நீண்டிருக்கும்" என்று விஜயனைப் பார்த்தான். அவன் அவனைத் திரும்பிப் பார்ப்பதில்லை என்ற வைராக்கியத்தில் வேலையில் கவனமாயிருந்தான்.

"என்ன, இதுவே கறுப்பாக இருந்தால் அவள் கூந்தல் இப்படித்தான். அதிகம் சுருள்கள் இல்லாமல், பயிற்றங் கொடிபோல நீள நீளமாய்ப் பிணைக்கப்பட்டிருக்கும் அலைக் கொத்துகள்...." என்று சொல்லி வந்தவன், சுதாகரித்துக் கொண்டு பேச்சை நிறுத்திவிட்டு காரியத்தில் கவனமானான். தூரிகையை சுவரில், தன் மனதில் படமாய்த் தெரியும் அவள் கூந்தலின் வடிவத்தில் நெளித்து நெளித்து ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

விஜயன் இவனை கடைக் கண்ணால் கவனித்தான்.

"என்னடா விளையாடுகிறாயா? உன் காதலி கூந்தலை வரைவதற்கு நாம் இவ்வளவு உயரத்தில் ஏறி இருக்கவில்லை.

அழகை உபாசித்தது போதும். சீக்கிரம் வேலையை முடி, முடித்தால்தான் அவளைப் போய்ப் பார்க்க முடியும்...." சொல்லிக் கொண்டே திரும்பியவன், திரும்பிய வேகத்தில் கையிலிருந்த தூரிகையைத் தவறவிட்டான். ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் மறுகை சாரத் தடியைப் பற்றிக் கொள்ள கிடைத்தடியில் கால்களைப் பின்னி, கீழே தலையைக் குனிந்து பாய்ந்து மறு கையை நீட்டி தூரிகையை விழாமல் ஏந்தினான்.

மறுபடி நிமிர்ந்து வாகான நிலையில் தன்னை நிறுத்திக் கொண்டான். "உன்னால் நானும் ஒருதரம் கீழே

தருவது முழடில்யன்

போய் மீண்டும் ஏறவேண்டியிருந்திருக்கும்; தப்பித்தேன்...." என்று சிரித்தான் விஜயன்.

அவனைப் பார்த்தபடி சும்மா வெறுமனே தூரிகையை மேலும் கீழுமாக இழுத்துக் கொண்டிருந்த ரமணன் "பின்னேரம் நான் போகும் போது அவளிடமும் இந்த வேகம் தான் இருக்கப் போகிறது" என்றான்.

"எந்த வேகம்?"

"இப்போ கீழே விழ இருந்த தூரிகையை நொடிப் பொழுதில் பிடித்தாயே..... அந்த வேகம் தான். என்னைக் கண்டவுடன் அவள் பாய்ந்து தழுவிக் கொள்வதிலும் இருக்கும்..." பிறகு தனக்குள் சிரித்துக் கொண்டவனாக சுவரின் பக்கம் திரும்பி, வெள்ளையடித்தபடி பேச்சைத் தொடர்ந்தான். "சும்மா விலகி இருந்து பேசிக்கொண்டிருக்கும் போதும் என்ன நினைத்துக் கொள்வாளோ, ஆவேசம் வந்தவள் போல் இறுக அணைத்துக் கொள்வாள். அந்த வேகம் இருக்கிறதே, அது வள்ளுவனின் உடுக்கை இழந்தவன் கையை விட மிக வேகம்...."

"சரி சரி, வேலை நேரத்தில் அதையெல்லாம் எண்ணித் தடுமாறாதே..... கால் தவறினால், பிறகு கால்கை இருக்காது. விழுந்து முறிந்து விடும்...." என்று சிரித்தான் விஜயன்.

"இல்லை விஜயா! அவள் நினைப்பே என் உள்ளத்தில் தருகிற ஆனந்தக் கிளர்ச்சி நீ கற்பனையால் உணர முடியாதது. மிக விரைந்து தழுவிக் கொள்கிறவள்; பார்க்கப் பார்க்க உள்ளத்தில் இன்பம் பாய்ச்சும் அழகையுடையவள்; குவிந்த மெல்லிய மார்பு; கொடிபோல நீண்ட-ஆனால் கறுத்த கூந்தலையுடையவள்; பசியால் வாடி தாயைத் தேடும் இளங்கன்று போல பரிதாபமான பார்வையை வெளியிடுபவள்... அவளை எந்தக் கணத்தில் நான் மறந்திருக்க முடியும்?"

**கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்,**
**குவவுமென் முலையள், கொடிக்கூந்தலளே,**
**யாங்கு மறந்து அமைகோ யானே,**
**–ஞாங்கர்க்**
**கடும் சுரை நல் ஆன் நடுங்குதலைக்**
**–குழவி**
**தாய்காண் விருப்பின் அன்ன,**
**சா அய் நோக்கினளே! மா அ யோளே**

(குறுந்தொகை : 132)

## ஸ்போர்ட்ஸ்

### உள்ளக அரங்கில் நடந்த போட்டித் தொடர் சமநிலையில் முடிவு



அவுஸ்திரேலியாவின் மெல்போர்ண்னில் உள்ள டொக்லண்ட்ஸ் உள்ளக விளையாட்டரங்கில் ( Indoor Stadium ) கடந்த ஆகஸ்ட் 16ம் திகதி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி முதன் முறையாக இடம் பெற்றது.

அவுஸ்திரேலியா-தென்னாபிரிக்கா அணிகள் மோதிய இப்போட்டி கிரிக்கெட் வரலாற்றில் முதல் தடவையாக உள்ளக விளையாட்டரங்கில் நடந்த போட்டியாகும்.

பல கிரிக்கெட் போட்டிகள் மழை காரணமாக இடையிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. சில வேளைகளில் ஓர் அணி வெற்றியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் தருணத்தில் மழை வந்து போட்டியை நிறுத்தி விடும் இதனால் பலர் ஏமாற்றத் துக்குள்ளாகி விடுவதும் உண்டு.

ஆனால் மைதானம் முழுவதும் கூரையால் மூடப்பட்டிருப்பதால் மழை அடித்துக் கொட்டினாலும் விளையாட்டைப் பாதிக்காது.

இந்த உள்ளக அரங்கில் 'சூப்பர் சலஞ்' விருதுக்காக இரு அணிகளும் 3 ஒருநாள் போட்டிகளில் மோதின.

கடந்த 16ம் திகதி நடந்த முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 94 ஓட்டங்களாலும் 20ம் திகதி நடந்த 3வது போட்டியில் தென்னாபிரிக்க அணி 8 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றன.

இதனிடையே கடந்த 18ம் திகதி நடந்த 2வது போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது.

இதனால் 3 போட்டிகள் கொண்ட இத் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

### டெண்டுல்கரின் புத்தகம்

இந்திய அணியின் இளம்புயல் சச்சின் டெண்டுல்கர் இலக்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். மறைந்த இவரது தந்தை ரமேஷ் டெண்டுல்கர் மராத்தி மற்றும் இந்தியில் கதை, கவிதைகளை எழுதியுள்ளார்.

சில வருடங்களுக்கு முன் டெண்டுல்கரின் அண்ணன் அஜித் டெண்டுல்கர், 'டெண்டுல்கரின் கிரிக்கெட் அனுபவங்கள்' என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார்.

இப்போது சச்சின் டெண்டுல்கரும் புத்தகம் ஒன்றை எழுதி வருகிறார். இவரது புத்தகத்தை இந்தியாவில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்று ஆங்கிலம், இந்தி, மராத்தி ஆகிய மொழிகளில் வெளியிடவுள்ளது.

### 400 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்



மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான கேர்ட்லி அம்புரோஸ் இங்கிலாந்துக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் முதலாவது இன்னிங்சில் இங்கிலாந்தின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஆதர்ட்டனை ஆட்ட மிழக்கச் செய்ததன் மூலம் 400 விக்கட்டுகளை விழ்த்தியவர்கள் பட்டியலில் இணைந்து கொண்டார்.

டெஸ்ட் போட்டிகளில் இவருக்கு முன் 400 விக்கெட்டுக்களைத் தாண்டியவர்கள் நால்வர். மேற்கிந்தியத்தீவுகளின் கோர்ட்னி வோல்ஷ் (475) இந்தியாவின் கபில் தேவ் (434), நியூஸிலாந்தின் றிச்சார்ட் ஹெட்லி (431), பாகிஸ்தானின் வாஸிம் அக்ரம் ( 407) ஆகியோரே அந்த நால்வர். அம்புரோஸ் 5வது இடத்தில் இருக்கிறார்.

இவர்களில் அம்புரோஸின் சகாவான வோல்ஷ் இவ்வருட இறுதியில் இடம் பெறவிருக்கும். அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் இடம்பெறுவாரேயானால் டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கட்டுக்களை வீழ்த்தியவர் என்ற உடைக்க முடியாத சாதனையை நிகழ்த்தக் கூடும்.

## சிந்தியா பதில்கள்

**★ எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் விலை வாசி ஒன்றும் குறைகிறதாயில்லையே....?**

கே. நாகேந்திரன், புத்தளம்.

*மணணுககுத் திருமபாத எதும மண்ணில் இல்லை. விலை வாசியைத் தவிர.*

**★ 'பார்த்தேன் ரசித்தேன்' பார்த்தீர்களா சிந்தியா?**

சுரையா சஹிட், மாவனல்லை.

*பார்த்தேன் சாதாரண தமிழ் சினிமாவுக்குரிய நம்பமுடியாத காட்சிகளே அதிகம். ரசிக்க முடியவில்லை. ரசித்தது தாமுவை. 'படிச்சிருந்தா கண் டாக்டராயிருப்பேன்; படிக்காததால் கண்டக்டராயிட்டேன்' என்று சார்லி, வையாபுரி கூட்டணியோடு ஜமாய்க்கிறார். விவேக்கைப் போலவே தாமுவிடமும் எடுத்துவிட சொந்தமாகச் சரக்கிருக்கிறது. நடிகர்களின் குரல்களை மிருகங்களின் சத்தங்களுக்கு ஒப்பிட்டு அவர் மேடையில் செய்த மிமிக்கிரி நிகழ்ச்சி ஒன்றையும் அண்மையில் வீடியோவில் பார்த்தேன். கலைவாணர் தொடங்கி இன்றைய விவேக் வரை நீளும் சிரிப்பு நடிகர்கள் வரிசையில் தாமுவும் தனது பெயரைப் பதிப்பார் என்றே தெரிகிறது.*

**★ நல்லவர்கள் கஷ்டப்படுகிறார்கள். கெட்டவர்கள் நன்றாக இருக்கிறார்கள். இந்த வாழ்க்கையில் என்ன நியாயம் சிந்தியா?**

எஸ். பத்மா, கொழும்பு-10.

*ரோட் போடும் இயந்திரம் மெதுவாகத்தான் போகும். அதில் ஓடுகிற கார்கள் தான் விரைவாகப் பறக்கும். இந்த உலகம் சுயநலக்காரர்கள் வசம்தான் இருக்கிறது பத்மா! மாற்ற வேண்டும்.*

**★ என் அபிமான (அழகான) நடிகை ஜோதிகாவின் முகவரி?**

ரி. ஹரிஹரன், கண்டி.

*பரவாயில்லை, அதுவும் சுமாரான படம் தான்!*

**★ படையினரின் தாக்குதல்களால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பதிலுக்கு புலிகளின் தாக்குதல்களில் சிங்கள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் இரு தரப்புமே தத்தம் பொதுமக்கள் பாதிக்கப்படுகையில் உரத்துக் குரலெழுப்பவும் தவறுவதில்லை. பொதுமக்கள் மீது அக்கறையுடையவர்களாகக் காட்டிக் கொள்ளும் இவர்கள் அந்த மக்கள் பாதிப்படையாமலிருக்க சண்டையை நிறுத்திவிடுவதில் ஏன் தயக்கம்?**

பி. சுகிர்தன், கொழும்பு-12.

*ஓஷோவின் குட்டிக் கதை ஒன்று:*

*இரண்டு சிறுவர்கள் வீட்டைவிட்டு ஓடிப் போவதைப் பற்றி பேசிக் கொண்டார்கள்.*

*"நாம் இருவரின் அப்பாக்களிடம் மாட்டினால் நம்மை அடிப்பார்கள்" என்றான் ஒருவன்.*

*"அடித்தால் திரும்ப அடித்தவிடுவோம்."*

*"ஆனால் பைபிள் அப்பாவை அடிப்பது பாவம் என்கிறதே!"*

*"சரி, நீ என் அப்பாவை அடி. நான் உன் அப்பாவை அடிக்கிறேன்."*

*குழந்தைகளின் தீர்வைப் போலத்தான் வளர்ந்தவர்களும் நடந்து கொள்கிறார்கள். அவன் அடிப்பது எனது மக்களை, நான் அடிப்பது அவனுடைய மக்களை என்று நினைத்தால் சண்டை எப்படி நிற்கும்?*

**★ சிந்தியா! பாராளுமன்றத் தேர்தல் பற்றி உமது கணிப்பு என்ன?**

எஸ். முபைதீன்நிஸா, காங்கேயன் ஓடை.

*விக்கிரமசிங்கத்தார் தலைமையில் நாம் வெற்றிக்கனி மீது ஆசைவைக்கவே முடியாது என்று ஐ.தே.க.வுக்குள்ளேயே பலரும் சலித்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. பட்டலந்தை விசாரணைகளின் படி அவரை உள்ளே அனுப்பக்கூடிய வாய்ப்பிருந்தும், அவர் தலைவராக இருக்கும் வரைதான் தமது வெற்றி வாய்ப்பு பிரகாசமாயிருக்கும் என்று முன்னைய அரசுத்தலைமை அவரை விட்டுவைத்ததாகவும் கதை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை சண்டையை நிறுத்த ஏதாவது உருப்படியான தீர்வை யார் கொண்டு வருவார்கள் என்று தேட வேண்டிய நிலை. கடந்த தேர்தலில் வாக்குறுதி தந்தவர்கள் காலம் கடத்தியதையே காணவேண்டி நேர்ந்தால் விரக்தியுற்று விக்கிரமசிங்கத்தாரைப் பார்த்தால், அவரோ, இரண்டெழுத்தாருடன் பேசி அவர்கள் சம்மதிக்கும் தீர்வைத் தருவோம் என்று கருவாட்டை மீனாக்கும் கதை பேசுகிறார்.*

*கடைசியாக, குறைநிறைகளோடேனும் வைக்கப்பட்ட தீர்வை நடைமுறையாக்க ஆதரவளித்தால், நடப்புத்துன்ப இழுபறி வாழ்வில் ஏதேனும் மாற்றங்கள் நேராதா என்றுதான் தமிழ் மக்கள் சிந்தனை ஓடும் போல் தெரிகிறது. இம்முறையும் தமிழ், முஸ்லிம் கட்சிகளே யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன.*



**★ சிந்தியாவுக்கு எதிரி யார்? நண்பர் யார்?**

ரா. ப. அருஸ், கிண்ணியா-3.

*நண்பர் எனக்குப் பின்னே தடித்த ஓட்டுக்குள் மறைந்து கிடக்கிறார். எதிரி முன்னால் மூக்குக்கும் நாடிக்கும் இடையே உள்ள அறைக்குள்ளிருந்து அடிக்கடி எட்டிப் பார்க்கிறார்.*

**★ மிருகங்களை அழிவிலிருந்து பாதுகாக்கத் துடிக்கும் மனிதன், ஏன் அவனையே அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறான்?**

வீ. ஜெயராஜ், கோரகல்லிமடு.

*அப்படிப் பார்த்தால் மனிதன் சுயநலவாதி இல்லை என்றல்லவா ஆகிறது!*

**★ உங்களுக்குப் பிடித்த இலங்கைக் கவிஞர்?**

ஆர். கோணேஸ்வரன், நுவரெலியா.

*இந்தப்படி நெடுக*
*இருப்பது நல்லதல்ல;*
*இங்கே*
*பல இடத்திற் கேட்கிறார்.*
*கந்தப்ப பிள்ளை மகள்*
*கறுப்பி என்றாலும், அங்கே*
*காசு கிடக்குதென்று*
*பார்க்கிறேன்!*
*சொந்தத்துள்ளே முடித்தால்*
*தொந்தரவில்லை யன்றோ?*
*சொல்லு: முகூர்த்தம்*
*இன்றே வைக்கலாம்.*
*அந்தப் பொடிச்சிக்கும்*
*உன்மேல்*
*ஆசை கொஞ்ச மல்ல!"*

*என்ற உரையாடல் வடிவத்திலேயே, சொல்லவரும் விஷயத்தை யாப்புக்குள்ளேயே வைத்துச் சொல்லிவிடும் தமிழ் 'மஹாகவி'கள் இலங்கையில் தான் அதிகம். அவர்கள் எல்லோரையுமே பிடிக்கும். புதுக்கவிஞர்களையும் பிடிக்கும். பட்டியல் நீளம் என்பதால் இப்போது வேண்டாம்.*

**★ கட்டிளங் காளையரும் கட்டுடல் மங்கையரும் கைகோர்த்துத் திரிவதுதான் காதலா?**

எம். வை. பஹ்மி, நிலாவெளி.

*அதுவும் தான்!*

**★ ஐந்தறிவு படைத்த நாயிடம் இருக்கும் நன்றியுணர்வு ஆறறிவு படைத்த இந்த மனிதர்களிடம் இல்லையே. காரணம் என்ன சிந்தியா?**

சி. மகாலட்சுமி, ஏறாவூர்-4.

*"திரு.சிவப்புக் கொண்டைச் சேவல் அவர்களே! நாயாரின் நன்றியுணர்வு பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன சொல்ல முடியுமா?"*

*"நன்றியுணர்வா? யாருக்கு வேண்டும் அந்த இழவு? நம்மைச் சுதந்திரமாக நடமாட விட்டால் போதாதா... நாயா அது... எமன்!"*

*"திரு.பூனையாரே! நாயாரின் நன்றி..."*

*"யோவ் நிறுத்தும்! நன்றியும் பன்றியும்.. குழந்தைகளைப் பெற்று வளர்க்க விடுகிறதா அந்த ராட்சஸன்? கொஞ்சம் பலமாயிருந்து விட்டால், பலவீனமானவர்களை எல்லாம் பாய்ந்து பிடுங்குவதா... அந்தப் படுபாவி பற்றி இங்கு கதைவிட வேண்டாம்......"*

*இதனால் பெறப்படும் நீதி: அவரிடம் இருப்பது இவரிடம் உண்டா, இவரிடம் உள்ளது மற்றவரிடம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்டுக் கொண்டிராதீர்கள் எல்லோரிடமும் அவரவர்க்கான குறைகளும் நிறைகளும் உண்டு. நாய்தான் மனிதருக்கு முன்மாதிரி என்று நினைத்துக் கொண்டு பாய்ந்து கடிக்க ஆரம்பித்தால் எல்லோரும் வயிற்றைச் சுற்றி ஊசி போட்டுக் கொள்வதே வாழ்க்கை என்றாகிவிடும்.*

**★ சிந்தியா, உங்களின் கடைசி ஆசை என்ன?**

பி. சண்முகப்பிரியா, ஹற்றன்.

*இதுமாதியான கேள்வியை யாரும் கேட்டுவிடக் கூடாதென்பது.*

# மன்னாதி மன்னன் 20

## செத்த சிங்கத்திற்கு உயிர் கொடுத்த பலன்?

விக்கிரமாதித்தன் கூறிய புதிருக்கான விடையைக் கேட்டதும் வேதாளம் தன் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு விக்கிரமாதித்தனின் முதுகிலிருந்து கீழே பாய்ந்து ஓடிச்சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

வேதாளத்தின் இந்த நடவடிக்கையினால் சற்றும் சலிப்படையாத விக்கிரமாதித்தன், வேதாளத்தின் பின்னே ஓடிச்சென்றான். மரத்தின் மீதேறி அதனைக் கட்டி முதுகின் மேல் சுமந்த வண்ணம் நடக்கலானான்.

அப்போது வேதாளம் தனது பதின்னான்காவது கதையைச் சொல்லத் தொடங்கியது.


### பதின்நான்காவது கதை

பரசபுரம் என்ற ஊரில் தனவணிகன் ஒருவனிருந்தான். அவனுக்கு அழகிய மகளொருத்தி இருந்தாள். ஆனால் பருவ வயதையடைந்தும் அவளுக்குத் திருமணம் நடைபெறவில்லை. அவள் அயலிலுள்ள ஒரு பிராமண இளைஞனுடன் இரகசிய தொடர்பு வைத்திருந்தாள்.

மற்றோர் ஊரிலிருந்து பரசபுரம் வணிகனுடன் வியாபாரம் செய்யும் நோக்கோடு வர்த்தகன் ஒருவன் வந்திருந்தான். பரசபுரம் வணிகனின் மகளைக் கண்டதும் அவள் மீது அடங்காத காதல் கொண்டான். அவள் தகப்பனும் திருமணத்துக்குச் சம்மதிக்கவே இருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு வணிகன் தனது ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான். அந்த ஊரில் அவளுக்கு இருக்கப் பிடிக்கவில்லை.

அவளின் கள்ளக்காதலனைக் காணக்



கிடைக்காத துயரம் அவளை வாட்டியது. இதனால் அவள் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டாள்.

தனது காதலி இறந்துவிட்டாள் என்ற செய்தியைக் கேட்டதும், அந்த இளைஞனும் தற்கொலை செய்து மாண்டு விட்டான். மனைவி இறந்த துயரத்தில் மூழ்கிக் கிடந்த அவள் கணவனை வணிகன், தான் நேசித்து திருமணம் செய்து கொண்ட பெண்ணழகி இல்லாதபோது தான் மட்டும் உயிருடன் வாழ்வதில் எந்தப் பயனுமில்லை என்று கவலையுடன் அவள் கணவனும் இறந்து போனான்.

இந்தக் கதையைக் கூறிய வேதாளம் "ஏக காலத்தில் மூவர் இறந்து போயினர். இவர்களில் மெச்சத்தகுந்தவர் யார் என்று உம்மால் கூறமுடியுமா!" என்று விக்கிரமாதித்தனிடம் வேளதாளம் கேட்டது.

"மணமுடிக்க முடியாமல் இருந்து; வேறொருவர் காதலியை அடைந்து விட்டானே என்று துயருற்ற அந்த இளைஞனும் அவனுடைய காதலியும் இறந்து போனதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் அப்பெண்ணை தனது மனைவியாக்கிய அவள் கணவன் தனது மனைவி மீது சந்தேகம் கொள்ளாமல் அவளை ஏற்று மணமுடித்தான். அவள் இறந்ததும் அத் துக்கம் தாங்காமல் இறந்துபோன அவனே பாராட்டுதலுக்குரியவன்!" என்று கூறி வினாவுக்குரிய விடையை விக்கிரமாதித்தன் கூறினான்.

இந்த விடையைக் கேட்டதும், பழையபடி வேதாளம் ஓடிச் சென்று முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

விக்கிரமாதித்தன் வேதாளத்தின் பின்னே ஓடிச் சென்று முருங்கை மரத்தில் தாவியேறி வேதாளத்தைப் பிடித்து தோளில் சுமந்த வண்ணம் நடக்கலானான்.

அந்த வேளையில் வேதாளம் தனது பதினைந்தாவது கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

### பதினைந்தாவது கதை

பிரம்மபுரம் என்ற ஊரிலே விஷ்ணுசாமி என்றொரு பிராமணன் இருந்தான்- அவனுக்கு நான்கு ஆண்குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்குரிய ஆரம்பக் கல்வியைப் புகட்டியபின், அவர்கள் விரும்பியபடி மந்திரங்களையும் தந்திரங்களையும் கற்பதற்காக கானகத்தில் தவம் செய்து கொண்டிருந்த முனிவரிடம் அவர்களை அனுப்பிவைத்தார்.

முனிவரிடம் வந்த நால்வரும் அவர் புகட்டிய மந்திரங்களையும் தந்திரோபாயங்களையும் விருப்பமுடன் கற்றுத்தேறினர். சகலவற்றையும் கற்றறிந்த பின்னர் அவர்கள் நால்வரும் தங்கள் தந்தையிடம் செல்ல விரும்பினர். முனிவரும் தக்க புத்திமதிகளைக் கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார்.

ஒரு வனாந்தரத்துக்கூடாக நால்வரும் வரும்போது சிலகாலத்துக்கு முன்னர் இறந்துபோன ஒரு சிங்கத்தின் எலும்புக்கள் மட்டும் கிடப்பதைக் கண்டனர். தாங்கள் கற்ற வித்தைகளுக்கு ஒரு பரிசோதனை பார்க்க அந்த நால்வரும் தீர்மானித்தனர். அவர்களில் ஒருவன் சிதைந்து கிடந்த சிங்கத்தின் எலும்புகளை எல்லாம் சேர்த்தெடுத்து சரியான படி பொருத்தினான். அப்போது சிங்கத்தின் எலும்புக்கூடு சீராக அமைந்திருந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

இரண்டாமவன் அந்த எலும்புக்கூட்டின் சதை, தசை நார்கள் ஆகியவை சேர்க்கப்படுவதற்கு மந்திர உச்சாடனம் செய்தான். அப்போது சிங்கம் உண்மையான ஒரு சிங்கம் போல் தோற்றமளித்தது. மூன்றாமவன் சிங்கத்தின் உடலுக்கு வேண்டிய இரத்தத்தை தனது மந்திர சக்தியால் ஊட்டினான்.

நாலாமவன் யாகம் செய்வதுபோல் ஓம குண்டம் வளர்த்து சிங்கத்துக்கு உயிர் உண்டாவதற்கேற்ற மந்திரங்களை உச்சாடம் செய்தான்.

இதன் பின்னர் சிங்கம் உயிருடன் எழுந்து நின்றது. தன்னெதிரே நான்கு மனிதர்கள் நின்று கொண்டிருப்பதைக் பார்த்தது. சிங்கத்தின் இயல்பான குணத்தை அறிந்திருந்தவர்கள் என்ற போதிலும், தங்களால் உருவாக்கப்பட்டு உயிருட்டப்பட்ட சிங்கம் தங்களை எதுவுமே செய்யாது என்று அவர்கள் கருதினார்கள். தங்கள் மந்திரம் பலித்து விட்டதையெண்ணி மகிழ்ச்சியுடன் சிங்கத்தைச் சுற்றிக் கூத்தாடினார்கள் சிங்கத்துக்கு இவர்களுடைய கூத்தைப் பார்க்கவும் கோபம் வந்துவிட்டது போலும். ஒருவர் பின் ஒருவராக அவர்களை அடித்துக் கொன்று அவர்களைத் தனது உணவாக்கிக் கொண்டது.

இவ்வாறு கதையை கூறிமுடித்த வேதாளம் "மாமன்னரே! சிங்கம் நால்வரையும் கொன்றதற்கு யார் காரணகர்த்தா?" என்று கேட்டது.

இதற்கு விடையாக விக்கிரமாதித்தன், "சிங்கம் ஒரு கொடிய விலங்கு. அதற்கு நல்லவர்கள்; கெட்டவர்கள், தனக்கு உயர் கொடுத்தவர்கள் என்றெல்லாம் ஆராய்ந்தறிந்து பார்க்க அறிவில்லை. தனக்கு முன் வரும் உயிர்களை அடித்துக் கொன்று புசிப்பதற்கு மட்டும் தான் அதற்குத் தெரியும். ஆகவே அத்தகைய ஒரு கொடிய விலங்குக்கு உயிர் கொடுத்தவனால் தான் நால்வரும் அந்தப் சிங்கத்திற்கு பலியானார்கள்." விக்கிரமாதித்தன் சொன்ன இந்த விடையைக் கேட்ட வேதாளம் கீழே குதித்து ஓடிச்சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

வேதாளத்தைத் தொடர்ந்து ஓடிச்சென்ற விக்கிரமாதித்தன் மரத்தின் மீதேறி அதனைப் பிடித்துக் கட்டி தன் முதுகின் மீது சுமந்த வண்ணம் நடந்தான். அப்போது வேதாளம் பதினாறாவது புதிர்கதையைச் சொல்லத் தொடங்கியது.

### பதினாறாவது கதை

தெய்வசாமி என்றொரு ஆலய பூசகர் இருந்தார் அவருக்கு அர்ச்சுனசாமி என்றோர் மகன் இருந்தான். அவனுக்கு அநாமதி என்ற பெயருடைய அழகான பெண்ணை மணமுடித்து வைத்தனர். தம்பதியினர் இருவரும் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்தி வந்தனர்.

ஒரு நாள் பௌர்ணமி அன்றிரவு தங்களுடைய இல்லத்தின் மொட்டை மாடியில் கணவனும் மனைவியும் படுத்துத் தூங்கினர்.

வானத்தில் பறந்து கொண்டிருந்த ஓர் அரக்கன் தற்செயலாக மொட்டை மாடியில் படுத்திருந்த அழகிய பெண்ணான அநாமதியையைக் கண்டு ஆசை வைத்தான். கீழே இறங்கி வந்து அர்ச்சுனசாமிக்குத் தெரியாமல் அநாமதியைக் கூட்டிச் சென்று விட்டான். காலையில் தூக்கம் கலைந்து எழுந்திருந்த அர்ச்சுனசாமி தன்னருகில் மனைவியைக் காணாமல் திகைத்தான். எங்கெல்லாமோ தேடினான். ஆனால் அவன் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. அயலிலுள்ள ஊர்களுக்கு எங்காவது சென்றிருக்கக் கூடும் என்று எண்ணி அந்த ஊர்களுக்குகெல்லாம் சென்று விசாரித்தான் ஆனாலும் அநாமதியைப்பற்றிய தகவல் எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. எனவே அடுத்த ஊரிலாவது சென்று தேடிப்பார்க்கலாம் என்று புறப்பட்டான்.

அந்த ஊருக்குச் சென்ற அர்ச்சுனசாமி தனது நண்பனான பத்மநாபன் என்ற பிராமணனை அணுகினான். தன்னுடைய துயரக் கதையை அவனிடம் சொல்லி அழுது புலம்பினான். பத்மநாபன் அர்ச்சுனசாமியைத் தேற்றி தன் வீட்டிலேயே தங்கிருந்து அநாமதியை இருவரும் தேடலாம் என்று ஆறுதல் கூறினான். அடுத்த நாள் அர்ச்சுனசாமி தனியாகவே புறப்பட்டுச் சென்றான். அவனுக்கு

## இராஜகுமாரன்

மதிய உணவு தயாரித்து ஒரு பொட்டலமாகக் கட்டி பத்மநாபனின் மனைவி அர்ச்சுனசாமியிடம் கொடுத்தனுப்பினாள்.

மதியம் வரை அர்ச்சுனசாமி பல இடங்களிலும் அலைந்து திரிந்தான். களைப்பு ஏற்பட்டமையினால் ஆற்றக்கரையிலுள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்து உணவை உண்பதற்காகப் பொட்டலத்தைப் பிரித்தான். இதே வேளையில் அவன் அமர்ந்திருந்த மரத்தின் கிளையின் மீது ஒரு கருடன் ஒரு பாம்பினைப் பிடித்தக்கொண்டு வந்து அதனை உண்பதற்குத் தயாராகிக்க கொண்டிருந்தது. அப்போது அந்தப் பாம்பின் வாயில் இருந்து விஷப்பல் உடைந்து விஷம் கீழே கொட்டியது. அவை நேராக அர்ச்சுனசாமி வைத்திருந்த உணவிலே விழுந்து விட்டது.

*(மன்னன் வருவான்...)*

# குடி ஜோக்ஸ்



குடிபோதையில் இருந்த ஒருவன் மிக உற்சாகமாக ஓடி வந்து,

"ஹாய் பிரண்ட்ஸ்! எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. சொக்கலேட் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று சொக்கலேட் பெட்டியை நீட்டினான்.

உடனே அவனது நண்பன்,

"என்னடா உளறுகிறாய். நான் மட்டும் தானே இருக்கிறேன். எல்லோரும் எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறாயே?" என்று கேட்டான்.

உடனே, இவன் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு,

"அடக் கடவுளே! என் மனைவிக்குப் பிறந்திருப்பது இரட்டைக்குழந்தைகள் தானா என்பதை முதலில் தெளிவாகப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று திரும்பி ஓடினான்.



சர்தார்ஜி ஒருவர் தன் நண்பரிடம்,

"இன்று ஒரு நல்ல காரியம் செய்தேன்!" என்றார்.

உடனே நண்பன்,

"என்ன செய்தாய்?" என்று கேட்டார்.

"நான் ரோட்டில் போய்க்கொண்டிருந்த பொழுது ஒருவன் பயந்து நடுங்கியபடி உட்கார்ந்திருந்தான். அவனிடம் நான் "என்ன நடந்தது?" என்று கேட்டேன். "பாம்பு கடித்து விட்டது" என்றான் அவன். சரி பயப்படாதே. என்னிடம் தரமான விஸ்கி இருக்கிறது குடி என்றேன்!" என்று சொல்லி நிறுத்தினார் சர்தார்ஜி.

அதற்கு நண்பர்,

"சரியாகி விட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை. அவன் சாகும் போது சந்தோஷமாகச் செத்தான்!" என்றார் அந்தச் சர்தார்ஜி.



ஒரு நாட்டுக்கு அயல் நாட்டுத் தலைவர் ஒருவர் விஜயம் செய்திருந்தார். அப்போது அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அடுத்தடுத்து 24 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

முழக்கங்கள் முடிவடைந்ததும் அங்கு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த 'குடி' மகன் ஒருவர், அருகில் நின்றவரைப் பார்த்து,

"எதற்காகச் சுட்டார்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அருகில் நின்றவர்,

"வெளிநாட்டுத்தலைவர் ஒருவர் வந்திருக்கிறார்!" என்றார்.

"அது சரி.... ஒரே தடவையில் குறி தவறாமல் பார்த்துச் சுடத்தெரியாதா?" என்று கேட்டார் அந்தக் 'குடி' மகன்.



கப்பல் ஒன்றின் தலைவன் உதவித் தலைவனை அழைத்தான். உதவித் தலைவன் வேலை நேரத்தில் குடித்திருப்பதைப் பார்த்ததும் கோபம் கொண்டு, அலுவலகக் குறிப்பில்,

'இன்று உதவித் தலைவன் குடித்து விட்டு அட்டகாசம் செய்தார்' என்று எழுதினான்.


போதை தெளிந்ததும் தலைவனிடம் வந்து, "நான் குடித்தது இதுதான் முதல் தடவை. இனிமேல் குடிக்கமாட்டேன். குறிப்பில் எழுதியிருப்பதை வெட்டி விடுங்கள்" என்று கூறினான் உதவித் தலைவன்.

"குறிப்பேட்டில் உண்மையைத்தான் எழுத வேண்டும். எழுதியதை வெட்டவும் முடியாது என்று கப்பல் தலைவன் மறுத்து விட்டான்.

அடுத்த நாள் கப்பலை இயக்கும் முறை உதவித்தலைவனுக்கு வந்தது. அவன் வந்து, அலுவலகக் குறிப்பில்,

'இன்று கப்பல் தலைவன் சிறிது கூடக் குடிக்கவில்லை. ஆனால் நேற்றுக் குடித்தாரா என்று எனக்குத் தெரியாது?' என்று எழுதிவிட்டான்.






பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகளாமின்னிப்பேசுகின்றன.
கிளை: 106, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lepl.com/arul
436337


## அலங்கரிப்பு



→ மனிதர்கள் மட்டும்தான் அழகுராணிப் போட்டியிலும் ஆணழகுப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம் என்று சட்டமா? நாய்களும் அழகுப் போட்டியில் கலந்து கொள்கின்றன.

கொரிய நாட்டின் நாய் விற்பனை மற்றும் நாய் பராமரிப்பு நிறுவனம் ஒன்று அண்மையில் சிறு வளர்ப்பு நாய் அலங்கார அழகுப் போட்டியொன்றை நடத்தியது.

அப்போட்டியில் பல நூற்றுக் கணக்கான நாய்கள் கலந்து கொண்டன. அழகுப் போட்டியில் கலந்து கொண்ட நாய்களை அவற்றின் சொந்தக்காரர்கள் சீவிச் சிங்காரித்திருந்தனர்.

நாய் அழகுப் போட்டியில் முதலிரு இடங்களைப் பெற்ற அழகு நாய்களே இவை. அழகு நாய்களின் அருகில் இருப்பவர்கள், அவற்றின் சொந்தக்காரர்கள்.

(பட உதவி: அறுமட நியால-கொரியா).





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


↓ கடந்த ஜூலை மாதம் ஒஸ்ட்ரியா கிறான் பிறி அனைத்துலக மோட்டார் போட்டி நடைபெற்றது. இத்தகைய பன்னாட்டு ஓட்டப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி வெற்றிவாகை சூடிய மைக்கேல் ஷுமாச்சர், உன்னதமாக தனது வாகனத்தை ஓட்டி வந்த போதிலும் இடையில் எதிர்பாராத ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டார். றிக்கார்டோ ஸொன்டா என்ற மற்றொரு போட்டியாளரின் வண்டி ஷுமாச்சரின் வண்டியில் இடித்து விட்டது. இதனால் அவர் தடுமாறித் தளம்பிப் போய்விட்டார். அவருக்குரிய ஓடு தளத்தையும் மாற்றிக் கொண்டார். ஓடு பாதையில் செயலற்றுக் கிடந்த வண்டியை கிரேன் மூலம் அகற்றினார்கள்.

"இந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் எனக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்த போதிலும், அதற்காக றிக்கார்டோ ஸொன்டா மீது நான் பழியைப் போட மாட்டேன். ஏனெனில் இத்தகைய சம்பவங்கள் இப்போட்டிகளில் நடப்பது சகஜமானவை. ஸொன்டாவை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் வேண்டுமென்றே இவ்வாறு செய்திருக்கமாட்டார்!" என்று தன்னை அணுகிய செய்தியாளர்களிடமும், அனுதாபம் தெரிவிக்கத் திரண்டிருந்த அவருடைய இரசிகர்களிடமும் கூறிக் கொண்டு ஓடுபாதையை விட்டு மெதுவாக நடந்து சென்றார்.

## சேகரிப்பு



↑ புதியது பொருட்களுக்கு மவுசு இருப்பதைப் பார்க்கிலும் முன்னர் பாவித்த பழைய பொருட்களுக்கு மதிப்பு அதிகம்.

இளவரசி ஐறா வொன் ஃபுறான்ஸென்பேர்க் லொண்டிக்கார்லோ ஹொட்டல் ஹெர்மிடேஜில் அண்மையில் ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தார். உலகின் பல பாகங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட பலதரப்பட்ட பழைய பொருட்களைத் திரட்டி இக்கண்காட்சியில் பார்வையாளர்களைப் பரவசமூட்டும் வகையில் வைத்திருந்தார்.

பவளம், முத்து ஆகியவற்றைப் பதித்த ஆபரணங்கள் மற்றும் கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட பொம்மைகள் தளபாடங்கள் போன்றவையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இளவரசி ஐறாவுக்கு 57 வயதாகிறது. இவர் மொடல் அழகியாகவும் நடிகையாகவும் இருந்தவர். அத்துடன் எழுத்துத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார். இவருடைய முன்னாளைய நண்பரான இளவரசர் றெனியர் மற்றும் அவருடைய மகன் இளவரசர் அல்பேர்ட் ஆகியோரும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விசேட விருந்தினர்களாக இளவரசி ஐறாவினால் அழைக்கப்பட்டிருந்தனர்.

## தண்டனை




## போஸ்



↑ சீனாவில் மக்கள் இரசனை மாறிக்கொண்டே வருகிறது. சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள பூங்கா ஒன்றில் இரு சிறார்கள் போஸ் கொடுத்துக் கொண்டு நிற்பது இராட்சத டைனோசர் உருவத்திற்கு முன்னால்.

பூங்காவிற்கு இந்த டைனோசரைப் பார்ப்பதற்கென்றே சிறார்கள் படையெடுக்கிறார்கள். அப்படி என்னதான் இந்த டைனோசரில் விசேஷம் இருக்கிறது என்கிறீர்களா?

இராட்சத உருவத்தில் இருப்பது மட்டுமன்றி இந்த டைனோசரால் தலையைத் திருப்பி அசைய முடியும். அது மட்டுமன்றி பெரிதாகச் சத்தமும் எழுப்ப முடியும்.

கம்யூனிசக் கொள்கையில் ஊறித் திளைத்த சீனாவில் இப்போது மேற்கத்தைய இரசனையும் நுழையத் தொடங்கி விட்டது.

## பிறந்தநாள் வாழ்த்து



மண்டைதீவு மானிப்பாயைச் சேர்ந்த நீவாஜன் ஞானசெளரி தம்பதிகளின் புதல்வர்கள் ஸ்ரீ-அபிஷா 31.08.2000 அன்று தனது முதலாவது பிறந்தநாளையும் ஸ்ரீ-விதுஷன் 02.09.2000 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளையும் Landau (Germany) இல் உள்ள தமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, வவுனியா அப்பம்மா,

ஸ்ரீ-விதுஷன் 02.09.2000 ◆ ஸ்ரீ-அபிஷா 31.08.2000

மானிப்பாய் அம்மப்பா, அம்மம்மா, கோண்டாவில் பாட்டி, பெல்ஜியம் வசந்தன் பெரியப்பா, ஜேர்மன் பாலன் சித்தப்பா, வசா சித்தி, தங்கை ஆரணி, தயாளன் பெரியப்பா, கொழும்பு நந்தன் மாமா, மானிப்பாய் நிஜந்தி அன்ரா, கிளிநொச்சி மாமா ஜெயா அத்தை, பிரணவன் மச்சான், இந்தியா மனோகர் சித்தப்பா, லண்டன் வதி அம்மம்மா, நீசன்மாமா ஜேர்மனி பாஸ்கர மாமா, அத்தை, லக்ஷன் மச்சான், ஆதவி மச்சாள், மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் மானிப்பாய் மருதடி விநாயகர் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழகவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: வீ.ப பரணீதரன், கொழும்பு